பக்கம் 14

32 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 232 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 32, புதன் 16.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



பொதுக் கிணற்று நீ
பக்கம் 13


32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



சுடுகாடாகின்றது காஸா 7


இலங்கை குறித்து பா.ஜ.கவின் அணுகுமுறை அதிர்ச்சி தருகிறது 8


கிண்ணத்தை தன் வசமாக்கியது மானிப்பாய் ஏஞ்சல் பாடசாலை 17


கோட்ஸேயால் கூட நம்ப முடியவில்லை 18





யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது கோரிக்கையை வலியுறுத்திய தாய் ஒருவர். (ந-21)

# ஐ.நா. குழுவின் விசாரணைகள் நேற்று ஆரம்பம்

ஒஸ்லோ, ஜூலை 16
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு, ஒஸ்லோவில் நேற்றுத் தனது விசாரணைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது என்று அறியமுடிகின்றது.
குறித்த விசாரணைக்குழு இலங்கை வருவதற்கு அரசு அனுமதி மறுத்திருந்தது. ஆயினும் தமக்கு அனுமதி வழங்கப்படாதுவிடினும் நம்பகமான வழிமுறைகள் ஊடாக இலங்கைக்கு வெளியே இருந்துவிசாரணைகள் நடை பெறும் என்று விசாரணைக் குழு அறிவித்திருந்தது. இந்த நிலையிலேயே நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் தனது விசாரணைகளை, உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது விசாரணைக்குழு.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹாநாமஹேவா,
“13 பேரடங்கிய ஐ.நா. விசாரணைக்குழுவொன்று ஒஸ்லோவில் சாட்சியங்களைத் திரட்டி வருகின்றது என்று அறியமுடிகின்றது. புலித்தேவன், நடேசன் போன்றோர் உயிரிழந்தமை தொடர்பில் அவர்கள் ஆராயக்கூடும்.”- என்று தெரிவித்துள்ளார்.
இந்த விசாரணைக் குழு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வில் முதற்கட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் அமர்வில் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்கும். (ந-5)

## இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்றிணைந்தன வடக்கும் தெற்கும்

### யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று பெரும் கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
மீள்குடியமர்வு, இராணுவத்தினரின் காணி அபகரிப்பு, காணாமற்போனோர் பிரச்சினைகள், மீனவர் பிரச்சினைகள் ஆகியவற்றை முன்னிறுத்தி நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பெரும் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டனப் பேரணிக்கு நீதிமன்றம் ஊடாகப் பொலிஸார் தடை விதித்ததை அடுத்தே, நேற்றுக் அந்த இயக்கத்தால் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.


படங்கள் 2 ஆம் பக்கத்தில்


இந்தக் கூட்டத்தில் வடக்கைச் சேர்ந்த மக்களும் தெற்கைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அத்துடன் இந்தக் கண்டனக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாக்ஸிச லெனினிச புதிய ஜனநாயகக் கட்சி என்பனவும் ஆதரவு வழங்கின.


22 ஆம் பக்கம் பார்க்க


### 4 பேருக்கு ஒரே நாளில் டெங்கு தாக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
நேற்றுமுன்தினம் மட்டும் 4 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதற்கு முதல் நாள் இருவர் அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இந்த மாதத்தில் – நேற்று வரையிலும் 27 பேர் டெங்குத் தாக்கத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 52 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த வருடத்தில் நேற்றுவரை 389 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர். (ந-4)

### மனித உரிமை ஆணையாளர்கள் வடக்குக்கு வருகின்றனர்


யாழ்ப்பாணம், ஜூலை 16
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் வடக்கு மாகாணத்துக்கு 5 நாள் பயணமாக நாளை வியாழக்கிழமை வருகை தரவுள்ளனர் என்று தெரிய வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பித்துள்ள சூழலில், வடக்கின் மனித உரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, மனித உரிமை கள் ஆணையாளர்கள் வடக்குக்கு வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


22 ஆம் பக்கம் பார்க்க


## முதலமைச்சர்கள் கூட்டத்தில் பங்கெடுக்கப் போவதில்லை

### வடக்கு முதலமைச்சர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 16
இந்த மாத இறுதியில் ஜனாதிபதி தலைமையில் இடம் பெறும் முதலமைச்சர்களின் கூட்டத்தில் பங்கெடுக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். கடந்த ஜனவரி மாதம், ஜனாதிபதியுடனான சந்திப்பில் வழங்கப்பட்ட பத்து உறுதிமொழிகளில் எவையுமே நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில், வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறியீன் பதவி நீடிப்புக் குறித்து பிரஸ்தாபிக்கபபட்டது. அதன்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
“ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் இடம்பெற்ற சமயத்தில், முதலமைச்சர்களின் மாநாடு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் அது நடைபெறவில்லை. எனவே எனக்கு



அதற்குப் போக வேண்டிய தேவை இருக்கவில்லை.


22 ஆம் பக்கம் பார்க்க



வடமாகாண சபையில் நேற்று நிறைவேறின 3 பிரேரணைகள்
பக்கம் 03


## பல்கலைக்கழக வழக்கு ஓகஸ்டில் மீள்விசாரணை

### பதிலளிக்க அவகாசம் கோரியது சட்டமா அதிபர் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட உதவி விரிவுரையாளர் நியமனத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளது என்றும், குறித்த நியமனத்தை இடைநிறுத்துமாறும், இரத்துச் செய்யுமாறு கோரியும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்


22 ஆம் பக்கம் பார்க்க


## நியதிச் சட்டங்கள் குறித்த பரிந்துரை அடுத்த வாரம்

### கடிதம் மூலம் ஆளுநர் அறிவித்துள்ளாராம் வடமாகாண சபை அவைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 16
நியதிச் சட்டம் தொடர்பான பரிந்துரைகள் அடுத்த வாரம், வடக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடிதம் மூலம் அறிவித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.
நியதிச் சட்டம் தொடர்பிலான விவாதம் மூன்றாவது தடவையாகவும் வடக்கு மாகாண


22 ஆம் பக்கம் பார்க்க


## பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் பார்வையாளருக்கும் இடையே மோதல்

### யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக் களேபரம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், நோயாளர்களைப் பார்வையிடச் சென்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.
நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ் நடைமுறை உள்ளது. இந்தநிலையில் பாஸ் இல்லாது இருவர்


22 ஆம் பக்கம் பார்க்க



தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டோர்.

# ஆளுநரின் நியமனத்தை மீள்பரிசீலனை செய்க ஜனாதிபதியிடம் கோருகிறது வடமாகாண சபை

யாழ்ப்பாணம், ஜுலை 16

வடக்கு மாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை நியமித்ததை, வடக்கு மாகாண மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது வடக்கு மாகாண சபை.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்விலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பிரேரணைகள் மீதான விவாதத்தைத் தொடர்ந்து, இந்த விவாதம் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் இதுகுறித்துத் தெரிவிக்கையில்;

"வடக்கு மாகாணசபையின் 30 உறுப்பினர்கள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் நியமனத்தை எதிர்க்கின்றனர். எஞ்சிய எதிர்கட்சி உறுப்பினர்கள் 8 பேரும் எதிர்க்கவில்லை என்று அர்த்தமில்லை. அவர்களும் உள்ளுக்குள் எதிர்க்கின்றனர். ஆனால் வெளியில் சொல்ல முடியாதவாறு தர்மசங்கடமான நிலையில் உள்ளனர்.

எமது மாகாணத்துக்கு ஆளுநர் தேவையா என்ற விவாதம் ஒரு புறம் இருக்க, நாம் தமிழ் ஆளுநரை நியமிக்குமாறோ, எமது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்குமாறோ கோரவில்லையே. மாறாக அவர் தென்னிலங்கையில் பிறந்தவராக இருந்தாலும், பௌத்த சமயத்தை பின்பற்றுகின்றவராக இருந்தாலும் எப்படியிருந்தாலும் சிவில் பின்னணி கொண்ட ஒருவரையே ஆளுநராகக் கேட்டிருந்தோம். எவ்வளவோ விட்டுக் கொடுப்புடன் நாம் முன்வைத்ததைக் கூட ஜனாதிபதி தரத் தயாரில்லை. தமிழ் மக்களை வெறுப்பூட்ட வேண்டும் என்பதற்காக, தமிழ் மக்களின் அங்கீகாரத்தை புறந்தள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றார்கள்.

இப்படியான ஜனாதிபதிக்கு கீழே தான் தமிழருக்கு தீர்வு கிடைக்கும் என்று தமிழ்த் தலைவர்கள் சிலர் சொல்லித் திரிகின்றனர். அவர்களை தமிழ்த் தலைவர்கள் என்றேசொல்ல முடியாது. வடக்கு மாகாண சபைக்கு ஏதோ எல்லா அதிகாரங்களும் கிடைத்துவிட்டது. ஆனால் அதனைக் கொண்டு நடத்த முடியாதவர்களாக முதலமைச்சரும், அமைச்சர்களும் இருக்கின்றார்கள் என்று சொல்லித் திரிகின்றார்கள். எமக்கு கிடைத்த சொற்ப அதிகாரங்களைக் கொண்டே வடக்கு மாகாண சபையை நடத்த விடாமல் இந்த அரசு முட்டுக் கட்டை போட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த முட்டுக்கட்டையை தொடர்ந்து போட வேண்டும் என்பதற்காகவும், வடக்கு மாகாணசபையை முற்றாக முடக்க வேண்டும் என்பதற்காகவுமே ஆளுநர் சந்திரசிறியின் நியமனத்தை நீடித்திருக்கின்றனர்.

இது தொடர்பில் விவாதம் நடத்த எங்களை சிலர் ஊடகங்கள் வாயிலாக அழைத்திருந்தனர். நாங்கள் அவர்களின் சவாலை ஏற்றுக் கொள்கின்றோம். எப்போது எங்கே என்பதைச் சொல்லுங்கள். நாங்கள் விவாதத்திற்கு வருகின்றோம்.

ஜனாதிபதி முன்பாக சத்தியப் பிரமாணம் எடுத்தது மட்டுமல்லாமல், அவருடன் சந்தித்துப் பேசியிருக்கின்றார் எங்கள் முதலமைச்சர். அவர் வெளிக்காட்டிய நல்லிணக்கத்தைக் கூட இந்த அரசு பற்றிக் கொள்ளவில்லை.

ஜனாதிபதி எங்கள் முதலமைச்சருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதற்கு என்ன சொல்லப் போகின்றார் எங்கள் எதிர்கட்சித் தலைவர். மௌனத்தை விடுத்து பகிரங்கமாக பதிலளியுங்கள். சரியான மனிதர் தவறான இடத்தில் இருந்தால், அவரும் தவறாகிப் போவார் - என்றார் கஜதீபன்.

மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் உரையாற்றுகையில்; வடக்கு ஆளுநராக சிவிலியன் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லோரும் ஆதரவளித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் அர்த்தம் வடக்கின் ஒட்டுமொத்த மக்களும், சிவில் ஆளுநரையே விரும்புகின்றனர் என்பது தான்.

வடக்கின் ஒட்டுமொத்த மக்களது எதிர்பார்ப்புக்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புறந்தள்ளியிருக்கின்றார். இது அவரது இழிவான செயற்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றது. வழக்கம்போல் அவர் கொடுத்த வாக்குறுதிகளை மீறியிருக்கின்றார். முதலமைச்சருக்கு கொடுத்த வாக்குறுதியையே மீறும் ஜனாதிபதியை சாதாரண குடிமகன் எப்படி நம்புவது?

வடக்கு மாகாண சபையை முடக்கப் பொருத்தமானவர் இவர் என்பதாலேயே இவரது பதவியை நீடித்துள்ளனர் என்றார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா உரையாற்றுகையில்;

"வடக்கு மாகாண ஆளுநரை மாற்றுவதற்கு சட்டத்தில் ஏற்பாடு இருக்கின்றது. அதனை முறைப்படியாக செய்ய வேண்டும். அவர் மீதான குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் கொண்டு வந்தால் அவரை மாற்றுவதற்கு நாங்களும் ஆதரவளிக்கின்றோம்.

ஜனாதிபதியுடன் ஓர் தடவை மாத்திரம் இணக்கமாக நடந்து விட்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். முதலமைச்சர் சார்ந்த கட்சி அவ்வாறு தொடர்ந்தும் சகல விடயங்களிலும் இணக்கமாகச் செயற்பட்டிருந்தால், மேற்படி விடயத்தை எதிர்பார்க்க முடியும்" என்று குறிப்பிட்டார். (ற-5)

# முல்லை பிரதேச செயலர்களின் ஊழல்களை வட மாகாண சபையில் அம்பலப்படுத்துவேன்

## பிரதி அவைத் தலைவர் நேற்று உரை

யாழ்ப்பாணம், ஜுலை 16

பிரதேச செயலாளர்களின் மோசடிகள் தொடர்பில் நாம் கேள்வியெழுப்புவோம் என்று அஞ்சியே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு எமக்கு அவர்கள் கடிதம் அனுப்பவில்லை. பிரதேச செயலாளர்களின் மோசடி தொடர்பில் வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் தெரியப்படுத்துவேன் என்று வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை.

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வு இடம்பெறும் அதேவேளையில் கரைத்துறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறுகின்றது. ஒரே நாளில் அதுவும் மாகாணசபை அமர்வு இடம்பெறும் வேளையில் இவ்வாறு மூன்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் நடத்துவதன் நோக்கம், முல்லை மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் பங்கெடுக்கக் கூடாது என்பதுதான்.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் என்னையும், து.ரவிகரனையும் மாத்திரம் அழைத்துள்ளார். புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், சி.சிவமோகன், வீ.கனகசுந்தரசுவாமி, திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோரை மாத்திரம் அழைத்துள்ளார். நாம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பொதுவானவர்கள். எங்களை தனித்து ஒரு பிரதேசசெயலகத்துக்கு மாத்திரம் அழைப்பது ஏற்புடையதாகாது.

மேலும், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர், தனது பகுதிக்குட்பட்ட சகல திணைக்களத் தலைவர்களுக்கும் கடந்த 9 ஆம் திகதியே கடிதம் அனுப்பிவிட்டார். ஆனால் எமக்கு 11 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தை 13 ஆம் திகதியே அனுப்பியுள்ளார். இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் 9 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தை 14 ஆம் திகதியே அனுப்பியுள்ளார்.

நாம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கெடுக்கக் கூடாதென்பதே இவர்களின் ஒரே நோக்கமாக இருக்கின்றது. ஏனெனில் அவர்களின் ஊழல்களை நாம் அம்பலப்படுத்தி விடுவோம் என்று அஞ்சுகின்றார்கள். அவர்கள் அதற்கு எமக்குச் சந்தர்ப்பம் தராவிட்டாலும், அடுத்த அமர்வில் நான் பிரதேச செயலாளர்களின் ஊழல்களை இங்கு வெளிப்படுத்துவேன் - என்றார். (ஐ-5)

# மக்களின் உணர்வுகளை மாற்ற வடபகுதியில் தீய சக்திகள் திட்டம்

## குற்றஞ்சாட்டுகிறார் பாஸ்கரா

யாழ்ப்பாணம், ஜுலை 16

போருக்குப் பின்னர் மக்களின் சிந்தனைகளை மாற்றியமைக்கும் வகையில் இளைஞர்கள் மத்தியில் விரோதத்தையும் பகையுணர்வையும் சில தீய சக்திகள் உருவாக்கி வருகின்றன. இதற்குக் காரணம், மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்தை நினைக்கக் கூடாது என்பதே. இதில் இருந்து மக்கள் விழிப்படைய வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சி.பாஸ்கரா.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்டனக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் எமது பிரச்சினைகளை கொழும்பில் இருந்து பேசும் போது இனவாதிகள் என்கிறார்கள். நாம் மக்களின் பிரச்சினைகளைத்தான் பேசுகிறோம்.

> "நாங்கள் எமது பிரச்சினைகளை கொழும்பில் இருந்து பேசும் போது இனவாதிகள் என்கிறார்கள். நாம் மக்களின் பிரச்சினைகளைத் தான் போசுகிறோம்.

வட பகுதியைச் சிங்கள இராணுவமயமாக்கும் கொள்கையை அரசு நிறுத்தவேண்டும். கொழும்பில் எந்தப்பகுதிக்குச் சென்றாலும் பதிய வேண்டிய தேவையில்லை. ஆனால் யாழ்ப்பாணம் வரும் போது ஓமந்தையில் பதிய வேண்டும். வேறு சில இடங்களுக்கு செல்லவே முடியாது. இப்படியான நிலையே வடக்கில் இருக்கிறது.

30 வருடங்களாக நாங்கள் அந்நியர்களாகவே இருக்கின்றோம். எமது உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்படுகிறன.

எமது மக்கள் அகதி முகாம்களில் வாழும் போது அவர்களது காணிகளைச் சுவீகரித்து இராணுவத்தினர் நட்சத்திர விடுதிகள் கட்டுகிறார்கள். வடபகுதியில் கலாசார சீரழிவு போருக்கு பின்னர் திட்டமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய பங்காளிகளாக இராணுவத்தினர் உள்ளனர். அரசு இனவாதம், மதவாதம் என்று பேசிக்கொண்டே இருக்கிறது. இவை தூக்கி எறியப்பட்டால் மட்டுமே விடிவு கிடைக்கும். - என்றார். (ஐ-14)

# போரின்போது 84 ஆயிரம் ஆண்கள் பலியானதை அரசே உறுதிப்படுத்துகிறது

## சுரேஷ் எம்.பி. நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 16

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் 84 ஆயிரம் இளம் பெண்கள் கணவனை இழந்திருக்கின்றனர் என்று அரச புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் போரின் போது 84 ஆயிரம் ஆண்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அரசே ஒப்புக்கொள்கிறது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

யாழ் மாவட்டத்தில் ஏறத்தாழ 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீளக் குடியேற்றப்பட வேண்டியுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் இரண்டு லட்சம் இராணுவம் உள்ளது. அதில் வடக்கில் ஒன்றரை லட்சம் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். ஆனால் வடக்கு மாகாணத்தில் பத்து லட்சம் மக்கள்தான் இருக்கின்றார்கள். இந்த மக்கள் தொகைக்கு இவ்வளவு இராணுவத்தினர் தேவைதானா என்பதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

அவர்கள் வாழ்வாதாரத்துக்காகக் கடலுக்குத்தான் செல்ல வேண்டும். ஆனால் அவர்களது வீடுகளிலும் தொழிலிடங்களிலும் இராணுவம் குடிகொண்டுள்ளது. - என்றார். (ஐ-14)

பக்கங்கள்: முப்பத்திரெண்டு

Registered as a Newspaper

16 JUL 2014

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 32 புதன்கிழமை (16.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 232

# சிவிலியன் ஒருவரை வடக்குக்கு ஆளுநராக நியமிக்க வேண்டும்

## அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி அமைச்சர்கள் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 16**

**சிங்கள பௌத்த அடிப்படைவாத சக்திகளைச் சந்தோஷப்படுத்துவதற்காகவே அரசு, வடமாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் சந்திரசிறியை மீண்டும் நியமித் துள்ளது. வடக்கில் சிவில் ஆளுநர் ஒருவரை நியமிப்பதன் மூலமே, மாகாண சபைக்கும், மத்திய அரசுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். இவ்வாறு அரசில், அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.**

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண ஆகிய இருவருமே ஆளுநரின் நியமனம் தொடர்பில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகையில்; வடமாகாண ஆளுநராக சிவிலியன் ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமென்பதை அரசுக்குள்ளிருந்து கொண்டே நாம் வலியுறுத்தி வருகின்றோம். போர் முடிந்து 5 வருடங்கள் கடந்துவிட்டன. எனவே வடபகுதி தமிழ் மக்களுக்கு இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக இருப்பதை அந்த மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக மாட்டார்கள். இராணுவப் பிடியிலிருந்து விடுதலை பெற்று ஜனநாயக உரிமைகளோடு வாழ்கிறோம் என்ற மனநிலையைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பு. அதற்கு, சிவிலியன் ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்விடயத்தில் மீண்டும் பிழையான தீர்மானத்தை அரசு எடுத்திருக்கிறது - என்றார்.

அமைச்சர் திஸ்ஸ விதாரண,

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கடா வெட்ட பிரதேச சபை நிபந்தனையுடன் அனுமதி

வட்டக்கச்சி, ஜூலை 16

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நவாலி காத்தவராயன் ஆலயத்தில் கடாக்களை வெட்டுவதற்கு பிரதேச சபை அனுமதி வழங்கி உள்ளது. எனினும் அவற்றைத் தலை வேறு குடல் வேறாக வீதியில் எடுத்துச்செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடாக்களை அவ்விடத்திலேயே சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தி வெட்டி அங்கேயே பாதுகாப்பாக பொதியிட்டு வெளி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்படுகொலையை நிறுத்த அரசை வலியுறுத்த வேண்டும்

### தமிழ் சிவில் அமைப்புக்கள் பாப்பரசரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் என்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பாப்பரசர் பிரான்ஸிஸ் வலியுறுத்த வேண்டும் என்று தமிழ் சிவில் சமூக அமைப்பு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதியை யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் சந்தித்த போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி பேராயர் பியரி நயுகேன் வான் டாட் யாழ்ப்பாணத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணம் மேற்கொண்டிருந்தார். இதன் போது அவரை சிவில் சமூக உறுப்பினர்கள் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில், பாப்பரசரிடம் கையளிப்பதற்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண சபையில் நேற்று நிறைவேறின 3 பிரேரணைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு மாகாண சபையில் நேற்று 7 பிரேரணைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 3 பிரேரணைகளே அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன. ஏனைய 4 பிரேரணைகளும் அடுத்த அமர்வில் எடுத்துக்கொள்ளப்படுமென அவைத் தலைவர் அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 12 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. இந்த அமர்வில் 10 உறுப்பினர்கள் வரையில் பங்கு கொள்ளவில்லை.

வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் எமது மாணவர்களுக்கான பெரும் கல்விப் பங்களிப்பைச் செய்து வருகின்றன. இந்தச் சேவையை நாம் பாராட்ட வேண்டும். ஆனாலும் தனியார் கல்வி நிலையங்கள் பல, மாணவர்களின் இயற்கை உபாதையைத் தணிக்கக் கூடிய மலசல கூட வசதிகளை கொண்டிருக்கவில்லை. குடிதண்ணீர் வசதியும் ஏற்படுத்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச செயலரின் பெயரால் பெண் ஒருவர் பண மோசடி

யாழ்ப்பாணம், ஜூலை 16

தனது பெயரைப் பயன்படுத்தி யாழ்.நகரில் பண மோசடியில் பெண் ஒருவர் ஈடுபட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

நாவாந்துறையைச் சேர்ந்த சுதர்சினி என்ற பெயர் உடைய பெண் ஒருவர் எனது பெயரை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இரு வேறு விபத்துக்களில் நேற்று இருவர் சாவு; இருவர் படுகாயம்



பரந்தன் முல்லைத்தீவு வீதியில் இடம்பெற்ற விபத்து

வவுனியா, ஜூலை 16

கிளிநொச்சி, வவுனியா பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.

பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் கோரக்கன்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தந்தையார் உயிரிழந்தார். அவரது மகன் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து நேற்றுமுற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் சிலாவத்தை முல்லைத்தீவைச் சேர்ந்த சி.சண்முகநாதன் (வயது - 58) என்பவர் உயிரிழந்தார். அவரது

(22 ஆம் பக்கம் பார்க்க)

எந்த வகை விசா என்றாலும் 7 நாள்களுள் நடவடிக்கை இதுவே திசைகாட்டியின் நவீனத்துமான சேவை

- ஆஸ்திரேலியா குடும்ப விசா
- நியூஸிலாந்தில் படிக்க IELTS வேண்டாமே
- சுவிஸ், இத்தாலி, நோர்வே, ஜேர்மன் உட்பட 26 நாடுகளுக்கு செங்கன் விசா
- ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க ஒரு லட்சம் வரை உழைக்க கையிலுள்ள காசேபோதும்
- கனடாவில் படிக்க 3 வருடம் வரை உழைக்க இணைந்து மறுநாளே நடவடிக்கைகள் ஆரம்பம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212219016, 021 5689090 (50014)



## மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபருக்கு மணிவிழா

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கத்தின் மணி விழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சா. பாலசுப்பிரமணியம் தலைமையில் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரைகளை ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பிரம்மஶ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், அருட்பணி ஜஸ்ரின் டீ.ஞானப்பிரகாசம், அருட்பணி ஓ.று.ஜேம்ஸ் ஆகியோர் வழங்குவார்கள். வாழ்த்துரைகளை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வி அமைச்சின் செயலர் க.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்செ.சந்திரராஜா,பேராசிரியர்க.தேவராஜா,பேராசிரியர்எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன், கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் வழங்குவார்கள். (க)


**பதவி வெற்றிடம்**

நிர்மாணத்துறை நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. கணக்கியல் உதவியாளர் (HNDA, AAT or Equivalent
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (NCT - Civil)
03. கணிய அளவையாளர் (NCT - QS)
04. அலுவலக உதவியாளர் (A/Lபடித்திருத்தல் வேண்டும்)

உங்களது சுயவிவரக்கோவையை ஈமெயில் மூலமாக மூன்று (3) நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்

Email: vacancysc14@gmail.com (49999) (46.6.3)



**நீங்கா நினைவலைகள்**

பிறப்பு 03.04.1923

இறப்பு 11.08.1994





அன்னை மடியில் 10.06.1952

ஆண்டவன் நிழலில் 15.07.2006

திருமதி பாக்கியம் செல்லத்துரை திதி: பஞ்சமி
அவர்களின் இருபதாவது ஆண்டை நினைவு கூரும்
பிள்ளைகள், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.
"அன்னை நிழல்", செட்டியார்மடம், வட்டுக்கோட்டை. (49693)(3.6.4)

அமரர் செல்லத்துரை சிவபாதம்
அவர்களின் எட்டாக்கனியாகி விட்ட எங்கள் இதய ஜோதியின் எட்டாவது ஆண்டு நினைவு கூரும்
அக்காமார், அத்தான்மார், மருமக்கள்.
செ.தனலட்சுமி
077 621 8389


## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி வடக்கு குமரக்கோட்டம் முருகமூர்த்தி ஆலயத்தின் பெரும் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-9)

★ ★ ★

மீசாலை கிழக்கு காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.
எட்டாம் திருவிழாவன்று புனரமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெறும். மறுநாள் தேர்த் திருவிழாவும் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-9)

★ ★ ★

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். 1008 சங்குகளால் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று விசேட பூசை ஆராதனைகளுடன் அம்பாள் வீதியுலா வருவதுடன், அன்னதானமும் நடைபெறும். மாலை அம்பாள் அழகிய சாத்துப்படியுடன் வெளி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருளுவார். (க-28)

★ ★ ★

வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுரர் ஆலய அம்பாள் மஹோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 30ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

## இப்தார் நிகழ்வு இன்று

வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்புடன் சமூக சமய நல்லிணக்கத்துக்கான இப்தார் நிகழ்வு வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (க-421)


**தவறிவிட்டது**

நல்லூரைச் சேர்ந்த சிவசாமி ஐயர் இரவீந்திரசர்மா (491471565V), இரவீந்திரசர்மா நாகேஸ்வரராணி (526973755V), இரவீந்திரசர்மா செம்யா (917712441V) ஆகியோருடைய தேசிய அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 529 6389/021 222 1096

(49998)(12.3.6)


## மாணவர்களுக்கு பரிசில்கள்

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்தப்படும் ஆடிப்பிறப்பு கொண்டாட்டங்களின்போது பரிசில்கள் வழங்கப்படும் என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தெரிவித்தார். (க-402)

## சங்காபிஷேகம்

நாவற்குழி சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் மணவாளக் கோல தின சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெறவுள்ளது. இன்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் வள்ளி தேவசேனாசமேதர முத்துக்குமாரசுவாமிக்குத் திருக்கல்யாணம் இடம்பெற்று 5 மணியளவில் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (க)


**MULTIMEDIA**

கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை

WIN 65% Scholarship test on

July 19th & 20th

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- அடிப்படைத் தகைமை Grade 10
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்

CSC-ASIAN

COMPUTER EDUCATION

AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்.நகரில் (C/15407) 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677



# 25வது வீரமக்கள் தினம்

**13.07.2014-16.07.2014**



அமரர்.அ.அமிர்தலிங்கம்

செயலாளர் நாயகம் - தமிழர் விடுதலைக் கூட்டணி





அமரர்.தோழர்.க.உமாமகேசுவரன்

செயலதிபர் - புளொட்

# "ஒற்றுமையே பலம்"

விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த கழகக் கண்மணிகள், அனைத்துப் போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

குறிப்பு: 16.07.2014 (புதன்கிழமை) அன்று காலை வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேசுவரன் நினைவு இல்லத்தில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறும். (C/14632)

**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**

# பருத்தித்துறையில் நாய்களுக்கு தடுப்பூசி

வடமராட்சி, ஜூலை 16

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விலங்கு விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்துகள் வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது புலோலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இருக்கும் சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது இடங்களில் வைத்து ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

குறித்த பிரிவில் செம்பியன்பற்று, மருதங்கேணி, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்க்கடி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

இனிமேல் அம்பன், பருத்தித்துறை, அல்வாய், வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாக இந்தப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-173)

# அனுமதியை வழங்குமாறு அமைச்சரிடம் வேண்டுகோள்

## உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு

கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் அ.த.க.பாடசாலையில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு வடமாகாண கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு வருகை தந்த அமைச்சர் த.குருகுலராஜாவிடம் பெற்றோர் நேரில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் சுமார் 800 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். தென்கொரிய அரசின் நிதியுதவியுடன் புதிய கட்டடங்கள் நவீனமுறையில் அமைக்கப்பட்டுள்ளன.

1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் இந்தப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டு மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞானகூடமும் அமைக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தர கலை, வர்த்தக வகுப்புகளில் கற்பதற்குத் தகுதியடைந்துள்ளனர். ஆகவே உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமாகாண கலாசாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் அரியாலை கிழக்கு பிருந்தாவனம் கலைமன்றம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் செ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணாளினி விஜயரட்ணம், நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனிகுமாரசிங்கம் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். (க)

# தபாலக சிற்றூழியர்; இன்று நேர்முகம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள், உப தபாலகங்கள் ஆகியவற்றில் வெற்றிடமாக உள்ள சிற்றூழியர் சேவையில் பதிலீட்டு ஊழியர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (ஒ-122)


ஏழாலை தெற்கு, களபாவோடை
அருள்மிகு வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
வருடாந்த லட்சார்ச்சனைப் பெருவிழா
(3 நாள்கள்)

ஜய வருஷம் ஆடி முதலாம் நாள் (17.07.2014) வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை நடைபெற்று. தொடர்ந்து சுவாமி வீதியுலா.
ஆடி 2ஆம் நாள் 18.07.2014 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை நடைபெற்று தொடர்ந்து சுவாமி வீதியுலா.
ஆடி 3ஆம் நாள் 19.07.2014 சனிக்கிழமை காலை சங்காபிஷேகம் பூஜை சுவாமி வீதியுலா
(3 நாள்களும் அன்னதானம் இடம் பெறும்)

பிரதம குரு:
கலாநிதி சிவஶ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் (புன்னாலைக்கட்டுவன்) அவர்கள்

லட்சார்ச்சனை சிறப்புற ஆசி வழங்குபவர்
சிவஶ்ரீ தா மகாதேவக் குருக்கள் அவர்கள்
சாஸ்தா குருகுலபீடம், இணுவில்.

3 நாள்களும் நடைபெறும் இவ் விழாக்களில் அம்பிகை அன்னை அடியார்கள் அனைவரும் கலந்து அன்னையின் இஷ்ட சித்திகளைப் பெற்றின்புறுமாறு வேண்டுகின்றோம்.
தேவஸ்தானம்.
(49972)(5.6.3)

# பரிசுத் தினம்

சுழிபுரம், ஜூலை 16

சுழிபுரம் வடக்கு அமரர் யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை நடத்தும் பரிசுத் தினமும் அமரர் வி.சு.க. விமலன் சங்கர் ஞாபகார்த்த விசேட வருடாந்த விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அறநெறிப் பாடசாலை முன்றிலில் நடைபெறவுள்ளது. அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி சரோஜினி தேவி கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக து.குமார் (சிரேஷ்ட பிரதேச முகாமையாளர், யாழ்.இலங்கை வங்கி), சிறப்பு விருந்தினர்களாக திருமதி அகல்யா ஜனார்த்தனன்(இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கானை) சு.திருக்கேஸ்வரன்(அதிபர், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை), கி.ராஜ்கண்ணா(கிராம சேவையாளர், பனிப்புலம்) ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கு.பொன்னுத்துரை, க.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். ஆசியுரையை சிவஶ்ரீ சி.பிறைச்சூடிக்குரு வழங்குவார்.

நினைவுரையை சோ.தேவராசாவும் வாழ்த்துரையை திருமதி நாச்சியார் செல்வநாயகமும் வரவேற்புரையை சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதமும் நிகழ்த்துவார்கள். (க-28)

# பாடசாலைகளில் ஆடிக்கூழ் காய்ச்சி வழங்கல்

தென்மராட்சி, ஜூலை 16

ஆடிப்பிறப்பை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை வியாழக்கிழமை ஆடிக்கூழ் காய்ச்சி வழங்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளம் சமுதாயத்தினருக்கு ஆடிப் பிறப்பின் மகத்துவத்தை விளக்கிக் கூறும் சொற்பொழிவுகள், எமது மூதாதையர்கள் மேற்கொண்ட பண்பாட்டுச் சேவைகள் ஆகியவற்றை கதைகளாகவும் வர்ணனைகளாகவும் கூறி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று வடமாகாண கல்வி அமைச்சு விடுத்த வேண்டுகோளை அடுத்து அவை பாடசாலைகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் மாணவர்கள் மத்தியில் ஆடிப்பிறப்பு பற்றிய பேச்சு, கவிதை போன்றவையும் நடத்தப்படவுள்ளன. (வ-9)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அமைந்துள்ள சரஸ்வதிதேவி சிலைக்கு இன்று குடமுழுக்கு இடம்பெறவுள்ளது.

காலை 8.15 மணி தொடக்கம் 10 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இந்த வைபவம் இடம்பெறவுள்ளது. (க)

# நால்வர் திருக்கோவில் கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, ஜூலை 16

தெல்லிப்பழை ஶ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் விக்கிரகங்கள் தென் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு அவர்களுக்கான திருக்கோவில் அமைக்கப்பட்டு இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு நால்வர் திருவீதி வலம் வருதலும் பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி நிறைவு பெற்று அன்னதான நிகழ்வு இடம்பெறும் என்று தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் அறிவித்துள்ளார். (ஒ)

**தவறிவிட்டது**

கே.கே.எஸ்.வீதியில்பழம்பிள்ளையார் கோயிலுக்கு முன்பு மோட்டார் சைக்கிளில் இருந்த அலுவலகப் பையில் இருந்த முக்கிய ஆவணங்களுடன் பை தவறவிடப்பட்டுள்ளது. மீள ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:077 288 2784 (சி/14580) (5.6.3)

**மணமகன் தேவை**

30.06.1974 பிறந்த அரச தாதியராக (சைவ போசனம்) தொழில் புரியும், உயரம் 5'1'', பிறந்த நேரம் 6.48 காலை, கிரகபாவம் 49, நட்சத்திரம் விசாகம் பெண்ணிற்கு அரச உத்தியோகத்தில் உள்ள பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்பு: 077 905 9523 (சி.14674) (45.6.3)

**வீடு வாடகைக்குண்டு**

மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகும் வெள்ளாந்தெருவில் இருக்கும் மேல்மாடி 3அறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. தொழில் புரியும் (கணவன், மனைவி)குடும்பம் விரும்பத்தக்கது.
(50937) (12.3.6)
தொடர்பு: 077 789 3125

**பொமேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள் நிரம்பிய பூச்சிமருந்து கொடுக்கப்பட்ட பொமேரியன் நாய்க்குட்டிகள் (பிறவுண் கலர்) ஆண்,பெண் விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 040 5734 (சி/14560) (5.6.3)

யாழில்
டென்மார்க் பிரண்டாபதி ஶ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும்
ஆடிப்பூர விசேட பூஜையும்



வரமருளிக் காத்தருள்ள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஶ்ரீ அபிராமி அன்னையின் ஆடிப்பூர விசேட பூஜையும் அருள்ஒளி தர்சன மாலையும் இடம்பெற ஶ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஶ்ரீ அபிராமி உபாசகியின் ஆசியும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விளங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்லெண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம்
திவ்விய ஜீவன சங்க மண்டபம்
காலம் : 20.07.2014
ஞாயிற்றுக்கிழமை
பகல் 11.00 மணி

திருவருள் நிகழ்வுகள்:
- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆசியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு:
Tel: 0045 97180192, 0045 40413431
Fax: 0045 97184192
யாழ் தொடர்புக்கு: 077 699 3861, 077 982 5004
www.abiramiamman.dk
www.nisaart.com

இடம் : திவ்விய ஜீவன சங்க மண்டபம் காலம் : 20.07.2014 ஞாயிற்றுக்கிழமை

மணிவிழா நாயகியே வாழ்க



மானிப்பாய் மகளிர் கல்லூரி
அன்னையாக
Best wishes
அகவை அறுபதில்
Best wishes
கால் பதித்து மணிவிழா நாயகியாக
ஆசிரிய சமூகத்திற்கு வழிகாட்டியாக
மாணவ சமூகத்திற்கு முன்மாதிரியாக
நின்று இன்று மணிவிழாக் காணும்
மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர்

திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்

அவர்களை நீடூழி காலம் வாழ்க
வாழ்கவென வாழ்த்துவதில்
அகமகிழ்கின்றோம்.

திரு திருமதி சிவகுமார் குடும்பம் (பெற்றோர்)
காரைநகர்
(49986)(12.3.6)


உ

சுதுமலை வடக்கு

# அருள்மிகு ஈஞ்சடி ஸ்ரீ சாமுண்டிகா சமேத ஞானவைரவர் தேவஸ்தானம்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## 16.07.2014 புதன்கிழமை மாலை 4.00 மணி





### ஆசியுரை

யாழ்ப்பாண மண், பக்தர்களும் சித்தர்களும் வாழ்ந்து புண்ணியம் தேடிய பூமி. யாழ்ப்பாணத்தில் சுதுமலையில் அமைந்துள்ளது ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயம். அழகிய நிழல்தரும் மரங்கள் சூழ அமைந் துள்ள இக் கோயிலில் சிற்பம் நிறைந்து அழகிய வர்ணங்கள் தீட்டிய பிரமாண்டமான தேர் அமைக்கப்பெற்று வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. சில ஆண்டுகளாக அடித்தளம் மட்டும் அமைக்கப் பட்டுக் காணப்பட்டது. எவ்வாறு இத்தேர் உருவாகப்போகிறதோ என்று எல்லோரும் எண்ணி இருந்த வேளையிலே சுற்று வட்டாரத்தில் எங்கும் இவ்வாறான சிற்பத்துடன் கூடிய மணிகள் நிறைந்த சிறப்புற வர்ணம் தீட்டப்பட்ட தேரை காணமுடியாது என்று கண்டோர் வியக்கும் அளவுக்கு அழகுற அமைத்துள்ளனர் சிற்ப ஆசாரியர்கள். அவர்களுக்கும் விழா உபயகாரருக்கும் ஞானவைரவர் அடியார்களுக்கும் என்றென்றும் ஞானவைரவர் அருள் புரிய வேண்டும் என்று ஆசி கூறி பிரார்த்திக்கின்றேன்.

ஈஞ்சடி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பிரதமகுரு
**ந.உருத்திரமூர்த்திக்குருக்கள்.**



### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

கடவுள் பக்தியும் கல்விச் சிறப்பும் நிறைந்த புண்ணியபதி சுதுமலை. இத்திருவூரில் பலநூறு வருடம் பழமை மிக்க வைரவர் திருக்கோயிலாக விளங்கும் ஈஞ்சடி வைரவர் கோயில் மிகவும் பிரசித்தமானது. ஆடிப்பிறப்பன்று ஈஞ்சடி வைரவப் பெருமான் தேரில் பவனி வந்து அருள் பாலிப்பார். யாழ். குடாநாட்டில் முதலில் வைரவருக்கு திருத்தேர் விழாச் செய்த கோயில் என்ற பெருமை இக் கோயிலைச் சாரும். பல நூறு பக்தர்கள் பொங்கிப் படைத்து வழிபடுவர். இத் திருக்கோயில் பற்றிய வாய் மொழி மரபாகப் போற்றப்படும் அற்புதக் கதைகள் பல. வைரவப் பெருமான் பலருக்கு நன விலும், கனவிலும் காட்சி கொடுப்பதாக பக்தர்கள் கூறுவார்கள். சுதுமலை, இணுவில், மானிப் பாய், உடுவில் வாழ் மக்கள் ஈஞ்சடி வைரவரைப் பெரும்பாலும் தம் இஷ்ட தெய்வமாக போற்றித்துதிப்பர். இத்திருக்கோயி லின் பெரு வளர்ச்சி கண்டு மிகவும் ஆனந்தமடைகிறேன். ஆலய வாசலில் அழகான பெரிய விருட் சங்களும், நாவலர் பெருமானின் உருவச்சிலையும், மழலைகளுக்கான சிறுவர் பாடசாலையும் தெய்வீகமாகக் காட்சியளிக் கின்றன. இத்திருக் கோயில் தேர்த்திருவிழா நிறைவாக நடைபெற வைரவப் பெருமானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
சிவபூமி அறக்கட்டளை.



### அருள் பாலிக்கும் காவலன்

யாழ்.குடாநாட்டின் வளம் நிறை சுதுமலைப் பதியில் இயற்கை எழில் மட்டுமல்ல கல்விக் கூடங்களும் கல்விமான்களும், வைத்திய கலாநிதிகளும் திரும்பிப் பார்க்கும் இட மெல்லாம் எழில் கொஞ்சும் ஆலயங்களும் கொண்ட மிகத் தொன்மையான கிராமம். இச் சுதுமலைப்பதியில் பல அற்புதங்கள் செய்து கோயில் கொண்டிருக்கும் காவலனாம் எம் வைரவப் பெருமானுக்கு இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டமும் வியாழக்கிழமை தெஷிநாய புண்ணிய காலமாகிய ஆடிப்பிறப்பில் வைரவப் பெருமான் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார். ஈழத் திருநாட்டில் முதல் முதலில் தேர்ப் பவனி நடைபெற்ற, நடைபெறுகின்ற வைரவர் ஆலயம் எமது சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயம் என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இத் தொன்மைமிகு ஆலயத்தில் இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம் காண்பதில் பக்தி மய மாக்கிறது. இத்தினத்திலே இவ்வழகிய சித்திரத்தேரை வடிவமைத்த சிற்பக் கலைப் பெருமக்களைக் கௌரவிப்பதோடு, எமது பல நாள் கனவாகிய இச் சித்திரத்தேர் இல்லை என்ற கனவை நனவாக்கித் தந்த எம்மூர் பெருமகனுக்கும் அல்லற்படும் மக்கள் துயர் தீர்க்கும் காவலனின் நல்லருள் யாபேருக்கும் கிடைக்கட்டும் என்று ஆசி வேண்டி அமைகின்றேன்.

ஞானவைரவர் தாள்மலர் பணிய
ஆன கிரக மொன்பதும் மண்பொடு பலன்தரும்

**ச.தம்பித்துரை J.P**
சுதுமலை



### சித்திரத்தேர் உருவாக்கியவரின் உள்ளத்தில் இருந்து

கலைகள் நிறைந்த சுதுமலையில் ஈஞ்சடி என்னும் பதியில் காவல் தெய்வமாக கருணையே வடிவமாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற ஞானவைரவப் பெருமான் இவ்வருடம் அழகிய சித்திரத்தேரேறி வலம் வரவுள்ளார். பலநூறு வருடம் பழைமை வாய்ந்த இவ் ஆலயத்தில் வரலாற்றுப் பதிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் சிற்பங்களை உருவாக்கி என்னால் இயன்றவரை இறையருள் துணையோடு இத்தேரினை அமைத்துள்ளேன். இவ்வாலயத்திலே கைலாய வாகனங்கள், சப்பரம், தேர் என்பன என்னால் உருவாக்கப்பட்டுள்ளதை பெரும் பேறாக எண்ணி மகிழ்கின்றேன். இத்தேரினை அமைப்பதற்கு என்னுடன் உதவி புரிந்த அம்பாள் சிற்பாலயம் குழுவினருக்கும் தேர்த்திருவிழா உபயகாரருக்கும், தர்மகர்த்தா சபையினருக்கும் நன்றியினைக் கூறி அமைகின்றேன்.

ஸ்தபதி விஸ்வ பிரம்மஸ்ரீ
**நடராசா சிவபாலன்.**



### சாந்தியும் சமாதானமும் நிலைக்கட்டும்

ஈழமணித்திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் இயற்கை அழகு பொழிகின்ற சுதுமலைக் கிராமத்தில் ஈஞ்சடிப்பதியிலே தொன்மை வாய்ந்த கிராமியத் தெய்வ ஆலயமாக ஈஞ்சடி ஞானவைரவப் பெருமான் ஆலயம் காணப்படுகின்றது. வைரவப்பெருமான் ஆலயங்களிலே முதன் முறையாக தேர் திருவிழா நடைபெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது. வைரவர் ஆலயங்களிலே சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானமே மிகப்பெரிய ஆலயம் ஆகும். பதினொரு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று, பொங்கல் விழாவுடன் நிறைவுபெற்று விழாப்பொலிவு காணும் ஆலயமாகும். கடந்த மூன்றாண்டு களுக்கு முன் சப்பரமும் சென்ற வருடம் திருக்கைலாயமும் இவ் வருடம் புதிய சித்திரத்தேரும் எம்பெருமான் அருளால் நிறைவு பெற்றுள்ளது. அடுத்துவரும் ஆண்டு திருமஞ்சம் செய்வதற்கு ஏற்பாடாகி நடைபெற்று வருகின்றது. இவ்வருடம் இன்று புதன்கிழமை சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் நாளை வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன. இன் நன்னாளில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து தேர்வடம் பற்றி இழுத்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் அருளைப்பெற்று மனதில் சாந்தியும் சந்தோஷமும் நித்தம் நிலைத்து வாழ வேண்டிப் பிரார்த்தித்து எதிர்வரும் ஆண்டில் ஆலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்யப்பட்டு திருப்பணிவேலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமையால் மீளா அடியவர்களின் அன்பான ஒத்துழைப்பையும் வேண்டி அமைகின்றேன்.

**க. இராசரத்தினம்**
தலைவர், தர்மகர்த்தா சபை.

### மனதை மகிழ்விக்கும் தேர் வெள்ளோட்டம்

பல நாள் என்மனதில் தோன்றிய விருப்பம் ஈடிலாப் புகழ் கொண்ட ஈஞ்சடியானை சித்திரத்தேரில் ஏற்றிப்பார்க்க வேண்டும் என்பதே. பல வருடங்களாகத் தேர்த்திருவிழா செய்து வருகின்ற போதும் இவ்வருடம் இரட்டிப்பான மகிழ்வுடன் எம் பெருமானின் தேர்த் திருவிழாவைக் காண்கின்றேன். அழகிய தேரில் அலங்காரரூபனாக ஈஞ்சடியான் இத்திரு வீதியில் வலம் வருகின்ற காட்சியைக் காண நாம் எல்லோரும் நல்ல பலன் பெற்றுள்ளோம். பல நூறு வருடம் எம்பெருமான் தேர் ஏறி அடிய வர்களுக்கு அருள் வழங்க வேண்டும். மங்காப்புகழ்மிக்க கலை அம்சம் நிறைந்த இத்தேரி னைப் பேணிப் பாதுகாத்து வரும் பொறுப்பு வருங்கால சந்ததியின் கையிலே ஒப்படைக்கப்பட்டுள்ளது. புதிய சித்திரத்தேரினை மனவிருப்பத்துடன் அமைத்துத் தந்த நடராசா சிவபாலன் குழுவினருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு, அடியார்கள் அனைவரும் வந்து எம் பெருமானைத் தரிசித்து வரம்பெற வேண்டி நிற்கின்றேன்.

**சின்னத்தம்பி முத்துத்தம்பி**
தேர்த்திருவிழா

(39641) (4.6.3)

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா உபயகாரர்.

உதயன்
16.07.2014



# சுடுகாடாகின்றது காஸா

காஸா, ஜூலை 16

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்தும் வான்வழி தாக்குதலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 184 ஆக உயர்ந்துள்ளது.

பாலஸ்தீனத்துக்கு எதிராக நடத்தி வரும் தாக்குதலுக்கு 'ஒப்பரேஷன் புரொடக்டிவ் எட்ஜ்' என இஸ்ரேல் பெயரிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி வான்வழி தாக்குதலை காஸா மீது நடத்தத் தொடங்கிய இஸ்ரேலியப் படைகள் இதுவரை 1000 முறை தாக்குதலை நடத்தியதாகத் தெரிகின்றது.


இந்தத் தாக்குதலால் சுமார் 500 வீடுகள் தரைமட்டமாகி, 20 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் ஒதுங்க இடமின்றித் தவிக்கின்றனர் என்றும் தற்போது சுமார் 1,300 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இஸ்ரேலின் விமானத் தாக்குதல்களால் புகைமூட்டமாகிறது காஸா

இந்நிலையில், காஸா பகுதிக்குள் இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் மட்டும் 14 பேர் உயிரிழந்துள்ளதால் பலியானோர் எண்ணிக்கை மொத்தம் 184 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், கடந்த ஒரு வார காலமாக காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை கடந்த 2012 ஆம் ஆண்டை விட அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. (த)



வில்லியம் ஹேக்

## பதவி விலகினார் வில்லியம் ஹேக்

லண்டன், ஜூலை 16

பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் வில்லியம் ஹேக் அமைச்சர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

ஆனால் பிரிட்டன் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் என்ற பதவியில் அமைச்சரவையில் நீடிப்பார் என்று பிரதமர் அலுவலகம் கூறியது.

ஹேக் 2015 பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட மாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பாதுகாப்பு அமைச்சராகஇருக்கும்பிலிப்ஹேமண்ட் வெளியுறவுத்துறை அமைச்சராவார் என்று தெரியவருகிறது.

இலாகா இல்லாத அமைச்சராகப் பதவி வகித்து வந்த மூத்த அமைச்சர் கென் கிளார்க்கும் பதவி விலகுகிறார்.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சி, இந்த அமைச்சரவை மாற்றங்கள் மிதவாதிகளின் படுகொலை என்று வர்ணித்திருக்கிறது.

அமைச்சரவைமாற்றம்குறித்து கருத்து தெரிவித்த பிரதமர் டேவிட் கமரூன், வில்லியம் ஹேக் கன்சர்வேடிவ் கட்சியின் முக்கிய தலைவராக ஒரு தலைமுறைக் காலம் நீடித்தவர்களில் ஒருவர், கட்சியிலும், அமைச்சரவையிலும் சேவை செய்தவர் என்று பாராட்டியிருக்கிறார். எதிர் வரும் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் முழு வெற்றிக்கு உழைக்கப்போகும் குழுவில் அவரும் இடம் பெற்றிருப்பார் என்று அவர் கூறினார். (த)

# மீண்டும் சர்ச்சையில் மாட்டினார் சர்கோசி

பாரிஸ், ஜூலை 16

பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோசி லஞ்ச ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிக்கியுள்ளார்.

2007ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற லஞ்ச ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டதாக நிக்கொலஸ் சர்கோசி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் வழக்கு விசாரணையை எதிர் கொண்டார்.

தன்னுடைய அரசியல் மறுபிரவேசத்தைக் குறைத்து மதிப்பிடும் வண்ணம் நீதித்துறையைக் கைக்குள் போட்டுக்கொண்ட அவரது எதிரிகள் தன்னை இப்படியொரு கோரமான பிரச்சினைக்குள் மாட்டிவிட்டதாகச் சர்கோசி குறை கூறினார். ஆனால் இப்போது அவரது தொலைபேசி உரையாடல் ஒன்று வெளியிடப்பட்டு மீண்டும் அவரை சர்ச்சைக்குள்ளாக்கியுள்ளது.

பிரெஞ்சு பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருந்த இந்த உரையாடலில் மொனாகோவில் உள்ள நீதிபதி கில்பர்ட் அசிபர்ட் தன் மீது சுமத்தப்பட்டுள்ள ஆறு நீதி ஊழல் வழக்குகளில் ஒன்றில் உதவி புரிந்தால் அதற்குத் தகுந்த வேலை ஒன்று பரிந்துரைக்கப்படும் என்று சர்கோசி தனது நீண்டகால வழக்கறிஞரிடம் தெரிவிப்பதுபோல் உள்ளது.

இந்த நீதிபதியுமே நீண்ட காலமாக நடைபெற்று வந்துள்ள கோடீஸ்வரர்கள் லோரியல் ஹேரஸ், லிலியன் பெட்டென்கோர்ட் நன்கொடை வழக்குகள் குறித்து சட்ட விரோதமாக சர்கோசிக்கு தகவல்கள் தந்துள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

பிரான்ஸ் அரசின் பரிந்துரையின் பேரில் அளிக்கப்படும் இந்தப் பதவி அந்த நீதிபதிக்கு அளிக்கப்படவில்லை என்றபோதும் இவ்வாறு உதவி புரிவதாகக் கூறுவதே பிரெஞ்சு அரசியல் சட்டத்தின்படி குற்றமாகக் கருதப்படும். போலியான பெயரில் வாங்கிய தொலைபேசியில் கடந்த பெப்ரவரி மாதம் இந்த உரையாடலை சர்கோசி மேற்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## போர்நிறுத்த யோசனை நிராகரித்தது ஹமாஸ்

காசா, ஜூலை 16

காசாவிலுள்ள பாலஸ்தீன ஆயுதக்குழுவான ஹமாஸுடன் கடந்த ஒரு வாரமாக இஸ்ரேல் ஈடுபட்டுவருகின்ற சண்டையை நிறுத்துவதற்கு எகிப்து முன்மொழிந்துள்ள யோசனைக்குப் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான இஸ்ரேலிய அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

ஆனால் ஹமாஸ் அமைப்பின் ஆயுதப் பிரிவு இந்த யோசனையை, சரணடைவதற்குச் சமம் என்று வர்ணித்து நிராகரித்துள்ளது.

சர்வதேச போர்நிறுத்த அழுத்தங்களை மீறி மத்திய கிழக்கு மோதல் நீடிக்கிறது

இஸ்ரேல் பிடித்து வைத்துள்ள ஹமாஸ் உறுப்பினர்களை அது விடுவித்து, காசா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அகற்ற எகிப்துடன் இஸ்ரேல் சேர்ந்து செயலாற்றாத வரையில், இஸ்ரேலுடனான தமது மோதல் வலுக்கவே செய்யும் என்று ஹமாஸின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாம் தாக்குதலை நிறுத்திய பின்னரும் காசாவில் இருந்து ரொக்கெட்டுகள் வந்து விழுந்துள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது.

ஆனாலும் ஆள்சேதமோ பொருள்சேதமோ இருந்ததாகத் தகவல்கள் இல்லை.

கடந்த ஒரு வார காலத்தில் இஸ்ரேலிய தாக்குதலில் பொதுமக்கள் பெரும்பான்மையாக பலஸ்தீனர்கள் கிட்டத்தட்ட 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (த)

## திரிபோலி விமான நிலையத்தில் மோதல்

திரிபோலி, ஜூலை 16

லிபிய தலைநகர் திரிபோலியிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் எதிர்ப் போராளிக் குழுக்களிடையே இடம் பெற்ற மோதலில் குறைந்தது 7 பேர் உயிரிழந்ததுடன் 30 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி, விமான நிலையத்தைக் கட்டுப்படுத்தும் ஸின்டான் பிராந்திய கிளர்ச்சியாளர்கள், அந்தப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எதிர்க் குழுவால் தாக்கப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தைக் கட்டுப்படுத்தி வந்த கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பது அறியப்படவில்லை. (த)

# ஜேர்மனின் உலகக் கிண்ண வெற்றியை விண்வெளியில் கொண்டாடிய வீரர்கள்

நாஸா, ஜூலை 16

உலக கிண்ண உதைபந்தாட்டத்தின் இறுதிச்சுற்றை நேரடியாக வானில் பறந்தபடியே ஜேர்மனிய விண்வெளி வீரர்கள் பார்த்து ரசித்துள்ளனர்.

சர்வதேச அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாஸாவினால் பூமியிலிருந்து 230 மைல் உயரத்தில் புவியீர்ப்பு விசைக்கு அப்பால் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு நிலையத்தில் அமெரிக்க விண்வெளி அமெரிக்க விஞ்ஞானிகள் ரீய்ட் வைஸ்மேன், ஸ்டீவ் ஸ்வான்சன் மற்றும் ஜேர்மனியின் அலெக்சாண்டர் கெர்ஸ்ட் மற்றும் ஒரு விஞ்ஞானி ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில் உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தை ரசிக்கத் துடித்த இம்மூவரும் விண்வெளியில் பணி நிமித்தமாக சிக்கிக்கொண்டதால் எப்படி இதை நேரடியாக பார்ப்பது என்ற கவலையில் ஆழ்ந்திருந்தனர்.

இது குறித்து இவர்கள் நாஸாவிடம் கூறியபோது, உதைபந்தாட்டத்தின் இறுதி போட்டியில் ஜேர்மனியும், ஆர்ஜென்ரீனாவும் மோதிய போட்டியை விண்வெளியில் இருந்தபடி நேரடியாக விஞ்ஞானிகள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.



விண்வெளி ஆய்வு மையத்தில் வீரர்கள்

இதனையடுத்து கிண்ணத்தை ஜேர்மனி அணி கைப்பற்றிய போது, விண்வெளியில் இருப்பதையும் மறந்துவிட்டு அந்த நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியான அலெக்சாண்டர் கெர்ஸ்ட் ஆனந்த வெள்ளத்தில் ஆட்டம் போட்டார்.

மேலும், போட்டியைப் பார்த்த விண்வெளி வீரர்கள் தங்கள் அனுபவத்தை காணொலியாகப் படம் பிடித்து அதை யூடியூப்பில் பதிவேற்றம் செய்துள்ளனர். (த)

# இலங்கை குறித்து பா.ஜ.கவின் அணுகுமுறை அதிர்ச்சி தருகிறது

## மோடிக்கு வைகோ கடிதம்



நரேந்திர மோடி வைகோ

சென்னை, ஜூலை 16

இலங்கை வெளியுறவு அமைச்சருடன் அரசு பேச்சு, இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி என பா.ஜ.க. தலைமையிலான அரசின் அணுகுமுறை அதிர்ச்சி தருவதாக, பிரதமர் நரேந்திர மோடிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர்வைகோகடிதம்அனுப்பியுள்ளார்.

மிகவும் கவலை அளிப்பதும், முக்கியமானதுமான ஈழத் தமிழர் பிரச்சினையில், தற் போது ஏற்பட்டு வரும் நிலைமையை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், மூன்று நாள்கள் பயணமாக இந்தியாவுக்கு வந்து, எமது வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உடன் மிகவும் விரிவாக, இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்ததாகவும், கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்ததாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

மனித உரிமைகள் குறித்த பிரச்சினைகளில், ஈழத் தமிழர்களையும் உள்ளிட்டு எடுக்கப்படும் நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை அமைச்சர் விளக்கிக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையின் மஹிந்த அரசு, லட்சக் கணக்கான தமிழர்களை, அப்பாவிகளை, வயது முதிர்ந்தோர், பெண்கள், குழந்தைகளைக் கொன்று குவித்த, மன்னிக்கமுடியாத இனப்படுகொலைக் குற்றத்தைச் செய்தது என்பது, மறுக்க முடியாத, நிரூபிக்கப்பட்ட உண்மை ஆகும். லண்டன் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலிகளின் மறுக்க முடியாத சாட்சியங்கள், தமிழ் இனப் படுகொலையை வெளிப் படுத்தியதால், அனைத்து உலக சமுதாயத்தின் மனசாட்சி அதிர்ச்சியுற்றது. இதன் விளைவாக, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில், பல நாடுகளின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு மனித உரிமைகளை மீறிய குற்றங்கள் குறித்து, ஒரு முழுமையான விசாரணையை நடத்துவதற்கு, மனித உரிமைகள் ஆணையர் நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று, சபைத் தீர்மானம் கேட்டுக்கொண்டது.

ஆனால், ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து வந்த, இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, ஜெனிவா மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு ஆதரவாக வாக்கெடுப்பில் செயற்பட்டு, இறுதி வாக்கெடுப்பில் வாக்கு அளிக்காமல் வெளியேறியது.

தற்பொழுது ஐ.நா.வின் மனித உரிமை ஆணையகம், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து விசா ரணை நடத்த மூன்று பேர் கொண்ட குழுவை 2014 ஜூன் மாதம் நியமித்து இருக்கின்றது.

ஆனால், இலங்கை அரசு, ஐ.நாவின் ஜெனிவா தீர்மானத்தை எதிர்ப்பதோடு, விசாரணைக் குழுவினர் இலங்கைக்கு உள்ளே நுழையவிசா அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்தும், மனித உரிமைகள் மீறப்பட்டமை பற்றியும், உண்மையைக் கண்டறிய உலக நாடுகள் அக்கறையும் கவலையும் கொண்டு இருக்கும் இந்தவேளை இலங்கை அரசு நீதிக்கான கதவுகளை நிரந்தரமாக மூட முடிவு செய்துவிட்டதோடு, இன்றைய இந்திய அரசை ஏமாற்றி, உண் மைகளை ஆயிரம் அடிகளுக்குக் கீழே குழி தோண்டிப் புதைத்துவிட்டு, பொய் வேடம் போடுகிறது.

இதில்மிகவும்அதிர்ச்சிதரக்கூடியசெய்தி என்னவென்றால், இந்தியாவின் வெளி விவகாரத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான அக்பருதீன் என்பவர் கூறும்போது, 2014 ஜூலை 11 இல், ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளாததை நியாயப்படுத்தி உள்ளார். இது பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

ஜெனிவா மனித உரிமைச் சபைக் கூட்டத்தில், ஈழத்தமிழர்களுக் குத் துரோகம் புரிந்த முன்னைய ஐக் கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிலைப்பாடுதான், இன்றைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடா?

இந்தியாவின் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும் ஈடுபாடும் நம்பிக்கையும்வைத்து இருக்கின்றோம். ஆனால், ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த கொடுந்துயரான, துன்பமான பிரச்சினைக்கு இந்திய அரசால் நீதி வழங்கப்படா விட்டால், தமிழர்கள் மனதில், குறிப் பாக இளைய தலைமுறையினர் மனதில் விரக்தியும் வெறுப்பும் ஏற்படும் என்பதை வேதனையோடு சுட்டிக் காட்டுகிறேன்.

நியாயமான நல்ல நோக்கத்தோடு தங்களின் மேலான கவனத்துக்காக இந்தக்கடிதத்தைஎழுதி உள்ளேன். தமிழர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தாங்கள் மேற் கொள்ள வேண்டுகிறேன் என்று அந்தக் கடிதத்தில் வைகோ கூறியுள்ளார். (த)

## சுவர் இடிந்து விழுந்து 7குழந்தைகள் சாவு

புதுடில்லி, ஜூலை 16

மத்திய பிரதேசத்தின் புர்ஹான்ப்பூர் மாவட்டத்தில் சுற்றுச்சுவர் இடிந்து வீடுகளின் மீது விழுந்ததில், 7 குழந்தைகள் உயிரிழந்த தாகவும், 9 பேர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

மத்திய பிரதேசத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர் மழை பெய்து வரும் நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புர்ஹான்ப்பூர் மாவட்டத்தில் உள்ள குருத்வாராவின் சுற்றுச்சுவர் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது. இதில், அந்தச் சுவரின் சுற்றுவட்டாரத்தில் இருந்த வீடுகள் சில மண்ணில் புதைந்தன.

இதில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 7 குழந்தைகள் பரிதாபமாக உயிரி ழந்த தாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. இறந்த குழந்தைகள் அனைவரும் ஒன்று முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (த)

## ஓடும் ரயிலில் திடீர்த் தீ

### அச்சத்தில் அலறிய பயணிகள்



புதுடில்லி, ஜூலை 16

உத்தரப் பிரதேச மாநிலம் ரிசியா பகுதியில்ஓடும்ரயிலில்திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் பயணிகள் மத்தியில் பீதி ஏற்பட்டது.

கோண்டாவில் இருந்து பரேலிக்குச் செல்லும் கோண்டா எக்ஸ்பிரஸ் நேற்று முன் தினம் இரவு உத்தரப் பிரதேசத்தின் ரிசியா மற்றும் மடேரா ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்தபோது ரயில் இயந்திரத்தில் திடீரெனத் தீ பற்றிக்கொண்டுள்ளது.

தீயின் புகை ரயில் பெட்டிகளுக்குள் வந்ததால், பயணிகள் சிலர் தீ.. தீ.. என்று கத்திய படியே அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்துள்ளனர்.

மேலும் சிலர் தீயிலிருந்து தப்பிக்க ஓடும் ரயிலில் இருந்து கீழே குதித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தத் தகவல் கிடைத்ததும் ரயில் நிறுத்தப்பட்டு ரயில்வே அதிகாரிகளின் துணையுடன் தீயணைப்பு வீரர்கள் சுமார் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்துள்ளனர். இந்த திடீர் தீ விபத்துக்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத போதும், இந்த விபத்தில் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மோடி - ஜின்பிங் சந்தித்துப் பேச்சு



நரேந்திர மோடி - ஜி ஜின்பிங்

ரியோடி ஜெனிரோ, ஜூலை 16

சீன அதிபர் ஜி ஜின்பிங்கைப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். இந்தியா - சீனா இடையிலான எல்லைப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண இரு தலைவர்களும் விருப்பம் தெரிவித்தனர்.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்ஸின் 6ஆவது உச்சி மாநாடு பிரேஸிலின் போர்டலிசா, பிரேஸிலியா நகரங்களில் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி டில்லியில் இருந்து ஞாயிற்றுக் கிழமை புறப்பட்டார். அன்றிரவு ஜேர்மனியின் பேர்ளின் நகரில் அவர் தங்கினார். திங்கட்கிழமை காலை பேர்ளினில் இருந்து புறப்பட்டுப் பிரேஸிலின் போர்டலிசா நகரை அவர் சென்றடைந்தார்.

அங்கு நேற்றுத் தொடங்கிய பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார்.

இரு தலைவர்களும் சந்திப்பது இதுவே முதல் முறை.

இந்தச் சந்திப்பின்போது, நவம்பர் மாதம் சீனா வருமாறு, பிரதமர் நரேந்திர மோடிக்கு அதிபர் ஜி ஜின்பிங் அழைப்பு விடுத்தார். (த)

# இது முறையா?

## இலங்கை விடயம் குறித்து கருணாநிதியும் போர்க்கொடி



மு.கருணாநிதி

சென்னை, ஜூலை 16

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கையாண்ட அதே அணுகுமுறையை பா.ஜ.க. அரசும் மேற்கொள்வது சரிதானா? என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து கட்சித் தொண்டர்களுக்குக் கடந்த திங்கள் கிழமை எழுதியுள்ள கடிதத்தில் கருணாநிதி கூறியிருப்பதாவது:-

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை, இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பீரிஸ், கடந்த 11ஆம் திகதி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது சட்டப் பிரிவில் திருத்தம் கொண்டு வருவது பற்றி விவாதித்துள்ளனர்.

மேலும் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே புதிய நகரம் ஒன்றை இலங்கை அரசு அமைக்கவும், அதன்மூலம், 38,500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் உள்ளதாக வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் போர்க் குற்ற விசாரணையை இந்தியா ஆதரிக்குமா எனக் கேட்டபோது, இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் கடந்த மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்புக்கு வந்தது. வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்ததோடு, இலங்கைக்கு வல்லுநர் குழுவை அனுப்பி விசாரிக்க வேண்டும் என்று தீர்மானத்தில் இடம் பெற்றிருந்த ஒரு பிரிவை எதிர்த்தே வாக்களித்தது. அந்தக் கொள்கையில் இருந்து பின்வாங்க மாட்டோம் என்று சுஷ்மா சுவராஜ் தெரிவித்ததாகச் செய்தி வந்துள்ளது.

அமைச்சர் கூறியிருப்பது உண்மையெனில், கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிலைப்பாட்டையே, இந்த அரசும் கொண்டிருப்பதை உறுதி செய்வதாக உள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு கையாண்ட அதே அணுகுமுறையைத் தற்போது பா.ஜ.க. அரசும் மேற்கொள்வது சரிதானா?

தங்கள் பிரச்சினைக்கு பிரதமர் மோடி தலைமையிலான அரசு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும் என உலகத் தமிழர்கள் எல்லாம் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கு மோடி தலைமையிலான அரசால் விடிவு காலம் பிறக்கும் என நம்புகிறேன்-இவ்வாறு கருணாநிதி தெரிவித்துள்ளார். (த)

# விசாரணை அறிக்கையைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக வழக்கு தொடுப்பு

## ஆபத்தைச் சுட்டிக்காட்டுகிறார் அமைச்சர் விமல்

கொழும்பு,ஜூன் 16

ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு அதன் விசாரணைக் குழு 2015 மார்ச்சில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் ஆபத்து இருக்கின்றது எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டினார்.


விமல் வீரவன்ஸ

ஐக்கிய நாடுகள் சபையின் விசாணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் அமைச்சரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் வீரவன்ஸ மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச விசாரணையானது பக்கச்சார்பற்றதாகவும், சுயாதீன மாகவும் இடம்பெறாது என்பதாலேயே அரசு அதனை நிராகரித்துள்ளது.

ஐ.நா.விசாரணைக்குழுவுக்கு இலங்கைக்குள் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டாலும், விசாரணை இடம்பெறும் என்பது உறுதி. ஒருவேளை, இப்போதே சர்வதேச மத்தியில் இலங்கைக்கு எதிராக ஆதாரம் திரட்டும் பணியில் அவர்கள் இறங்கியிருக்கக்கூடும். இறுதி அறிக்கைகூட தயாரிக்கப்பட்டிருக்கலாம்.

அதேவேளை, இலங்கையைப் பிரித்துவிட வேண்டும் என்பதே மேற்குலகின் நிகழ்ச்சி நிரலாகும். ஆனால், நாம் அதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திற்கும் வழிவகுத்துவிடக் கூடாது.

அதே நேரம், ஐ.நா.குழு முன்னெடுக்கும் விசாரணையின் அறிக்கையை அது அடுத்த வருட மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாட்டின் போது சமர்ப்பித்தால் நாட்டுக்கு ஆபத்து வரக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

ஏனெனில், அது சமர்ப்பிக்கும் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக வழங்குத் தொடுக்கப்படலாம்.

அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்ட பின்னர் உரியவர்களை ஒப்படைக்குமாறு பிடியாணை பிறப்பிக்கப்படலாம். அவ்வாறு பிறப்பிக்கப்பட்டாலும் இலங்கை அரசு எவரையும் ஒப்படைக்காது. எனவே, உரியவர்களை ஒப்படைக்கும் அரசொன்றை அமைக்கும் முயற்சியிலேயே அவை ஈடுபட்டு வருகின்றன- என்றார். (ஒ)

# ரமபோஷவை சந்திக்காமல் ஒதுங்கிய பஸில், கோத்தபாய


கோத்தபாய


பஸில் ராஜபக்ஷ

கொழும்பு,ஜூன் 16

தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷவுடன் அரச பிரதிநிதிகள் நடத்திய சந்திப்பில் இருந்து பஸில் ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும் இறுதி நேரத்தில் விலகிக் கொண்டமை குறித்து கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று சந்தேகம் எழுப்பியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் இரண்டு முக்கியமான பிரமுகர்களான பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் முக்கியமான அதிகாரிகள் மட்ட அதிகாரபூர்வ சந்திப்பில் பங்கேற்க வில்லை.

பேச்சில் பங்குபற்றவுள்ளவர்கள் தொடர்பில் தென்னாபிரிக்கத் தரப்பிடம் கையளிக்கப்பட்ட பட்டியலில் அவர்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

அவர்கள் பங்கேற்காததற்கு காரணம் கூறப்பட்டபோதிலும், தற்போதைய அரசியல் சூழலில் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற்கொண்டுதான் அவர்கள் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்க விரும்பவில்லையோ என்ற சந்தேகம் உள்ளது.

அதன்மூலம் இந்தப் பேச்சுக்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் ரமபோஷவுடன் பேச்சுக்களில் பங்கேற்ற அரசதரப்புக் குழுவில், அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், பைசர் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் ஆளும்கட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளர் அருண் தம்பிமுத்து, வெளிவிவகாரச் செயலர் சேனுகா செனிவிரத்ன ஆகியோரே பங்கெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மக்களிடம் மன்னிப்பு கோருகிறார் தயாசிறி

கொழும்பு,ஜூன் 16

அண்மையில் தொலைக்காட்சி நிறுவனமொன்றின் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தான் பங்குபற்றிய போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுடன் ரகளையில் ஈடுபட்டமைக்காகப் பொதுமக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்பதாக வடமேல் மாகாணத்தின் முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருக்கிறார்.


தயாசிறி ஜயசேகர

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

"ஆளும் கட்சியின் அரசியல்வாதியாக இருக்கும் எனக்கு என்னைத் தேர்ந்தெடுத்த வடமேல் மாகாண மக்களினதும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்களினதும் நம்பிக்கையையும் அவர்கள் என்மீது வைத்திருக்கும் நன்மதிப்பையும் காப்பாற்றவேண்டிய கடமை உள்ளது.

அன்றைய தினம் தொலைக்காட்சி நிறுவனத்தில் நடந்த அசம்பாவிதத்துக்கு மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

எனது மாகாணத்தின் கல்வி அமைச்சராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நான் எதிர்கால சமுதாயத்துக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.

இந்த அசம்பாவிதம் என்றென்றும் என்னை உறுத்திக்கொண்டிருக்கும். எனினும், தொலைக்காட்சி நிகழ்ச்சியின்போது ஹரின் பெர்னாண்டோ நடந்துகொண்ட முறையும், பயன்படுத்திய வார்த்தைகளும் நியாயமற்றவை என்பதை மனச்சாட்சியுள்ள எவரும் நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்- என்றுள்ளது. (ஒ)


தேசிய பழங்களின் பாவனையை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பழங்கள் அபிவிருத்தி வாரம் மற்றும் பழங்கள் களியாட்ட நிகழ்வின் ஆரம்பவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஹொரணை கனன்வில பழக்கன்று ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றது. கண்காட்சியைத் திறந்து வைத்த ஜனாதிபதி அதனை ஆர்வத்துடன் பார்வையிட்டார். (ஒ)

# சீரற்ற காலநிலை காரணமாக சப்ரகமுவ பல்கலை மூடப்பட்டது

கொழும்பு,ஜூன் 16

பலாங்கொடை பிரதேசத்தில் கடும் காற்றுடன் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஒரு வாரத்துக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சந்தன பீ.உடவத்த அறிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகம் அமைந்துள்ள பலாங்கொடை பம்ப ஹின்ன பிரதேசத்தில் கடந்த சில தினாங் களாகக் கடும் காற்று வீசிவருகிறது. இதன் காரணமாக மாணவிகளின் விடுதித் தேவைக்காகத் தனியார் ஒருவரிடமிருந்து வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்தின் கூரை முற்றாக நிர்மூலமாகியுள்ளது.

அந்தக் கூரையை மீண்டும் அமைக்கும்வரை அங்கு தங்கியிருந்த 270 மாணவிகளும் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மரங்களின் கிளைகள் முறிந்து வீழ்ந்துள்ளன. இந்த அசாதாரண காலநிலை மேலும் தொடரலாம் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ள தால் பல்கலைக் கழகத்தை ஒருவார காலத்துக்கு மூடுவதற்குத் தீர்மானித் தோம்.



அத்துடன், கடும் காற்றின் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் நீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

எனவே, இங்கு தங்கியிருக்கும் 2 ஆயிரத்து 500 மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள சேதங்களைத் திருத்த சிறிது காலம் எடுக்கலாம். எனினும், நிலைமை சீரானால் எதிர்வரும் 21ஆம் திகதி பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க உத்தேசித்துள்ளோம்.

இவ்வாறு உபவேந்தர் சந்தன பீ.உடவத்த தெரிவித்துள்ளார். (ஒ)

# ஊவா மாகாணசபைத் தேர்தல்; சனியன்று மனோ கட்சி முடிவு

கொழும்பு,ஜூன் 16

ஊவா மாகாணசபை தேர்தல் தொடர்பாக எதிர் வரும் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள அரசியல் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் கொள்கை பரப்புச் செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-

"பதுளை மாவட்டத்தில் ஏணி சின்னத்தில் தனித்து போட்டியிடும்படி கட்சியின் மலையக ஆதரவாளர்கள் கோரியுள்ள நிலையில் சிறுபான்மை அமைப்புகள் கூட்டணியாக போட்டியிட வேண்டும் என்றும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஊவா மாகாணத் தில் குறிப்பாக பதுளை மாவட்டத்தில், இருக்கின்ற தமிழ் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கும் நோக்கில் பெரும்பான்மை கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான நிலைமைகளை ஆராய்ந்து, இது தொடர்பிலான எமது கட்சியின் நிலைப்பாடு எதிர்வரும் சனிக்கிழமை தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள அரசியல்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்படும்" - என்றார். (ஒ)

CMYK



# தாயின் சடலத்தின் அருகில் 3-வருடங்களாக படுத்திருந்த விசித்திர மகள்



**வீடொன்றுக்குள் ஒரு பெண்ணின் எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவை வீட்டில் குடி யிருப்பவரின் தாயாருடையவை என்று தெரியவந்துள்ளது**

Alfred Hitchcock படத்தின் நேரடித் திருப்பம் போன்று இந்தச் சம்பவம் உள்ளதென கூறப்படு கின்றது. Chava Stirn என்ற பெண் தனது தாயாரின் சடலத் தின் அருகில் கடந்த 3 வருடங்க ளாகப் படுத்திருந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இந்த 28-வயதுடைய பெண் தனது 61-வயதுடைய தாயாரான சுசி றொசெந்தாலின் எஞ்சியுள்ள எச் சத்தை சாப்பாட்டு மேசையில் முட்டு கொடுத்து நிறுத்தி அதற்கு ஆடையும் அணிவித்து வைத் துள்ளார்.

இது ஒரு பைத்தியத்தின் செயற் பாடு போன்று இருப்பதாக அநாம தேய பொலிஸ் அதிகாரி பரபரப் பான பத்திரிகை ஒன்றுக்குத் தெரி வித்துள்ளார். தான் இது வரை பார்த்திராத ஒரு புதிரான வழக்கு இது என்றும் கூறியுள் ளார். Stirn தாயின் எலும்புகளை குப்பைகளின் மேல் அடுக்கி சமையல் அறைக்குள் கிடத்தி வைத்துள்ளார். இரவில் கதிரை ஒன்றை அந்த எச்சங்களுக்கு அருகில் வைத்து இரவில் படுத்திருந்துள்ளார். அப்பார்ட்மென்டின் உள்ளே அவர் எவ ரையும் அனுமதிப்பதில்லை. சில நேரம் உறவினர்கள் கதவின் வெளியே சாப்பாட்டை வைத்து விட்டுச் செல்வதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். அடிக்கடி வித்தியாச மான சத்தங்கள் கேட்பதாக அய லவர்கள் கூறியுள்ளனர். திங்கட் கிழமை குறிப்பிட்ட வீட்டிலிருந்து துர்நாற்றம் வருவதாகப் பொலிஸா ருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் அங்கு சென்றனர். பொலி ஸார் வீட்டைச் சோதனை இட்டனர். றொசெந்தாலின் இறப்பிற்கான காரணம் தெளிவாகவில்லை.

# 248 புதிய உயிரினங்கள் இந்தியாவில் கண்டுபிடிப்பு



கடந்த ஆண்டு. இந்தியாவில் 248 வகை புதிய உயிரி னங்கள் (விலங் கினங்கள்) கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக, கொல் கத்தாவை தலைமையக மாகக் கொண்டுள்ள இந் திய விலங்கியல் ஆய் வகம் தெரிவித்துள்ளது. இவற் றில் பெரும்பாலானவை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலும், கிழக்கு இமா யலப் பகுதியிலும் கண்டு பிடிக்கப்பட்டவை என்று அந்த ஆய்வகத்தின் இயக் குநர் மருத்துவர் கே. வெங்கட்ராமன் தெரிவித்தார்.

இந்தியாவில் உயிரினங்கள்(விலங்கினங்கள்)குறித்த கல்வியில் ஆர்வம் குறைந்து வருவது புதிய உயிரினங்களை கண்டறிவதில் பல இடை யூறுகளை ஏற்படுத்து கின்றன என்றும் அவர் கூறுகிறார்.

தற்போது கண்டுபிடிக் கப்பட்டுள்ள புதிய உயிரி னங்களில் (விலங்கி னங்களில்) கூடுதலா னவை பூச்சிகளே என்று கூறும் அவர், இவற்றின் வாழ்விடங் களுக்கு, மனிதர்க ளால் ஏற்படும் பாதிப் புகள் காரணங்களால், அவற்றின் எதிர்காலம் கேள்விக் குறியாக வும், கவலைக்குரிய தாகவும் உள்ளன என்றும் தெரிவித்தார்.



உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டிய விழிப்புணர்வு மேலும் கூடுதலாக முன்னெடுக் கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தும் அவர், அந்த நடவடிக்கை இல் லாதபோது, பல அரிய வகையான உயிரினங் கள் (விலங்கினங் கள்) முற்றாக அழிந்து போகக் கூடிய அபாயம் உள் ளன என்றும் கூறுகி றார்.

நிலத்தில் வாழும் உயி ரினங்களை (விலங்கி னங்கள்) விட, நீரில் வாழ்பவை கூடுத லான அபாயங்களை எதிர்கொள்கின்றன எனவும் மருத்துவர் வெங்கட்ராமன் தெரி வித்தார்.




# மாணவியின் வயிற்றில் பேனா அதிர்ச்சியில் மருத்துவர்கள்



தைவான் நாட்டில் மாணவி ஒருவரின் வயிற்றில் பேனாவொன்று இருந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தைவானில் வசிக்கும் ஷிங் பாங் (20) என்ற மாணவி பல நாள்களாக வயிற்று வலியால் அவதிக்குள்ளாகியிருந்தார். இதனால் பொது மருத்துவரை அவர் அணுகி தன்னால் சரியாகச் சாப்பிட முடியவில்லை படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை என்று கூறியுள்ளார்.

அதனையடுத்து மருத்துவர் அவரை எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில், 4 அங்குலம் நீளமுள்ள பொருள் ஒன்று அவரது வயிற்றில் இருந்தமை உறுதிப் படுத்தப்பட்டது.

உடனே அவர் வாய்வழியாக கமராவை வயிற்றினுள் செலுத்தி எண்டோஸ்கோபி மூலம் சோதனை செய்ததில் அது பேனா என தெரியவந்ததால் மருத்துவர்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

அதன்பின் அறுவைச் சிகிச்சை மூலம் பேனாவை மருத்துவர் வயிற்றிலிருந்து அகற்றியபோது அது அமிலத்தில் அரித்து போய் இருந்துள்ளது.

இதுகுறித்து ஷிங் பாங் கூறுகையில்; பேனா வயிற்றுக்குள் எப்படிச் சென்றது என்பது தெரியவில்லை என்றும் தேர்வில் வெற்றி பெற்றதை மது அருந்தி கொண்டாடியபோது பேனா வயிற்றுக்குள் சென்றிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

# முயல் கறி சாப்பிட்டால் புற்று நோய் பாதிப்பை குறைக்கலாம்



அன்றாடம் மாறிவரும்வாழ்க்கை முறையில் எம்மைப் பல வித நோய்களும் எளிதாகத் தொற்றிக் கொள்கிறது. வாழ்க்கை முறைகளுக்கு ஏற்றவாறு நாம் உணவுப் பழக்கங்களை மாற்றிக் கொள்வது அவசியமாக இருக்கிறது.

நாம் உண்ணும் உணவில் கவனம் செலுத்தாத போது 60 வயதில் வரவேண்டிய இரத்த அழுத்தம், மாரடைப்பு, நீரிழிவு, புற்றுநோய்கள் போன்றவை 25 வயதிலேயே தொற்றிக் கொள்கின்றன.

எனவே பலர் கலோரிகள் மற்றும் கொழுப்புக்கள் குறைவாக உள்ள உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுத்து உட்கொள்ள விரும்புகின்றனர். இறைச்சியில் அனைத்துச் சத்துகளும் வளமாகவே உள்ளன.

இருப்பினும் அனைத்து இறைச்சியிலும் கொழுப்புக்கள் குறைவாக இருக்க வாய்ப்பில்லை. ஆனால் முயல் கறியில் இன்றையகால தலை முறையினர் எதிர்பார்க்கும் வகையிலான அத்தியாவசிய சத்துக்கள் வளமாக நிறைந்துள்ளன.

மற்றைய இறைச்சிகளுடன் ஒப்பிடுகையில் முயல் கறியில் கொலஸ்ட்ரால் மிகவும் குறைவாக உள்ளது. எனவே எடையைப் பராமரிக்க நினைப்போர் முயல் கறியை அச்சமின்றிச் சாப்பிடலாம்.

**குடல் பாதை பிரச்சினை**

முயல் இறைச்சி எளிதில் செரிமானமாகக்கூடிய புரோட்டீன்களைக் கொண்டுள்ளது. இதனால் இதனை உட்கொண்ட பின்னர் எந்த ஒரு இம்சையையும் சந்திக்கமாட்டோம். எனவே கடுமையான குடல் பாதை பிரச்சினை உள்ளவர்களும் இதனைச் சாப்பிடலாம்.

**உயர் இரத்த அழுத்தம்**

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் சோடியம் அதிகம் உள்ள உணவுப் பொருள்களை உட்கொள்ளக்கூடாது. ஆனால் முயல் கறியில் சோடியம் குறைவாக இருப்பதால், இதனை அத்தகையவர்கள் தாராளமாக உட்கொள்ளலாம்.

**இதய நோய்**


ஏனைய கறிகளுடன் ஒப்பிடும் போது முயல் கறியில் செறிவான கொழுப்பு அமிலங்கள் குறைவாகவும், இதயத்தைப் பாதிக்காத கொழுப்பு அமிலங்கள் அதிகமாகவும் இருப்பதால், இதய நோய் உள்ளவர்கள் எவ்வித பயமும் இல்லாமல் முயல் கறியைச் சாப்பிடலாம்.

**கல்சியம் மற்றும் பொஸ்பரஸ்**

மற்றைய இறைச்சியுடன் ஒப்பிடும்போது முயல் இறைச்சியில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் அதிகளவில் நிறைந்துள்ளது.



# காளான் சாப்பிட்டால் நீண்டகாலம் வாழலாம்



காளான் சாப்பிட்டால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பு தடுக்கப்படுகிறது.

காளானில் உள்ள லென்ட்டைசின், எரிட்டிடைனின் என்ற வேதிப் பொருள்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசஸ்ரைடு பாஸ்போலிட் போன்றவற்றை அதிகமாகக் குறைக்கின்றன.

காளான்களை உணவாக உட்கொள்வதன் மூலம் சத்துப் பற்றாக்குறையைப் போக்க முடியும். காளான்களில் புரதச் சத்து, நார்ச்சத்து, விற்றமின்கள், தாது உப்புகள், அமினோ அமிலங்கள் அதிக அளவிலும், கொழுப்பு, மாச்சத்து குறைவான அளவிலும் உள்ளன.

காய்கறிகள் மற்றும் பழங்களை விட காளான்களில் புரதச்சத்து அதிகமாக உள்ளது. போலிக் அமிலம், இரும்பு, கல்சியம், பொஸ் பரஸ் போன்ற சத்துகள் அதிகளவில் இருப்பதால் இரத்த சோகைக்கு இது சிறந்த மருந்து.

நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த உணவு. நார்ச்சத்து அதிகம் இருப்பதால், மலச்சிக்கல், வயிற்றுக் கோளாறு போன்ற நோய்களைப் போக்கும்.


இதயத்தைப் பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம். மேலும் காளானில் உள்ள வேதிப் பொருள்கள் இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர்செய் யும். காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும்.

மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் காளான் குணப்படுத்துகிறது.

தினமும் காளான் சூப் பருகுவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச்சத்து உள்ளது. மேலும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளதால், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்குக் காளான் சிறந்த ஊட்டசத்தாக அமைகிறது. கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உடல் இளைத்தவர்கள் தினமும் காளான் சூப் அருந்தி வந்தால் விரைவில் உடல் தேறும்.

**காளானில் உள்ள வேதிப் பொருள்கள் இரத்தநாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர் செய்யும். காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்கு சிறந்த நிவாரணியாகும்.**




# முதலாவது குளோனிங் உயிரினமான டோலி பிறந்த கதை



உலகில் முதன்முறையாக குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட உயிரினம் டோலி (செம்மறி ஆடு) ஆகும்.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் ரோஸ்லின் ஆராய்ச்சிக் கூடத்தில் முதன்முதலாக டோலி என்ற செம்மறியாடு குளோனிங் முறையில் பிறந்தது. இயன் வில்மட் மற்றும் கீத் கேம்பல் ஆகியோர் இணைந்து, இந்த வளர்ப்பு விலங்கை உருவாக்கினர்.

டோலியை உருவாக்குவதற்கு, 277 கருமுட்டைகள் தேவைப்பட்டன. 278 ஆவது கருமுட்டையால் தான், டோலி பிறந்தது.

சோதனைக்குழாய் மூலம் வளர்க்கப்பட்ட டோலி, எம்பிரியோ வளர்ச்சிக்குப் பின்னர் ஒரு பெண் ஆட்டின் கர்ப்பப்பைக்குள் வைக்கப்பட்டு முழு வடிவம் பெற்றது.

இதன் உருவாக்கத்தில் தலைமை வகித்தவரான லான் வில்மட், செம்மறி யாட்டின் படைப்பாளி என்று புகழப்படுகிறார்.

இந்த ஆட்டுக்கு பெற்றோர், மூவர் உள்ளனர். மரபணுக் கருக்கள் கொடுத்த இரு ஆடுகளும், தனது கருப்பையில் வளர்த்த மற் றொரு ஆடும் சேர்ந்து மூன்று பெற்றோர் ஆகின்றனர்.

வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு சாதனை படைத்த டோலி ஆறரை ஆண்டுகள் கழித்து, 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி இறந்தது.

**இறந்தாலும் ஆராய்ச்சிக்கு உதவிய டோலி**

முதலில் டோலிக்கு மூட்டுவலி நோய்த் தாக்கம் ஏற்பட்டது. பின்பு நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டது. எனினும், இதன் பால்மடிகளில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு, உறைய வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன.

இந்தத் திசுக்களைப் பயன்படுத்தி 14 ஆண்டுகளுக்கு பிறகு நான்கு ஆடுகள் உருவாக்கப்பட்டன. டோலியை உருவாக்குவதற்கு தலா 277 கருமுட்டைகள் தேவைப்பட்டாலும், புதிய ஆடுகள் ஒவ்வொன்றுக்கும் தலா ஐந்து முட்டைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

இந்த முறையைப் பின்பற்றி பிற்காலங்களில் பன்றி, ஆடு, குதிரை, நாய் மற்றும் பூனை போன்ற உயிரினங்கள் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆட்டுக்கு பெற்றோர், மூவர் உள்ளனர். மரபணுக் கருக்கள் கொடுத்த இரு ஆடுகளும், தனது கருப்பையில் வளர்த்த மற்றொரு ஆடும் சேர்ந்து மூன்று பெற்றோர் ஆகின்றனர்.**



பேராயர் பாதிக்கப்பட்ட மூதாட்டி ஒருவருக்கு உணவுப் பொதியை வழங்குகிறார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப்பொதி விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி டானியேல் எஸ். தியாகராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சியிலுள்ள பாரதிபுரம், முல்லைத்தீவிலுள்ள முறிகண்டி, செல்வபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு தொகுதி நிவாரணம் வழங்கப்பட்டது.

முதல் கட்டமாக இந்த நிவாரணம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன், மேலும் பல இடங்களுக்கு இதனை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக தென்னிந்திய திருச்சபையின் சமூக செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

கடும் வறட்சியால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ள நிலையில், இவ்வா றான நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும், மேலதிக பணிகளை தொண்டு நிறுவனங்களும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் ஆயர் குறிப்பிட்டார்.

போரால் பாதிக்கப்பட்டு மக்கள் அதி லிருந்து மீண்டெழுந்து வருகையில் இயற்கையும் அவர்களை சோதிப்பதாகவும், மழை வீழ்ச்சி விரைவில் போதுமான அளவு கிடைக்கவும், வறட்சி, வறுமை போன்றவை நீங்கி மக்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழவும் இறைவனை பிரார்த்திப்பதாகவும் பேராயர் குறிப்பிட்டார். (க-18)

# முகமாலையில் வெடிபொருள் அகற்றுவதில் பெரும் சவால்

கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் வெடி பொருள்களை அகற்றுவதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வரும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

போரின் பின்னரான மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தும் வகையிலும் வெடி பொருள் அச்சத்தால் கைவிடப்பட்ட பயிர்ச் செய்கை நிலங்களில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில் பல்வேறு நிறுவனங்கள் வெடி பொருள்களை அகற்றி வருகின்றன. இந்த நிலையில் கடந்த 1999 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டுவரையான ஒன்பது வருடங்கள் போர் வலயமாகக் காணப்பட்ட முகமாலைப் பகுதியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-55)

# வவுனியா நகரசபை முன்பாக மீண்டும் தொடரும் போராட்டம்

## சுகாதார ஊழியர்கள் போர்க்கொடி

வவுனியா, ஜூலை 16

வவுனியா நகர சபையில் தற்காலிகமாக கடமையாற்றிய 7 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும், 30 வருடங்களுக்கு மேலாக இதுவரைக்கும் வழங்கப்படாத தரமுயர்வை உடனடியாக வழங்கப்பட வேண்டுமெனக் கோரியும் மீண்டும் அமைதியான முறையில் வவுனியாநகர சபையின் முன்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றும் தொடர்ந்தது.



பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக நேற்றும் போராட்டம்

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளைத் தலைவர் ஆர்.சித்திரன் தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் வவுனியா நகர சபையில் கடமையாற்றும் அனைத்து சுகாதார ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக அகில இலங்கை அரச பொது ஊழியர்சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளைத் தலைவர் ஆர்.சித்திரனிடம் கேட்டபோது;

வவுனியா நகர சபையில் தற்காலிகமாக கடமையாற்றிய 7 தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு கடந்த சில வாரங்களுக்கு முன்பு வவுனியா நகர சபைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அப்போது அங்கு வருகை தந்தவர்கள் உரிய தீர்வைத் தருகிறோம். நீங்கள் போராட்டத்தை கைவிடுங்கள் என்றனர்.

அந்த வாக்குறுதியை நம்பியதால் நாம் போராட்டத்தைக் கைவிட்டோம். ஆனால் இது வரை அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஏழு பேருக்கும் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும். இல்லையேல் எமது போராட்டத்தைத் தொடர்வோம் என்றார். (க-402)



முல்லை மாவட்ட வள்ளுவர் கிராமத்தில் வேள்ட்விஷன் நிறுவனத்தினரால் 20 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுவர் மேம்பாட்டு நிலையத்துக்கான அடிக்கல்லை வேள்ட் விஷன் முல்லை மாவட்டப் பணியாளர் யூட் நிசாந்தன் நட்டு வைப்பதைக் காணலாம். (க-18)

# புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதிகளில் அதிக விலையில் கடலுணவுகள்

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கடல் உணவுகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதால் இவற்றை நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள பொதுச் சந்தைகளில் கடலுணவுகளுக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அதிகூடிய விலைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

கிலோ ஒன்று 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட மீன் வகைகள் 600 ரூபா முதல் 650 ரூபா வரையிலும், கிலோ ஒன்று 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட இறால் ஆயிரம் ரூபாவுக்கும் கூடிய விலையிலும் விற்பனை செய் யப்படுகின்றன.

இதனால் இந்தச் சந்தைகளில் கடலுணவுகளை வாங்கும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் சில மீன் வகைகள் குளிரூட்டப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இவை பழுதடைந்தும் காணப்படுகின்றன.



கோப்புப்படம்

இவ்வாறு பழுதடைந்த மீன் வகைகளும் அதிகூடிய விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதால் மக்களுக்கு சுகாதார ரீதியிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (க-55)

# தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம் தொடர்பான கலந்துரையாடல்



கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள்

மன்னார், ஜூலை 16

தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்னாயத்தங்கள் தொடர்பில் மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி மேல், உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.பரமதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் வருடந்தோறும் தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த வருடத்துக்கான தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம்நேற்று 14ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரையில் இடம்பெறவுள்ளது.

குறித்த தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம் தொடர்பிலான மன்னார் மாவட்ட நிகழ்வுகள் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னாரில் இடம்பெறவி ருக்கும் மேற்படி தேசிய சமூக ஒருமைப்பாட்டு வாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முன்னாயத்தங்கள் தொடர்பில் ஆராயும் மீளாய்வு கலந்துரையாடலே தற்போது இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படிநிகழ்வுக்குஅனுசரணை வழங்கும் ஐ.நாவின் தன்னார்வத் தொண்டுப் பணியாளர்களும்கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-56)

வலி. தென்மேற்கு பிரதேச சபை
16 JUL 2014



கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டின் போது...

## சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கண்காட்சி, சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி, ஜூலை 16

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்றல் - கற்பித்தல் உபகரணங்களின் கண்காட்சியும் கல்லூரியைச் சேர்ந்த 508 மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ல. முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தமும் சிறப்பு விருந்தினராக வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கஜபதியும் கலந்து கொண்டனர்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 12 வரையான 508 மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகையின் முதற் பிரதியை கல்லூரி பொறுப்பாசிரியை வெளியிட சிறப்பு விருந்தினர் பெற்றுக் கொண்டார். (வ-9)

## மலக்கழிவுகளால் மாசடையும் கிணறுகள்

வலி.தென்மேற்கு, ஜூலை 16

கல்லுண்டாய்ப் பகுதியில் தொடர்ந்து கொட்டப்பட்டு வரும் மலக்கழிவுகளால் அந்தப் பிரதேசத்தை அண்டியுள்ள கிணறுகள் மாசடைகின்றன.

இதனால் தொற்றுநோய்கள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, மக்களின் நலன்கருதி மலக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான மாற்று நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கல்லுண்டாய்ப் பகுதியில் தொடர்ந்து மலக்கழிவுகள் கொட்டப்படுவதால் ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களிலுள்ள கிணறுகள் மாசடைந்து வருகின்றன.

குறித்த கிணற்று நீரைப் பயன்படுத்தும் மக்கள் நீரால் ஏற்படக்கூடிய வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்றுநோய்களுக்கு உள்ளாகிறார்கள்.

அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளைப் பாதுகாக்கும் வகையிலும், தொற்றுநோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வகையிலும் கல்லுண்டாயில் கொட்டப்படும் மலக்கழிவுகளை தொடர்ந்தும் அந்தப் பகுதியில் கொட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே மக்களின் நலன்கருதி மலக்கழிவுகளைக் கொட்டுவதற்கு மாற்று இடத்தைத் தெரிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரியுள்ளனர். (வ-115)

## தென்மராட்சிப் பகுதியில் 645 இந்தியன் வீடுகள்

தென்மராட்சி, ஜூலை 16

தென்மராட்சி பிரதேசத்தில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகள் இந்தியன் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு 645 வீடுகளுக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, அல்லாரை ஆகிய பிரிவுகளில் 250 வீடுகள் அமைப்பதற்கான தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் கெற்பேலி, உசன், எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய பிரிவுகளிலும் திட்டம் மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை பிரதேசத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் 600 க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் பகுதிச் சேதம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு திட்டக் குழுவால் பார்வையிட்ட பின்னர் தெரிவுகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வீதி திருத்தப் பணிக்கு பொதுக் கிணற்று நீர்

### நிறுத்துமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஜூலை 16

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில், ஆனைக்கோட்டையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றை வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக பயன்படுத்தி வருவதால் கிணற்று நீர் மாசடைவதாகத் தெரிவித்துள்ள உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான ஆ.சி.கணேசவேல் மக்களின் நலன்கருதி பவுசர் மூலம் நீர் எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரையும் செயலாளரையும் கோரியுள்ளார்.



யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக காரைநகர் செல்லும் பிரதான வீதியில் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் உள்ள புளியங்கண்டு பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக வழிப்போக்கர்களின் நன்மை கருதி பல வருடங்களுக்கு முன்பு பொதுக் கிணறும் சுமைதாங்கியும் அமைக்கப்பட்டன. வீதியால் செல்பவர்கள் மட்டுமன்றி அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களும் குறித்த கிணற்று நீரைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி வேலைகளைச் செய்து வரும் ஒப்பந்தகாரரால் தினமும் இந்தக் கிணற்றிலிருந்து பவுசர் மூலம் நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக கிணற்று நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வரும் இந்த நிலையில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தக் கிணற்று நீரைப் பயன்படுத்துவதால் நீர் மட்டம் வற்றி வருவதுடன் மாசடையும் அபாயமும் தோன்றியுள்ளது.

இந்த நிலை குறித்து அந்தப் பகுதி மக்கள் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் முறையிட்டதை அடுத்து வீதி அபிவிருத்திக்காக கிணற்று நீரைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு சங்கச் செயலாளர் பிரதேச சபைச் செயலாளரையும் தவிசாளரை கோரியுள்ளார். (வ-115)

## துர்நாற்றம் வீசும் வடிகால்வாய்



யாழ்ப்பாணம், ஜூலை 16

கே.கே.எஸ்.வீதியில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாகச் செல்லும் வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாததால் அதற்குள் தேங்கி நிற்கும் கழிவு நீரால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இந்தக் கழிவு நீர் வழிந்தோட முடியாத அளவுக்கு அதற்குள் குப்பைகள் மற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை நிறைந்து காணப்படுகின்றன.

அத்துடன் வடிகால்வாயின் மேல் பாதுகாப்பு மூடிகள் ஆங்காங்கே கழற்றப்பட்டு காணப்படுகின்றன. (வ-17)

## வீதியில் தள்ளாடிய இருவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 16

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதியில் மது போதையில் தள்ளாடிய இருவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரி பொலிஸார் மட்டுவிலைச் சேர்ந்த இருவருக்கு எதிராக மது போதையில் வீதியில் செல்வோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதாக குற்றம் சாட்டி சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் இருவரையும் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9)

## உள்ளூராட்சி தொடர்பான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான உள்ளூராட்சி தொடர்பான தேசியக் கொள்கை பற்றிய விழிப்பூட்டல் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.சிற்றி ஹோட்டலில் இடம்பெறும்.

வடமாகாண முதலமைச்சரும், மாகாண உள்ளூராட்சி அமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையமும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொள்வர் என்று இணையச் செயலாளர் இ.சண்முகராஜா அறிவித்துள்ளார். (வ-9)

## சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவசபை கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு "தேவிபாகவதம்" என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (ஒ-173)

# காளான் செய்கையில் ஈடுபடுவோருக்கு உதவிகள் வழங்கத் தயார்

### தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூலை 16

"யாழ்.மாவட்டத்தில் காளான் செய்கையில் ஈடுபடுவர்களுக்கு ஊக்குவிப்பு, உதவிகள் வழங்கப்படவுள்ளன. காளான் செய்கையில் ஈடுபட விரும்புவோர் தமது பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

காளான் பயிர்ச்செய்கை தொடர்பாக விவசாயப் பணிப்பாளர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில்;

சமகாலச் சூழலில் காளான் செய்கை மூலம் நல்ல வருமானத்தை பெற்றுக் கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தின் நாளாந்த தேவை அளவுக்கு ஏற்ற அளவு காளான் செய்கை மேற்கொள்ளப்படாமையால் விலை அதிகரிப்பும் பாவனையாளர்களுக்கு நுகர்ச்சி அளவுக்கு கிடைக்காமையினால் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

காளான் செய்கையில் ஈடுபடுவதற்கு பெரியளவில் முதலீடோ இட வசதியோ மற்றும் நெருக்கடியை எதிர்கொள்ளவோ தேவையில்லை. ஆர்வம் உள்ளவர்கள் இலகுவான முறையில் பகுதி நேரமாகவே மேற்கொள்ள முடியும்.

விவசாயி என்ற வகையில் கடும் உடல் உழைப்பு மற்றும் களைப்பு இன்றி வருமானத்தை ஈட்டலாம். உற்பத்திச் செலவு மிகக் குறைவு. நிறைய சந்தை வாய்ப்பும் உள்ளது. உற்பத்திச் செலவின் மூன்று மடங்கு வருமானம் பெறலாம்.

காளான் செய்கையில் ஈடுபட விரும்புவோருக்கு சகல உதவிகள், ஒத்துழைப்புகள் பயிற்சிகளை வழங்கி உதவுவதற்கு விவசாயத் திணைக்களம் தயாராக உள்ளது. காளான் செய்கையில் ஈடுபடும் பயனாளிகளுக்கு தொண்டு நிறுவனங்களும் உதவுவதற்குத் தயாராக உள்ளன. நல்ல வருமானத்தோடு குறுகிய கால தொழில் முயற்சி இதற்கு கடன் உதவிகளையும் வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

காளான் பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்புவோர் தமது பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாக தமது சுய விவரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பத்தை திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்களத்தில் நேரடியாகவோ கடிதம் மூலமோ சேர்ப்பிக்கலாம்- என்று கூறினார். (வ-11)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசு கடும் போக்கை கைவிட வேண்டும்

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் இரண்டாவது தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபோது வரப்போகும் நெருக்கடியைத் தணிப்பதற்கு இலங்கை சில நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐ.நா.விசாரணைக்குழு இலங்கை வருவதற்கு இலங்கை அரசு தடை விதித்தபோது இந்த நம்பிக்கை சிதறுண்டு போனது. அரசு இத்துடன் நின்றுவிடவில்லை. வடக்கில் இராணுவத்துக்கான காணி அபகரிப்பை முடுக்கிவிட்டது. காணிகளின் சொந்தக்காரர்கள் அதற்கான உறுதிகளை வைத்திருந்தும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அல்லது இராணுவ முகாம் விஸ்தரிப்பு என்ற பெயரில் அவர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின் றன. நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி படையினரின் உதவியுடன் தமது நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் திரும்பவும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டு வசதி குறைந்த கஷ்டமான பகுதிகளில் குடிசைகளிலும் முகாம்களிலும் வாழ படையினரின் பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற விளையாட்ட வசதிகளைக் கருத்தில் கொண்டு அவர்களின் தேவைகளுக்கு மேலதிகமாகக் காணி கள் சுவீகரிக்கப்படுகின்றன. வடமாகாண ஆளுநர் சந்திர சிறிக்கு மேலும் ஐந்து வருட காலத்துக்குப் பதவி நீடிப்பு வழங்கிய உள்நோக்கமே காணி அபகரிப்புப் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தான். போரின் பின்னரான அரசின் நிகழ்ச்சி நிரலைக் கச்சிதமாக நிறைவேற்ற மிகவும் பொருத்த மானவ ராக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார் சந்திரசிறி. அவரின் செயற்பாட் டின் மூலம் அடுத்த ஐந்து வருட காலத்தில் வடக்கின் இனப்பரம் பலில் மாற்றம் ஏற்படுத்த முடியும் என்று அரசு கருதக்கூடும்.

ஆகவே இவற்றை நோக்கும்போது இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் கடினமடைவது தெரிகிறது. தென்னாபிரிக்க உப ஜனாதிபதி ரமபோஷவை அரசு வரவழைத்தபோதிலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதில் சிறிய அளவு விட்டுக் கொடுப்புக்கும் அரசு தயாரில்லை. அரசின் இரட்டை வேடம் குறித்து ஏற்கனவே இப்பத்தியில் நாம் தெரிவித்திருந்தோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்க ளுக்கோ, சர்வதேச அழுத்தங்களுக்கோ பணிந்து போகாத – சவால் விடும் போக்கையே அரசு கடைப்பிடித்து வருகிறது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோன்று அரசில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் சுமுகமான தீர்வொன்றை எட்டுவதற்குத் தடையாக இருந்து வருகின்றன. ஐ.நா. விசாரணைக்குழு இலங்கை வராமலேயே அறிக்கை தயாரித்து அந்த அறிக்கை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும்போது ஒத்துழையாமையின் விளைவை அரசு உணர்ந்துகொள்ள நேரிடும்.

இப்படியான நிலையில் அரசிலுள்ள இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை கொண்ட சிரேஷ்ட அமைச்சர்கள் முன் வந்து குரல்கொடுப்பது அவசியமாகும். மீன்பிடி மற்றும் நீரி யல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துகளை ஜனாதிபதி கவனத்தில் எடுத்து செயற்படுவது அவசியம். டாக் டர் ராஜித சேனாரத்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நேரடியாகப் பேசவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சிறந்த யதார்த்தகரமான இடமாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு காணப்படுகிறது. எனினும் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள மாட்டோம் என்று கூட்டமைப்புக் கூறிவருகிறது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தைப் போக்கினால் மட்டுமே அந்தக் கட்சியைத் தெரிவுக்குழுவுக்குள் கொண்டுவர முடியும். அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்தேகத்தைப் போக்குவதற்கு அரசும் கூட்டமைப்பும் இருதரப்பு பேச்சுகளை நடத்தலாம். இதனைத் தவிர வேறு வழி இல்லை – என்று கூறியுள்ளார் ராஜித சேனாரத்ன.

இதேபோன்று, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுடன் அரசு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது போனதற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வருத்தம் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் மனங்களை அரசால் வெற்றிகொள்ள முடியாதுபோயுள்ளதாகத் தெரிவித்த அவர், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளு டன் அரசால் இணக்கப்பாட்டுக்கு வரமுடியாது போனமையே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளார். தமிழர் பிரச்சினை தொடர்பில் அரசு கடும் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு ஜனாதிபதி மட்டும் காரணமல்ல. அமைச்சரவையும் ஜனாதிபதியுடன் நெருக்க மானவர்களும்தான் காரணம். ராஜித சேனாரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் கருத்து இவர்களது சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அரசு தனது கடும் போக்கைக் கைவிடவேண்டும்.

# பங்களிப்பு வேண்டுமெனில் பின்வாங்கிக் கொள்ள தயார்

- அமைச்சர்களின் சுடு சொற்களால் ரமபோஷ கவலை.
- இரு தரப்புப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் சூழ்நிலை
- இலங்கை அரசின் யோசனைகளை கோரியுள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

இலங்கை வந்திருந்த தென்னாபிரிக்க உதவி ஜனாதிபதி சிறில் ரமபோஷ தமது கடமைகளை ஆரம்பிக்க முன் இலங்கை ஜனாதிபதியிடம் பின்வருமாறு காட்டமாகக் கூறினார்.:-

"ஜனாதிபதி அவர்களே உங்கள் அரசின் அழைப்பின் பேரிலேயே நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். எங்கள் பங்கு பணியில் விருப்பமில்லையென்றால் கூறுங்கள். நாங்கள் பின்வாங்கிக் கொள்கிறோம். எங்கள் நாட்டின் கௌரவத்தை நாங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்."

இலங்கையின் நிலைப்பாட்டை விவரிக்கும்படி ஜனாதிபதி வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிசைக் கேட்டுக் கொண்டார்.

ரமபோஷ தங்களது முன்முயற்சி இந்தியாவை மீறிச் செல்வதாக தவறாகப் புரிந்து கொள்ளப்படலாகாது என்று மேலும் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தேசிய பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை இந்தியாவிடமிருந்து தொடர்ந்து உதவிகள் பெற்று வருகின்றது. அவர்களின் தொடர்ச்சியான உதவியில் வடக்கு மாகாண பிரச்சினையும் தீர்த்துக் கொள்ளப்பட முடியும். வெளிநாடுகளிடமிருந்து இந்த மாதிரி விடயங்களில் இலங்கை பலவற்றை கற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

சில அரசுத் தலைவர்களும் அமைச்சர்களும் தென்னாபிரிக்க குழுவினரின் வருகை பற்றிக் குறிப்பிட்டிருந்த சொற்கள் அவர்களுக்கு கவலையை கொடுப்பவையாக இருந்துள்ளன. அரச பங்காளிக் கட்சியொன்றான தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ஸ தென்னாபிரிக்க குழுவினர் உல்லாசப் பயணிகளாக வருவதாக அரசுத் தலைவர்கள் சிலர் தம்மிடம் கூறியதாக தெரிவித்திருந்தார். இன்னொரு அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்க தேசியப் பிரச்சினையில் வெளிநாட்டுத் தலையீடு இருக்குமானால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்திருந்தார்.

பதில் வெளியுறவு அமைச்சர் நியமொல் பெரேரா நாடாளுமன்றத்தில் தென்னாபிரிக்கக் குழுவினரின் வருகை பற்றி விளக்கமொன்றை வழங்கியபோது தென்னாபிரிக்காவின் உண்மை நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காகவே சிறில் ரமபோஷவை தென்னாபிரிக்க அதிபர் ஜேகொப்சூமா, இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார் என்று கூறினார். தென்னாபிரிக்கா இதில் நடுவராக பங்கு எதும் வகிக்கப் போவதில்லையென்றும் தெளிவுபடுத்தினார். ஒரு கிழமைக்கு முன்னர் அமைச்சரவைக் கூட்டமொன்றைத் தொடர்ந்து ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர்களிடம் பேசுகையில், ரமபோஷ குழுவினர் ஒரு உல்லாசப் பயணிகளாகவே இலங்கை வருகிறார்கள் என்றும் அதிகாரபூர்வ செயற்பாடுகள் எதுவும் அவர்களுக்கு இருக்காது என்றும் கூறியிருந்தார். சில வாரங்களுக்கு முன்னர் ரம்புக்வெல செய்தியாளர்களிடம் பேசுகையில், ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள எண்ணெய்த் தடையை இலங்கை மீறி வருவதாகக் கூறியிருந்ததுடன் தாம் சொல்வதன் பாரதூரம் தமக்கு தெரியும் என்றும் தெரிவித்திருந்தார். அதற்குப்பின் 24 மணித்தியாலங்கள் கூட கடக் காத நிலையில் அதனை வெளியுறவுஅமைச்சு மறுத்திருந்தது. ரம்புக்வெலவின் இந்தக் கருத்து இலங்கையை சங்கடமான ஒரு நிலைக்குத் தள்ளியிருப்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷ கவலை தெரிவித்தார்.

எனவே ரமபோஷவின் வருகையும் அதிகாரபூர்வமானதே. இப்பொழுது தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுபவங்களில் இருந்து பெற்றுக் கொண்டவைகளின் அடிப்படையில் தனது சொந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதில் அரசு ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இது தற்பொழுது ஐ.நா. சர்வதேச விசாரணைக் குழுவின் பரிசீலனைக்கு வரும் விடயங்களை எதிர் கொள்வதை நோக்கமாகக் கொண்டிருக்கும் என்று தெரிகின்றது. தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் குற்றசாட்டுக்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள். பரிசீலனையின் பின் மன்னிப்பு வழங்கப்பட்டனர். ஆனால் இலங்கை அரசின் செயற்பாடுகள் மிகவும் பிந்திய நிலையில் காணப்படுவதாகத் தெரிகின்றது.

ரமபோஷவுடனான பேச்சு வார்த்தைகளின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளாதிருப்பது குறித்து அவர்களை கண்டித்துக் கருத்துத் தெரிவித்தார். த.தே.கூட்டமைப்பினர் தமது கோரிக்கைகளையே வற்புறுத்துவதாய் இருக்கிறார்கள் என்றார். ரமபோஷ இடைமறித்து த.தே.கூட்டமைப்பு நியாயபூர்வமாக நடந்து கொண்டால் என்ன நடக்கும் என்றார். நீங்கள் பேச்சுக்களை ஆரம்பிப்பீர்களா என்றும் கேட்டார்.

அதைப் பற்றி யோசிக்கலாம் என்று ராஜபக்ஷ பதிலளித்திருந்தார். கதாபாத்திரங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள வேண்டும். தென்னாபிரிக்க காங்கிரஸ் வெள்ளையரின் ஆட்சியாளர்களுடன் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபட்டு வந்துள்ளது. முறையான பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் என்று தெரிவித்திருந்தார் ரமபோஷ. தென்னாபிரிக்காவின் நிலைப்பாட்டிலிருந்து உங்களுக்கு உதவுவதற்காகவே நாங்கள் வந்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். ஜனாதிபதிக்கும் ரமபோஷவுக்கும் இடையிலான ஒருவருக்கொருவர் கலந்துரையாடலின் விவரம் எதுவும் தெரியவரவில்லை. ஆனால் எந்த ஒரு தீர்வும் தேசிய பிரச்சினையில் ஏற்பட வேண்டுமானால் பெரும்பான்மை சிங்கள மக்களின் கருத்துக்குத் தாம் இடம் கொடுத்தாக வேண்டும் என்று ராஜபக்ஷ தெரிவித்ததாகத் தெரிகின்றது. ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வருகின்றது. அதனால் ஆளும் கட்சிக்கு அவர்களின் ஆதரவு அவசியம் என்று கூறியுள்ளார். இதன்படி மேற்கொண்டும் இதில் முன்னேற்றம் ஏற்படுவதென்றால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நடக்காது என்பது தான் வெளிப்பாடாகத் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களின் போது தென்னாபிரிக்க உதவியில் அரசுடன் பேசத்தயாராய் இருக்கிறீர்களா என்று ரமபோஷ கேட் டுள்ளார். அவ்வாறான ஒரு செயற்பாட் டுக்குத் தாங்கள் தயாராய் இருப்பதாகக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள் ளார். தென்னாபிரிக்க ஆதரவில் இரு தரப்பு பேச்சுக்கு தயாரா என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு எங்கள் பதில் நியாயமான, செயற்படக்கூடிய, நிலைத்து நிற்கக் கூடிய, ஒரு தீர்வுக்கு நாங்கள் எங்களை அர்ப்பணிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்று தாம் பதில் கூறியதாக சம்பந்தன் தெரிவித்தார்.

நாங்கள் பேச்சுக்களை கைவிட்டு வெளியேறவில்லை. 2012 ஆம் ஆண்டு ஜனவரியில் அரசு தான் பேச்சுக்களை முறித்துக்கொண்டுவெளியேறியது என்று கூறியதாகவும் சம்பந்தன் தெரி வித்தார். சில அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் ஆளும் கட்சியின் பங்காளிகளாக இருந்து கொண்டு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள அம்சங்களை குறைத்து விடும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள் என்பதையும் தென்னாபிரிக்க குழுவினருக்கு விளக்கிக் கூறியதாக சம்பந்தன் தெரிவித்தார்.

இவ்வாறு தென்னாபிரிக்க துணை அதிபர் சிறில் ரமபோஷவின் தலைமையிலான குழுவினரின் வருகையின் மூலம் வெளிப்பட்டிருக்கும் விடயம், ஜனாதிபதியானவர் தென்னாபிரிக்க ஆதரவில் இரு தரப்பு பேச்சுக்கள் தொடர்பாக யோசித்துப் பார்க்கலாம் என்று கூறியிருப்பதும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் "ஆம்" என்ற வகையில் சாதகமான பதிலும் வெளிப்பட்டிருப்பது கண்கூடு. இது நாடாளுமன்றத்தில் பதில் வெளியுறவு அமைச்சர் நியோமல் பெரேராவால் அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடாக தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கொப் சூமா தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஆணைக்குழுவின் மாதிரியில் இலங்கையில் ஒரு பொறிமுறையை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கே ரமபோஷவை நியமித்திருக்கிறார் என்று எடுத்துக்கூறியிருக்கும் நிலையில் உருவாகியுள்ள வெளிப்பாடாகும்.

எதுவானாலும் இது தொடர்பாக இது வரை நடந்து முடிந்துள்ள காரிய காரணங்கள் வெளிப்படைத்தன்மையில்லாமலும் தவறான வழிகாட்டுவதாகவும் நடந்தேறியுள்ளன என்பது எந்த ஒரு சாதாரண ஊமைக்கும் விளங்கியிருக்கக் கூடிய விடயம். இது அரசின் நம்பகத்தன்மை குறித்து மேலும் தடுமாற்றங்களையும் சங்கடங்களையும் ஏற்படுத்துவதாக இருக்கப் போகின்றது. மேலும் உண்மைக் கதை ஒன்றாக இருக்கும் போது நாட்டு மக்களையும் வெளி உலகத்தையும் வேறு ஒன்றை நம்பும்படி செய்வது இன்னுமொரு தடவை நிறைவேறியிருக்கின்றது.

**ரணில்தெரிவித்த கருத்து**

ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் ரமபோஷவை சந்தித்துப் பேசியிருந்தார். தென்னாபிரிக்க முன் முயற்சியை ஜெனிவா செயற்பாட்டை ஓரம் கட்டுகை யில் அரசு பயன்படுத்திக் கொள்ளாதிருப்பதை உறுதிபடுத்திக் கொள்ளும்படி ரமபோஷவை ரணில் கேட்டுக் கொண்டார். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை அவர் குறிப்பிட்டார். மற்றும் இந்தியா இதுவரை காலமாக மேற்கொண்டு வந்துள்ள பங்கு பணியை கருத்தில் வைத்துக்கொள்ளும் படியும் அவர் ரமபோஷவை கேட்டுக் கொண்டார். ரமபோஷ குழுவினர் யாழ்ப்பாணத்துக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை தெரிந்து கொண்டனர். வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் எந்த நிலைமையிலும் இந்தியாவின் பங்கு பணியை மனதில் வைத்துச் செயற்படும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். வடக்கில் இடம்பெறும் நில அபகரிப்பு பற்றியும் ராணுவ மயப்படுத்தல் தொடர்பாகவும் நீண்ட நேரம் விக்னேஸ்வரன் அவர்களுக்கு விளக்கினார்.

**பீரிஸின் இந்திய பயணம்**

கடந்த வாரம் வெளியுறவு அமைச்சர் பீரிஸ் இந்தியாவுக்கு சென்றிருந்த போது இந்தியா வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அம்மையாரையும் சந்தித்திருந்தார். சுமார் இரண்டு மணிநேரம் கலந்துரையாடலின் போது;

இலங்கை அரசின் தீர்வுக்கான ஆலோசனைகள் என்ன என்பதைத் தான் அறிய விரும்புவதாக அவர் கேட்டிருந்தார். அரசின் ஆலோசனைகள் குறித்து தமது இலங்கை வருகைக்கு முன்னர் அறிந்து கொள்ள விரும்புவதாக சுஷ்மா தெரிவித்துள்ளார் என்று விடயம் அறிந்த வட்டாரங் களில் இருந்து அறிய முடிகிறது.

# சேதனப் பயிர்ச் செய்கையும், அதன் முக்கியத்துவமும்

குமாரசாமி மதுசூதன்
விவசாயபீடம் 4 ஆம் வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எமது சொந்த மண் எத்தனையோ இன்னல்களைச் சுமந்த மண்ணாகும். எம் பூமித்தாய் எம்மைப் பிரசவித்த வலியைப் காட்டிலும் சபித்துப் போன வலிகளின் வடுக்களையே அதிகம் கொண்டிருப்பாள். கடந்த 2 தசாப்த காலங்களில் இரசாயனக் குண்டுத் தாக்குதலினால் எமது தாய்மண் இரசாயனத்தில் தோய்ந்து போனது. போர் முடிந்ததாலும் இன்னமும் எமது பூமித்தாய் இரசாயனங்களுடன் போராடிக் கொண்டுதான் இருக்கிறாள். இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்த கையோடு எஞ்சிப் போன பெருந்தொகை வெடி மருந்துகள் இரசாயன உரங்களாகப் பரிணமித்து விவசாய நிலங்களில் விளைச்சலை அதிகரித்தன. ஆனால் இன்று அவை உயிர் இறப்புகளின் விளைச்சலை அதிகரிக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் இரசாயன வளமாக்கிகளின் பயன்பாடு விவசாயிகளி டையே அதிகரித்து வருகிறது. ஒருபுறம் மண் வளமாக்கிகளின் பாவனையும், இன்னொரு புறம் பூச்சி, பீடைகளை கொல்லிப் பாவனையும் அதிகரித்தே வருகிறது. பூச்சி பீடை கொல்லிகளின் பாவனையாலும் பீடைகள் அழிவதாகத் தெரியவில்லை. இயற்கைத் தேர்வுக் கொள்கையின் தக்கன பிழைத்தலில் அவையும் இசைவாக்கம் அடைந்துவிட்டன போலும்.

பெருகிவிட்ட இரசாயனப் பாவனையால் அருகிவிட்ட இயற்கைத் தன்மையையே எம் விவசாய நிலங்கள் காண்பிக்கின்றன.

கவிஞன் ஒருவனின் பாடல் வரிகள் இவை.

“இன்று களையெடுக்க நேரமில்லை
மருந்தடிக்க நேரமுண்டு
நாளை மருந்தெடுக்க நேரமுண்டோ?”

பாரம்பரிய முறையான களைகளை வேரோடு பிடுங்குவதைத் தவிர்த்து இரசாயன களை கொல்லிகளைப் பாவிப்பதால் மண் இரசாயனத்தில் தோய்ந்து உணவில் அவை செறிந்து



நோய்களையே உண்டாக்கும் என்பதே இவ் வரிகளின் கருத்தாகும்.

இன்றைய காலகட்டங்களில் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் புற்றுநோய்ப் பெருக்க விதம் உயர்வாக இருப்பதன் பிரதான காரணம் விவசாய நிலங்களில் அதிகரித்த இரசாயனப் பாவனையேயாகும்.

எமது மக்கள் அனைவரும் சந்தைகளில் இன்று பச்சை மரக்கறிகளின் தோல்களுக்கு அப்பால் கடைகளில் விற்கும் இரசாயனங்களையே உட்கொள்கிறார்கள். எந்தவொரு விவசாய நடவடிக்கைகளுக்கும் அசேதன இரசாயனங்களையே வழிமுறையாக விவசாயிகள் பின்பற்றுகிறார்கள்.

இந்த அசேதன வளமாக்கிகளினால் விவசாய நிலம் காலப்போக்கில் இரசாயனம் செறிந்து விவசாயத்துக்கு உகந்ததல்லாததாக மாறும் அபாயமும், அந்த இரசாயனங்கள் நிலத்தடி நீரில் கலந்து தண்ணீரை நஞ்சாக்குவதும் தற்போதைய மிகப்பெரும் பிரச்சினையாக



உருவெடுத்துள்ளது.

இவற்றைத் தடுத்து முறையான விவசாய நடைமுறை ஒன்றை உருவாக்குதல் காலத்தின் கட்டாய தேவையாகும். இந்த அசேதன இரசாயனத்திற்கு மாற்றீடாக நாம் எதை உபயோகிக்கலாம் என்பது வினாவாக அமையக் கூடும். ஆம்! நாம் அனைவரும் வரலாற்றில் பின் நோக்கி நகர வேண்டும். எம் மூதாதையர்களின் இயற்கை யோடிணைந்த பயிர்ச் செய்கை முறையான சேதனப்பயிர்ச் செய்கை (organic farming) முறையையே பின்பற்ற வேண்டும். தற்போது உலகளாவிய ரீதியில் சேதனப் பயிர்ச்செய்கையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பயிர்ச் செய்கையின்போது இரசாயனங்கள் தவிர்க்கப்பட்டு கூட்டுப் பசளைகளே வளமாக்கிகளாகப் பயன்படுத்தப்படுகிறது.

சேதனைப் பசளைகளாக மாட் டெரு, கோழி எச்சம், கூட்டுப் பசளை, மண்புழுப்பசளை என்பவை பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன.

வீட்டுக் கழிவுகள், குப்பைகளைக் கொண்டு கூட்டுப் பசளையாக்கம் மேற்கொள்ளப்படும். இவை நுண்ணங்கிகளினால் பிரித்தழிக்கப்பட்டு (உக்கல்) கூட்டுப்பசளை உருவாகும். இந்தக் கூட்டுப் பசளையும் மண்ணை வளப்படுத்த பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கூட்டுப் பசளையாக்கம் குழிமுறை, குவியல்முறை, கூடடைப்பு முறை, பீப்பா முறை எனப் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

மாட்டுப் பண்ணையாளர்களிடமிருந்தும், கோழிப் பண்ணையாளர்களிடமிருந்தும் மாட்டெரு, கோழியெரு என்பன விவசாய நிலங்களில் கொட்டப்பட்டு இயற்கையான முறையில் வளப்படுத்தப்படும். கோழியெரு வில் யூறிக்கமிலம் அதிகமாக இருப்பதால் மண்ணின் அமிலத் தன்மையை அதிகரிக் கும். பொதுவாக யாழ்.குடா நாட்டின் மண் காரத் தன்மை வாய்ந்தது. எனவே, இதை நடு நிலையாக்க கோழியெரு சாலப் பொருத்தமானது.

தற்போது உலகளாவிய ரீதியில் சேதன உரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் பயிர்ச் செய்கை பிரபலமடைந்துள்ளது.

அசேதன உரங்களைப் பயன்படுத்தி விளைவிக்கும் உணவுகளை விட சேதன பசளைகளைப் பயன்படுத்தி விளைவிக்கும் உணவுகள் சந்தைகளில் சற்றுக் கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன.

சேதனப் பயிர்ச் செய்கைக்கென சேதன உரங்களையும் நுண்ணங்கி உரங்களையும் (Microbial Fertilizer) பரந்தளவில் பயன்படுத்துகிறார்கள்.

அசேதன உரங்களைப் போன்று சேதன உரங்களும் சந்தைகளில் கிடைக்கும் தகவுள்ளதாக உள்ளது.

**சேதனப் பசளையைத் தயாரிக்கும் (கைத்தொழில் ரீதியாக) முறை**

01. மூலப் பொருள்கள் சேகரிப்பு

பிரதான மூலப்பொருள்களாக மாட்டெரு, கோழியெரு, மரத்தூசு, பொஸ்பேற்று, நுண்ணங்கி கரைசல் பயன்படுத்தப்படுகிறது.

02. மாட்டெரு, கோழியெரு, பொஸ்பேற்று, நுண்ணங்கித் திரவம் என்பன குறித்த விகிதத்தில் கலக்கப்பட்டு சிறிது காலத்துக்கு குவியலாக விடப்படும்.

03. பின் ஒவ்வொரு இரு வாரங்களுக்கு ஒரு முறை அதனைப் புரட்டிப்போட வேண்டும்.

04. இந்தக் குவியலின் மேல் நன்மை பயக்கும் பல நுண்ணங்கிகளைக் கொண்ட நுண்ணங்கிக் கலவை விசிறப்படும்.

இந்த நுண்ணங்கிக் கலவையிலுள்ள பிரதான நுண்ணங்கிகளாவன

01. அசற்றோ பக்ரர் (Azetobactor)
02. அசோஸ்பிரில்லம்(Azospirillum)
03. அசோலா (Azulla)

மேற்கூறிய இந்த மூன்று பக்ரீரியாக்களும் வளிமண்டலத்திலுள்ள நைதரசனை மண்ணில் பதிப்பதன் மூலம் மண்ணை நைதரசன் மிக்க வளமாக்குகின்றன. இதனால் பயிர்களின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படும்.

இதைவிட பொஸ்பேற்று கரைக்கக்கூடிய பக்ரீறியாக் களும், ரைக்கோடேர்மா வகை பங்கசுக்களும் Btk வகை பக்ரீரியாக்களும் சேர்க்கப்படும்.

பொஸ்பேற்றைக் கரைக்கும் பக்ரீரியாக்கள் பொசுப்பேற்றை நீரில் கரையக்கூடியதாக மாற்றி தாவரங்களின் உறிஞ்சும் தன்மைக்கு உதவியளிக்கின்றன.

றைக்கோடேர்மா வகை நுண்ணங்கி உயிரியர் பீடைகொல்லியாகத் தொழிற்பட்டு பயிர்களின் பாதுகாவலனாகத் தொழிற்படுகின்றது.

Btk வகை பக்ரீரியாவானது மயிர்கொட்டிகளை அழித்தொழிக்கும் உயிரியல் பீடை கொல்லி ஆயுதமாகச் செயற்படும். இதனால் பயிரின் வளர்ச்சி மேம்பட்டு விளைச்சலும் உத்தரவாதமாக்கப்படும்.

இந்த நுண்ணங்கிகள் அடங்கிய நுண்ணங்கிக் கரைசல் சேதனப் பசளைக் கலவையின் மீது விசிறப்பட்டு நன்கு கலக்கப்பட்டு 90 நாள்களின் பின்னர் அரித்து குறித்த துணிக்கை வடிவத்தில் பைகளில் அடைக்கப்பட்டு சந்தைகளில் விற்பனையாக்கப்படுகின்றது.

எனினும் தென்பகுதியில் சேதனப் பயிர்ச் செய்கைக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் வட பகுதியில் இல்லை என்பது மிகுந்த வேதனையளிக்கின்றது. வடபகுதி விவசாயிகள் அதிக விளைச்சலுக்காக அசேதன உரங்களை அள்ளித் தெளித்து இரசாயனம் செறிந்த உணவுகளை உற்பத்தியாக்கி மக்களை புற்றுநோய்க்குள்ளாக்குவது மட்டுமல்லாது எமது தாய் மண்ணையும் புற்றுநோய்க்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகளே விழித்தெழுங்கள், இரசாயனங்களைத் தவிர்த்து சேதன உரங்களை இட்டு சேதமில்லாத சமுதாயத்தைக் கட்டியெழுப்புங்கள்...

“அசேதன உரம் தவிர்த்து
சேதன உரம் சேர்த்து
வீண் உயிர்ச் சேதம் குறைக்கலாமே”

இன்றைய காலகட்டத்தில் இரசாயன வளமாக்கிகளின் பயன்பாடு விவசாயிகளி டையே அதிகரித்து வருகிறது. ஒருபுறம் மண் வளமாக்கிகளின் பாவனையும், இன்னொரு புறம் பூச்சி, பீடை களைகொல்லிப் பாவனையும் அதிகரித்தே வருகிறது. பூச்சி பீடை கொல்லிகளின் பாவனைக்கும் பீடைகள் அழிவதாகத் தெரியவில்லை. இயற்கைத் தேர்வுக் கொள்கையின் தக்கன பிழைத்தலில் அவையும் இசைவாக்கம் அடைந்து விட்டன போலும்.



## வரணிப் பொதுநூலகம் அபிவிருத்தி காணுமா?

வாசகர் திருமுகம்

வரணிப் பொதுநூலகத்தில் பத்திரிகைகளை வாசிக்கும் போது வாசகர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றனர். இங்கு இட வசதி போதாமையே இதற்கான பிரதான காரணமாகும். பத்திரிகைகளும் ஒரு மேசையிலேயே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் வாசகர்கள் தமக்குத் தேவையான பத்திரிகைகளைக் கிரமமாக வாசிப்பதில் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். அதே சமயம் பொது நூல் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் நீளமான விறாந்தை ஒன்று உள்ளது. இந்த விறாந்தையை வாசகர்கள் பத்திரிகைகளை வாசிக்கும் பகுதியாக மாற்றியமைத்து உதவு வதற்கு சாவகச்சேரி பிரதேசபை முன்வரல் வேண்டும். இது தொடர்பில் பிரதேசசபைத் தலைவர் மற்றும் உபதலைவர் ஆகியோர் கவனமெடுத்து செயற்பட்டால் இந்த விடயம் சாதகமாக நிறைவேறி விடும். மேலும் வாசகர்களின் சைக்கிள்களை நிறுத்திவைக்க வசதியாக கூரைவசதி கொண்ட மண்டபம் ஒன்றும் மற்ற நூலகங்களில் அமைக்கப்பட்டுள்ளமை போன்று அமைக்கப்படல் வேண்டும். தற்சமயம் வாசகர்கள் வெட்ட வெயிலிலேயே சைக்கிள்களை நிறுத்தி வைக்கும் நிலை காணப்படுகின்றது. செயலாளரின் நிர்வாகம் இருந்த காலத்தில் சைக்கிள்கள் தரிப்பிடம் அமைக்கவென சிமெந்துத் தூண்கள் கொண்டுவரப்பட்டு போடப்பட்ட போதிலும், இன்றுவரை சைக்கிள் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பிலும் பிரதேசசபை நிர்வாகம் கவனத்தில் எடுத்து வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என வாசகர்கள் தரப்பில் கோரப்படுகின்றது.

***வாசகர்கள், வரணிப் பிரதேசம்***



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: அவசரமாக எதையும் செய்யத் தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் சகல அனுகூலமும் கிடைக்கப் பெறுவீர்கள். ஆனால் வீண்வாக்குவாதத்தால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.



**இடபம்**:தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் திட்டமிட்டு செயலாற்றுவது வளர்ச்சிக்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதைப் பற்றியும் கவலைப் படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள்.



**மிதுனம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் தன்மையாகப் பேசுவது நல்லது. பெண்களுக்கு எந்தக் காரியத்திலும் அவசரம் காட்டத் தோன்றும். நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.



**கடகம்**: மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.



**சிங்கம்**:வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும்போது எச்சரிக்கை தேவை. தீ, ஆயுதம் இவற்றைக் கையாளும்போது கவமனாக இருப்பது நல்லது.



**கன்னி**:வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை.மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**துலாம்**: உத்தியோக உயர்வில் எதிர்பாராத தடை, தாமதம் உண்டாகலாம். சிறிய வேலையும் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களின் நட்புக் கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும்.



**விருச்சிகம்**: புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பயன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயற்றிறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும்.



**தனுசு**: குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும். மனக்குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். கடினமான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.



**மகரம்**: மனத் தைரியம் அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். வாக்குவன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.



**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். குழந்தைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சி தரும்.



**மீனம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும்.

## நாளை

**ஆடி-01 வியாழக்கிழமை | 17.07.2014**

திதி: ஷஷ்டி பி.இ.04.03 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப.11.38 வரை

சுபநேரம்: 07.30-09.00 வரை
இராகுகாலம்: 01.30-03.00 வரை
ஆடிப்பிறப்பு

## விவேகானந்தர் சிந்தனையிலிருந்து....



### மறக்கப்படும் தத்துவங்கள்

பெரிய மகான்கள் எல்லோரும் தத்துவங்களுக்கு விளக்கமாக விளங்குகின்றனர். ஆனால், சீடர்களோ மகான்களையே தத்துவங்கள் ஆக்கி விடுகின்றனர். அதனால் நாளடைவில் தத்துவங்களை மறந்து மனிதர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விடுகின்றனர்.

சகுணக் கடவுளை வழிபடுவதை, புத்தர் அடிக்கடி கண்டித்ததனாலேயே நாட்டில் உருவ வழிபாடு இடம் பெறலாயிற்று. வேதங்களில் உருவ வழிபாடு பற்றிய பேச்சுக்கு இடமில்லை. ஏனெனில் இறைவன் எங்கும் இருப்பதாக அவர்கள் கருதினார்கள். படைப்பவனும் நண்பனுமான இறைவனை இழந்துவிட்டதன் எதிர் விளைவாகவே உருவ வழிபாடு ஏற்படலாயிற்று. புத்தரையும் உருவத்தில் வடித்தனர். அது போலவே இயேசுவையும் உருவக் கடவுளாக்கினர். மரங்கள், கல் ஆகியவற்றிலிருந்து உருவான உருவ வழிபாடு, புத்தர், இயேசு போன்ற மகான்களை வழிபடும் அளவுக்கு வளர்ந்து விட்டது. விக்கிரகங்களைத் தவிர்க்க முடியாத நிலைக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

தீவிரமான சீர்திருத்தப்போக்கு எப்போதுமே சீர்திருத்தத்தின் வேகத்தைத் தடைப்படுத்தி விடுகிறது. யாரையும் தீயவன் என்று சொல்லாதே; "நீ நல்லவன், இன்னும் நல்லவனாக இரு" என்று சொல்.

சகல நாடுகளிலும் புரோகிதர்கள் கேடு விளைவிப்பவர்களாகவே உள்ளனர். அவர்கள் புறக்கணிக்கின்றனர்; கண்டிக்கின்றனர். ஒன்றைத் திருத்தி அமைக்க முயன்று, பலவற்றை அவர்கள் கெடுத்து விடுகின்றனர். அன்பு எதையும் சிறுமைப்படுத்துவது இல்லை; பேராசையே அவ்வாறு செய்கிறது. நேர்மையான கோபம் என்று கூறுவது, தக்க காரணத்தால் நேர்ந்த கொலை என்று கூறுவதைப் போல் பொருளற்ற ஒரு கூற்றாகும்.

## செக்ஸ், போதைக்கு அடிமையானோரின் மூளையின் சமிக்ஞைகள் ஒரே மாதிரியானவை



பிரிட்டனில் உள்ல கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சமீபத்தில் ஆய்வு ஒன்றை நடத்தியது. அதில் செக்ஸ்ஸுக்கு அடிமையானவர்களின் மூளையும், போதைக்கு அடிமையானவர்களின் மூளையும் ஒரே மாதிரியான சமிக்ஞைகளைக் கொடுப்பதை கண்டறிந்துள்ளனர்.

பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் Dr. Valerie Voon என்பவர் தலைமையில் ஒரு அபூர்வ ஆய்வு நடத்தப்பட்டது. அதில் செக்ஸ் மற்றும் போதைக்கு அடிமையானவர்களின் மூளைகளைச் சோதனை செய்தனர். இதற்காக சிறுவயதில் இருந்தே ஆபாசப் படம் பார்த்து செக்ஸ் அடிமையானவர்கள் 19 பேர்களையும், போதைக்கு அடிமையானவர்கள் 19 பேர்களையும் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து வந்து ஆய்வு செய்தனர்.

செக்ஸ் அடிமையானவர்களுக்கு ஆபாசப் படத்தை தொலைக்காட்சியில் ஒளிபரப்பி அந்தச் சமயத்தில் அவர்களுடைய மூளை எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பதிவு செய்தனர். அதேபோல் போதைக்கு அடிமையானவர்களுக்கு மதுவைக் கொடுத்து அந்தச் சமயத்தில் அவர்களுடைய மூளையைச் சோதனை மொனிட்டர் மூலம் சோதனை செய்தனர்.

அதிசயத்தக்க வகையில் இரு பிரிவினர்களின் மூளையும் ஒரேமாதிரியான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அதே நேரத்தில் செக்ஸுக்கு அடிமையானவர்களின் மூளை சாதாரண நபர்களின் மூளையைவிட மிகவும் செயற்றிறன் மிக்கதாக இருப்பதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர். தங்களது கண்டுபிடிப்புகளை அவர்கள் தங்களுடைய PLOS ONE என்ற பத்திரிகையில் வெளியிட்டுள்ளனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | 4 | | | 1 | 8 |
| 3 | | | | | | 4 | | |
| | 2 | | | | 7 | 3 | 5 | 6 |
| | 8 | 7 | | | 2 | | | |
| 2 | 4 | 3 | | 1 | | 6 | 7 | 9 |
| | | | 7 | | | 1 | 8 | |
| 5 | 6 | 8 | 3 | | | | 4 | |
| | | 2 | | | | | | 3 |
| 7 | 3 | | | 8 | 6 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 8 | 4 | 2 | 3 | 9 | 7 |
| 8 | 4 | 3 | 9 | 5 | 7 | 6 | 2 | 1 |
| 7 | 9 | 2 | 3 | 6 | 1 | 4 | 5 | 8 |
| 9 | 2 | 8 | 6 | 1 | 5 | 7 | 3 | 4 |
| 1 | 7 | 4 | 2 | 3 | 9 | 8 | 6 | 5 |
| 3 | 6 | 5 | 7 | 8 | 4 | 9 | 1 | 2 |
| 2 | 3 | 1 | 4 | 9 | 8 | 5 | 7 | 6 |
| 6 | 8 | 7 | 5 | 2 | 3 | 1 | 4 | 9 |
| 4 | 5 | 9 | 1 | 7 | 6 | 2 | 8 | 3 |

# கிண்ணத்தை தன் வசமாக்கியது மானிப்பாய் ஏஞ்சல் பாடசாலை

வலி. வடக்கு, ஜுலை 16

முதல் தடவையா 17 வயதுப் பிரிவு ஆண்களுச் ான கூடைப் பந்தாட்டத்தில் போட்டியிட்டுச் சம்பியன் கிண்ணத்தைத் தன தாக்கிக் கொண்ட மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை பலருடைய பாராட்டையும் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையும்



வெற்றி பெற்ற அணியினர்

மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி போட்டி தொடங்கி முடிவடையும் வரை மிகவும் நிதானமாக ஆடியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சளைக்காது போட்டியில் ஏஞ்சல் பாடசாலை அணியைத் துரத்தியபோதிலும் அது கைகூடாத நிலையில் ஆட்ட நிறைவில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை 43:34 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வென்று சம்பியன் கிண்ணத்தைத் தன்தாக்கிக் கொண்டது. (த-86-23)

## வென்றது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 16

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை16

றொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜுலை 16

மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜுலை 16

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கலட்டி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம் ஜுலை 16

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது கிண்ணத்தை இராமநாதன் கல்லூரி

வலி.வடக்கு, ஜுலை 16

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் மோதிக் கொண்டன.



சம்பியன் பெற்ற அணியினர்

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் முதல் கால் பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 08:00 புள்ளிகள் என்ற நிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டத் தொடங்கியது.

இரண்டாம் கால் பாதி ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 13:08 புள்ளிகள் என முன்னிலையில் காணப்பட்டது.

மூன்றாம் கால் பாதி ஆட்டத்தில் 34:22 புள்ளிகள் என முன்னிலை பெற்றது. ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 43:30 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வென்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (த-86-23)



வடக்கு மாகாண விளையாட்டுவிழாவில் பங்கு கொண்டு பதக்கங்களை வென்ற முல்லைத்தீவு மகாவித்தியாலய வீரர்கள், வீராங்கனைகள் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன். (த)

## பாடும்மீன், நீக்கிலஸ் அசத்தின ஆட்டங்களில்

யாழ்ப்பாணம், ஜுலை 16

அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;-

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக

**குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஊரெழு றோயலை வென்றது மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 16

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு 2 இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.


இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிசார்பில் நிதர்சன் 4 கோல்களையும் ஜெனட்.யூட் ஆகியோர் தலா 2 கோல்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிசார்பில் கஜகோபன் தனது அணிக்கான கோல்களை அடித்தார். (த-23)

# கோட்ஸேயால் கூட நம்ப முடியவில்லை



உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் கோல் அடித்ததை என்னால் நம்ப முடியவில்லை என்று ஜேர்மனியின் மரியோ கோட்ஸே கூறியுள்ளார்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் முன்பு நடைபெற்ற ஆட்டங்களில் ஜேர்மனி வீரர்கள் பலர் எத்தனையோ கோல்கள் அடித்திருந்தாலும், மரியோ கோட்ஸே இறுதி ஆட்டத்தில் அடித்த அந்த ஒரு கோல் மட்டும் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது. ஏனெனில் ஜேர்மனிக்கு சம்பியன் பட்டம் பெற்றுத் தந்த பெருமைக்குரிய கோல் அதுவாகும்.

இது தொடர்பாக கோட்ஸே கூறியது:-

உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் நான் கோல் அடிப்பேன் என்றும், அதன் மூலம் அணி சம்பியன் ஆகும் என்பதையும் நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. இப்போது வரை என்னால் அதனை முழுமையாக நம்ப முடியவில்லை.

இந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எனது அணியையும், நாட்டு மக்கள் அனைவரையும் என்னால் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த முடிந்தது முழு திருப்தி அளிக்கிறது. உலகக் கிண்ணத்தை வென்றது, அதிலும் பிரேஸிலில் வைத்து வென்றது என்பது கனவை நிஜமாக்கியுள்ளது. தொடர்ந்து சிறப்பாக பயிற்சி மேற்கொண்டு எனது திறமையை மேம்படுத்திக் கொள்வேன். என்று அவர் கூறினார்.

**புதிய வரலாறு**

இந்த வெற்றி மூலம் தென் அமெரிக்க கண்டத்தில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற முதல் ஐரோப்பிய நாடு என்ற பெருமையைப் பெற்ற ஜேர்மனி புதிய வரலாறு படைத்தது.

தென் அமெரிக்க கண்டத்தில் இது வரை 4 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் தென் அமெரிக்க நாடுகள்தான் சாம்பியனாகியுள்ளன. இப்போது 5 ஆவது முறையாக தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள பிரேஸிலில் நடந்த போட்டியில் ஐரோப்பிய நாடான ஜேர்மனி பட்டம் வென்று தென் அமெரிக்கா கண்டத்தில் தங்களின் ஆதிக்கத்தை முதல் முறையாக நிலை நிறுத்தியுள்ளது.

**சாதனையை சமன் செய்தது ஜேர்மனி**

இந்த முறை உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம் 4 முறை உலகக் கிண்ணத்தில் வெற்றி பெற்ற இத்தாலி அணியின் சாதனையை ஜேர்மனி சமன் செய்துள்ளது. உலகக் கிண்ணத்தில் அதிகமுறை(5) சம்பியன் பட்டம் வென்ற அணி என்ற பெருமை பிரேஸில் வசமே உள்ளது.

**4 முறை சாம்பியன்**

இதற்கு முன்பு 1954, 1974, 1990 ஆகிய ஆண்டுகளில் ஜேர்மனி உலகக் கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. 2014ஆம் ஆண்டில் சம்பியன் ஆனது மூலம் 4 முறை சம்பியன் பட்டம் வென்று, அதிக முறை சம்பியனான அணிகள் பட்டியலில் இத்தாலியுடன் 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளது. இத்தாலி 1934, 1938, 1982, 2006 ஆகிய ஆண்டுகளில் உலக சாம்பியன் ஆனது. பிரேஸில் அணி 1958, 1962, 1970, 1990, 2002 ஆகிய ஆண்டுகளில் உலக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. (த)

# ஆர்ஜென்ரீனாவின் தோல்வியை கொண்டாடும் பிரேஸில் ரசிகர்கள்



பிரேஸில் அணியின் தோல்வியை மறந்து ஆர்ஜென்ரீனா அணியின் தோல்வியை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர் பிரேஸில் ரசிகர்கள்.


பிரேஸில் ரசிகர்களுக்கு ஆர்ஜென்ரீனா என்றால் பிடிக்காத வார்த்தையாகத் தான் இருந்து வருகிறது. தற்போது கூட பிரேஸில் ரசிகர்கள் மெஸ்ஸியை பிடிக்கும் ஆனால் ஆர்ஜென்ரீனா என்றால் அறவே பிடிக்காது என்று கூறியிருந்தனர்.

உதாரணமாக சொல்லப் போனால் கிரிக்கெட்டில் இந்தியா, பாகிஸ்தான் எப்படியோ அதே போல் தான் உதைபந்தில் ஆர்ஜென்ரீனாவும், பிரேஸிலும். அருகில் உள்ள நாடாக இருந்தாலும் இரண்டு அணிகளுக்கு இடையே நடக்கும் போட்டியானது ஒரு போராகத் தான் இருக்கும்.

இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி ஜேர்மனி கிண்ணம் வென்றதும் பிரேஸில் ரசிகர்களின் கொண்டாட்டங்களைச் சொல்லவே வேண்டாம். ஆட்டம் பாட்டம் எனத் தெருக்களில் பட்டாசு வெடித்து ஆர்ஜென்ரீனாவின் தோல்வியையும், ஜேர்மனியின் வெற்றியையும் கொண்டாடினர் ரசிகர்கள்.

அதே சமயம் ஆர்ஜென்ரீனா நல்லா அழு என்றவாறு கூச்சலிட்டு சிலர் மது விருந்தில் கலந்து கொண்டும் கொண்டாடியுள்ளனர். இவர்களின் கேலிச் செயலை பார்த்து வாயடைத்து போயிருந்தனர் கடற்கரையில் கூடியிருந்த ஆர்ஜென்ரீனா ரசிகர்கள். (த)

# மெஸ்சிக்கு தங்கக் காலணி விருது தவறானது – மரடோனா



உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் சிறந்த வீரருக்கான விருது ஆர்ஜென்ரீனா அணித் தலைவருக்கு வழங்கப்பட்டு இருக்கக் கூடாது என ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் தலைவர் டியாகோ மரடோனோ தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலேயே இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். மெஸ்ஸி தனித்து உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்ரீனா அணியை அழைத்து சென்றுள்ளார். அவர் மீதான விருப்பம் எனக்கு வானளவு உயரத்திற்கு உள்ளது. இந்த தொடரில் சிறப்பாக விளையாடிய வீரர் கொலம்பியா அணியின் ஜேம்ஸ் ரொட்ரிக்கஸ். அவருக்கே சிறந்த வீரருக்கான விருது வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என மரடோனோ தெரிவித்துள்ளார்.

விளம்பரதாரர்கள் மெஸ்ஸி ஏதாவது ஒன்றை வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வழங்கப்பட்டதே இந்த விருது. மெஸ்ஸி உண்மையாக இந்த விருதை வெல்லவில்லை என தெரிவித்த மரடோனோ - ஜேர்மனி வீரர் கோட்ஸே அடித்த கோல் மூலம் கவலையடைந்ததாகவும், உலகக் கிண்ணத்தை ஐகுயைன் தவ்றவிட்ட இலகுவான கோலை அடித்து இருந்தால் ஆர்ஜென்ரீனா அணி நிச்சயம் நிச்சயம் வெற்றி பெற்று இருக்கும். ஜேர்மனி அணி ஆதிக்கம் செலுத்தி இருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# ஓய்வை அறிவித்தார் மஹேல



இலங்கை அணியின் மூத்த வீரர்களுள் ஒருவரான மஹேல ஜெயவர்த்தன டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற இருப்பதாக அறிவித்துள்ளார். தற்போது தென்னாபிரிக்காவுடன் நடைபெற்றுவரும் தொடரையடுத்து இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியுடன் இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும் 3 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இந்தத் தொடருடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக மஹேல ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

கடந்த 18 ஆண்டுகாலமாக எனக்கென மரியாதையையும், அடையாளத்தையையும் அளித்த அணியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பது இலகுவான முடிவு அல்ல. ஆனால் ஓய்வை எடுப்பதற்கு இதுவே சரியான தருணம் என நம்புகிறேன் என்று மஹேல தெரிவித்துள்ளார்.

37 வயதாகும் மஹேல ஜெயவர்த்தன 1997ஆம் ஆண்டு இந்தியாவுக்கெதிரான போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை 145 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 244 இனிங்ஸ்களில் 33 சதங்கள், 48 அரைச்சதங்கள் உட்பட 50.18 ஓட்ட சராசரி வீதத்தில் 11,493 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 22 இனிங்ஸ்களில் பந்து வீசிய இவர் 6 விக்கெட்டுக்களையும் சாய்த்துள்ளார்.

ஏற்கனவே சர்வதேச 20/20 போட்டிகளில் இருந்து இவர் ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இறுதி ஆட்டத்துக்கு முன்னரே அஞ்சல் தலை அடித்த ஜெர்மனி

ஆர்ஜென்ரீனாவுடனான இறுதிப் போட்டிக்கு முன்பே உலகக் கிண்ண வெற்றியை பறைசாற்றும் அஞ்சல் தலையை ஜேர்மனி அச்சடித்திருக்கிறது. இந்தச் சிறப்பு அஞ்சல் தலைகள் நாளை முதல் விற்பனைக்கு வரவுள்ளதாக ஜேர்மனி அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 4 உலகக் கிண்ணங்களில் அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்றில் தோல்வி கண்ட ஜேர்மனி, இந்தத் தடவை இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி 4ஆவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஜேர்மனி மதிப்பில் ஓர் அஞ்சல் தலையின் விலை 60 சென்ட். அஞ்சல் தலைகள், முதலாவதாக பயிற்சியாளர், வீரர்கள் மற்றும் அணி ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.




இந்த அஞ்சல் தலை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போது, ஜேர்மனி அணி இறுதிப் போட்டியில், தோல்வியடைந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்று கேட்டதற்கு, ஜேர்மனி வெற்றியடையும் என்று உறுதியாக நம்பினோம். ஒருவேளை, தோல்வியடைந்திருந்தால் இழப்புதான். ஜேர்மனி அணியின் வெற்றியைக் கணித்து தயார் செய்யப்பட்ட அஞ்சல் தலைகள் மதிப்பையும் இழந்திருக்கும் என்று நிதி அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (த)

## காணி விற்பனை

புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரத்தில் 12½ பரப்புக் காணி, 2 கிணறுகளுடன் விற் பனைக்குண்டு, 1½ அடி தாய்வான் மாபிள் களும் விற்பனைக்குண்டு. (50016) (10)

தொடர்புக்கு: 077 606 2747

## தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி யிருந்து வேலை செய்ய 45 வயதுக் குட்பட்ட பெண் தேவை (50003) (10)

075 227 9075, 077 744 6962

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 021 567 1111


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி உதயராணி முனீஸ்வரன்

(வலயக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு)

எமது முல்லைத்தீவு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றிருக்கும் முதற்பெண்மணி திருமதி உதயராணி முனீஸ்வரன் அவர்களை அவர்பணி சிறக்க உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

Congratulation (50010)(10)

பாடசாலை சமூகம்,
மு/உடையார்கட்டு ம.வி.

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து......



Best Wishes

## சிவபுண்ணியம் சிவலிங்கம்

(B.A, Dip.in Edu)

சேவை:1984.03.12 - 1989.08.13
K/G புனித மரியாள் தமிழ் வித்தியாலயம் (எட்டியாந்தோட்டை)
1989.08.14 - 2014.07.15
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

தன்னலமற்ற தனிப்பெரும் சேவையதால்
தனக்கெனத் தரணியிலே தனியிடத்தைப் பதித்திட்ட
தமிழ் ஆசானும், பிரதி அதிபருமாம் பெருந்தகையின்
நிகரில்லாச் சேவையதை நிலைபேறுடையதாக்கி
மணிவிழாக் காணும் இந்நாளில்
மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

நலன்புரிக் கழகமும்,
பழைய மாணவர் சங்கமும்.
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

Best Wishes (50001)(10.3)


## மலேசியாவில் Work permit உடன் வசிக்க / தொழில்புரிய அரிய வாய்ப்பு!

மூன்று வருட Work permit, அடிப்படைச் சம்பளம் 45,000/=, வயது 19-35 வரை, 8 மணித்தியால வேலை நேரம், தங்கு மிடம், போக்குவரத்து, மருத்துவம் இலவசம். 19.07.2014 சனிக்கிழமை மலேசிய முகவர்களால் நேர்முகத் தேர்வு இடம் பெறும்.

இலங்கை அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டது. இரண்டே வாரத்தில் பயணம். இன்றே பதிவு செய்யுங்கள்.

(43385) (10) தொடர்புக்கு: 077 395 7291


## சேவை நயப்பு விழாவும்

## பிரிவுபசார வைபவமும், வரவேற்பு நிகழ்வும்



பாடசாலை : யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்
காலம் : 16.07.2014 (புதன்கிழமை மு.ப 11 மணி)
சேவைக்காலம் : 04.08.2007 முதல் 29.04.2014 வரை


### திரு. சுப்பையா மோகனராஜன்

(B.A (Hons) Economics, Dip in Ed.Med. SLPS-2 I)

மேற்படி காலப்பகுதியில் எமது பாட சாலையில் அதிபராகக் கடமையாற்றி, தற்போது யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடமையாற்றி வருப வருமாகிய சுப்பையா மோகனராஜன் அவர் களின் சேவையைப் பாராட்டுவதோடு, அவர் மேன்மேலும் பலகாலம் பல பணிகள் புரிந்து நீண்டகாலம் வாழவும்,

Best Wishes

எமது பாடசாலையின் அதிபர் பதவியினை ஏற்று வந்திருக்கும் சிவஞானம் ரவிச்சந்திரன் அவர்களையும் மனமார வாழ்த்தி வரவேற்கின்றோம்.



### சிவஞானம் ரவிச்சந்திரன்

(B.Sc., Dip.in Edu., SLPS-2 II)

(49944)(10.3)

பாடசாலைச் சமூகத்தினர்,
யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட வாழ்வின் எழுச்சி அட ருத் ... ணக்களத்தில் சாரதியாகக் கடமையாற்றும் செல்வநாயகம் கிருஷ்ணகுமார் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி செல்வநாயகம் பரமேஸ்வரி

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கை யாக்குவதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி ஆணையாளரும், பணிக்குழுவினரும்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்,
மாவட்ட அலுவலகம், மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(50007) (10)


## வாகனம் விற்பனைக்குண்டு

1. DIMO அலுமினியம் பொடி அடிக்கப் பட்டது.
2. IZUSU லொறி
3. லேடன் வாகனம் அலுமினியம் பொடி அடிக்கப்பட்டது.
4. லொறி ஆறு வீல் கொண்டேயினர்.

தொடர்புக்கு: (50008) (10)

077 072 6210

## இடமாற்றத்தை முன்னிட்டு.....

யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!

இருப்புக்களை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே

- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=



மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

(49911)(10.6.3)


## பிறந்தநாளினில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் ஹரிந்திரன் கரிஸ்

Congratulation

இன்று (16.07.2014) புதன்கிழமை தனது பிறந்தநாளை கொண்டாடும் செல்வன் ஹரிந்திரன் கரிஸ் அவர்களை வாழ்த்தி நிற்கும் இந்த நாளில் கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் எமக்கும் பெருமையை சேர்ந்தமைக்கும் இந்நாளில் மனமார பாராட்டி நிற்கின்றோம்.

அம்மா, அப்பா.
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

## கட்டட ஒப்பந்தகாரர்களிட மிருந்து கூறுவிலை கோரல்

### கணினி ஆய்வுகூட கட்டடம் அமைத்து அன்பளிப்பாக வழங்கல்

### யா/துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை

மேற்படி பாடசாலைக்கு கணினி ஆய்வு கூட கட்டடம் ஒன்றை அமைத்து அன்பளிப்பாக வழங்க எமது கௌரவ இயக்குநர்சபை தீர்மானித்துள்ளது.

இதற்குரிய மாகாணக் கல்விப் பணிப் பாளரின் அனுமதி அதிபர் மூலம் பெறப் பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், ஏனைய நியம அளவுகளையும் அதிபரி டம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். அதிபரின் தொலைபேசி இல. 077 635 4202

கூறுவிலைகளை எதிர்வரும் 25.07.2014 இற்கு முன்பாக, எனது அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைக்கவும்.

குறிப்பு:
வேறு எவரிடமும் கையளிக்க வேண் டாம்.

Ms. V. இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி,
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

(50015) (10)

## மனம் மகிழ் பாராட்டுக்கள்



Best Wishes

### அருளப்பு வில்லியம் ஜேசுதாசன் J.P

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அலன் மகால் இல.28, செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தந்தை உயர் திரு அ. வில்லியம் ஜேசுதாசன் (ஓய்வுநிலை வங்கியாளர் - இலங்கை வங்கி, உறுப்பினர் - வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்) அவர்கள் 14.07.2014 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் உயர்திரு சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது சமூக சேவைகள், மக்கள் பணி மேன்மேலும் தொடர எமது நல் வாழ்த்துக்கள்.

வாழ்த்தும் நெஞ்சங்கள்

மனைவி: வி.இராஜேஸ்வரி,
பிள்ளைகள்: யசோதா மேரி மக்டலின் (பிரான்ஸ்), அலன்ரீனா
மருமக்கள்: தாவீது அன்ரன் குமார் ( பிரான்ஸ்),
திருச்செல்வம் பிரங்கிளின்
பேரப்பிள்ளைகள்: அ.ஜோன் போல் (பிரான்ஸ்)பி.சேற்றிக்,
பி.லெசாறோ
மருமகள்: டொமினிக் பேர்ளின் றெஜி

தகவல்: திரு. திருமதி தாவீது அன்ரன் குமார்
ஏ.பி.ரி - 7 3 இளம்றி எத்றேஜீ, 68000 போபிட்டீஸ், பிரான்ஸ்.
தொ.பே: 0033 6674 69954

(49943)(45.6.3)

# யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

## அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்களின்

# மணிவிழாச் சிறப்புமலர் - 16.07.2014



Mrs.Sooriyakumary Jeyaveerasingam
*BA,Dip.in Edu.(Merit), M.Phil(Education)*
*S.L.P.S Grade I, S.L.E.A.S.III,*

### அதிபரின் அறிமுகம்

ஆசிரியராக சேவையாற்றிய பாடசாலைகள்

1) யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.
   1977.05.08 - 1980.01.15 வரை
2) யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
   1980.01.16 - 1982.12.31 வரை
3) நு/பூண்டுலோயா த.ம.வித்தியாலயம்
   1983.01.01 - 1987.08.31 வரை
4) கிளி/தர்மபுரம் மகா வித்தியாலயம்
   1987.09.01 - 1988.10.30 வரை
5) கிளி/பரந்தன் இந்துக் கல்லூரி
   1988.11.01 - 1990.03.01 வரை
6) யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
   1990.03.02 - 1993.06.04 வரை

அதிபராக சேவையாற்றிய பாடசாலைகள்

1) யா/சின்மய பாரதி வித்தியாலயம்
   1993.06.05 - 1994.12.31 வரை
2) யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.
   1995.01.01 - 2004.02.11 வரை
3) யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
   2004.02.12 - இன்று வரை

### கல்வியினை வழங்குபவன் இறைவனாவான்



மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வுநிலையில் செல்லும் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி மணிவிழா எடுப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கல்வியை வழங்குபவன் இறைவனாகப் போற்றப்படுகின்றான். இந்த வகையில் கல்விப் பணியாற்றிய இவரை வாழ்த்திட வேண்டியது நமது கடமையாகும். உளமார வாழ்த்துகின்றேன்.

இரண்டாவது குருமஹா சந்நிதானம் நல்லை ஆதீனம்

### பல்லாண்டு காலம் வாழ வேண்டும்



அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்கள் பன்முக ஆளுமை கொண்ட அம்மையார் இக்கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் உன்னதமாக செயற்பட்டு நவீன வசதிகளுடன் பாடசாலையை அழகுபடுத்தி யாழ் மாவட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கு நிகராக வளர்த்தெடுத்து சாதனைகள் படைத்த பெருமையெல்லாம் அவருடைய ஆளுமைத் தன்மையைச் சாரும். அந்த வகையில் செயற்பட்ட அதிபர் அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.

### ஆளுமையில் இவர் ஒரு சூரிதான்



அதிபர் சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்கள் 1980-82 காலப் பகுதியில் நான் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் கற்ற காலத்திலிருந்து பரிச்சயமானவர் அக்காலப்பகுதியில் அவரின் பல்வகைப்பட்ட ஆளுமைப் பண்புகளை அவதானித்து வந்துள்ளேன்.

எந்த விடயத்திலும் முதலிடம் கிடைக்க வேண்டுமென்பதே இவரின் இலக்கு. அதற்கேற்ப திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவர். இந்த இலக்கு நோக்கிய இவரின் செயற்பாடு எந்த விடயத்திலும் முதல்மூவரில் ஒருவராக இவரைத் திகழ வைத்துள்ளது.

ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் சமூகக்கல்விப் பாடத்தில் அதியுயர் சித்தி வீதம். அதிபராகக் கடமையாற்றிய வேளை பாடசாலையின் ஒட்டுமொத்த சித்தி வீத அதிகரிப்பு, இணைபாடவிதான செயற்பாடுகளில் தேசிய மட்ட சாதனை. மானிப்பாய் மகளிர் கல்லூரி என்ற நாமம் நின்று நிலைத்திருக்க கல்லூரியின் ஒழுக்கம் சார் விழுமியங்களில் இவர் காட்டிய கரிசனை.

இவ்வாறான இவரின் பண்புகள் இவர் கல்வி கற்ற காலத்திலிருந்தே ஊட்டி வளர்க்கப்பட்டவையாகும். எந்தப் போட்டிகள், விவாதங்கள் ஆயினும் இவர் பங்கேற்றால் அவ்வணி நிச்சயம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எம்மிடையே இருந்து வந்துள்ளது.

வாழ்க இவரின் நாமம் வளர்க மானிப்பாய் மகளிர் கல்லூரியின் புகழ்.

ஆ.ராஜேந்திரன்
மாகாணக்கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.

### செல்லுமிடமெல்லாம் சேவையில் நிறைவு



திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்கள் கடந்த ... வருடங்கள் எங்கள் கல்லூரித் தாய்க்கு இறவாப் பணி செய்து பலரது மனங்களில் பசுமைபொங்கு கொலுவீற்று இன்று ஓய்வு பெறுகின்றார். வந்த குறுக்கீடுகளையெல்லாம் தூசென மதித்து சந்தித்த சவால்களையெல்லாம் துடைத்தெறிந்து எல்லாவற்றிற்கும் முகம்கொடுத்து கல்லூரியின் புகழை நிலைநாட்டிய செயல் நலன்விரும்பிகள் நெஞ்சில் பொறிக்கப்பட வேண்டியதாகும். அந்தவகையில் இவரது ஓய்வுக்காலம் ஒளிமயமானதாக பிரகாசிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அருட்பணி X.W.JAMES பங்குத்தந்தை - மானிப்பாய்.

### அரச சேவையிலே மூன்றரை தசாப்த காலம்



மணிவிழா என்பது ஒருவரது வாழ்வில் அறுபதாவது அகவையிலே அவரின் பணிகள் சாதனைகள் என்பவற்றை அவர் வாழும் காலத்திலேயே பாராட்டி கௌரவிப்பதாகும். இத்தகைய மணிவிழாக் காணும் நாயகி திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் பெருமையடைகின்றேன். தேசிய மட்டத்திலே வெற்றிகளை தமதாக்கிக் கொள்வதற்கு முன்னின்று உழைத்தவர். ஆசிரியராக, அதிபராக, பகுதிநேர விரிவுரையாளராக, கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தவராக உயர்ந்து இன்று மணிவிழாக் காணும் நாயகியை வாழ்த்துகின்றேன்.

த.குருகுலராஜா, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை விவகார அமைச்சர்

### பன்முக ஆளுமை கொண்ட அதிபர்



கடந்த 37 வருடங்களுக்கு மேலாக கல்விச் சேவையினைப் புரிந்து மாணவர்களின் கல்வித் தேடலுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் சாதனைகள் பலவற்றை அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டு 60 அகவையில் மணிவிழாக் காணும் திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்களை நான் நன்கு அறிவேன் கடந்த ஒரு தசாப்த காலமாக கல்லூரியை மிளிரச் செய்ததோடு யாழ். மாவட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கு நிகராகவும் வளர்த்தெடுத்துள்ளார் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் பன்முக ஆளுமை கொண்ட அதிபரை நான் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.

### கல்லூரிக்கு பெருமை தேடிய நாயகி



37 வருடங்களுக்கு மேலாக ஆசிரியர், அதிபர் பணியில் நின்று தனது சேவைக் காலத்தினை அலங்கரித்து நிறைந்த சேவையாற்றி இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் பன்முக ஆளுமை கொண்டவர். ஒவ்வொரு மாணவிகளது இயல்புகளையும், திறன்களையும் அறிந்து ஊக்குவித்து தேசிய மட்டச் சாதனைகளை புரிந்து கல்லூரிக்கும் வடமாகாணத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளார். இவர் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

திருவாளர் சி.சத்தியசீலன்
செயலாளர்,கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

### பல சவால்கள் மத்தியிலும் சேவையைத் தொடர்ந்தவர்



யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஒரு தசாப்த காலமாக அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது வயதிலே ஓய்வுபெறுகின்ற திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பல சவால்களுக்கு மத்தியிலும் கல்விப் புலத்தில் மட்டுமன்றி, விளையாட்டுத்துறை, தமிழ், ஆங்கிலப் போட்டிகள் என்பவற்றிலும் சாதனைகளை நிலைநாட்ட தலைமைத்துவத்தை வழங்கிய அதிபர் மகிழ்வுடனும், நலத்துடனும் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

செ.சந்திரராஜா
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

### புகழ் பூத்த பெண்கள் கல்லூரியாக மிளிரச் செய்தவர்



மணிவிழா நாயகி திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்கள் சண்டிலிப்பாய்க் கோட்டத்திலே மானி. மகளிர் கல்லூரியை மிளிர வைத்த பெருமைக்குரியவர். இவர் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றது முதல் இன்றுவரை இக்கல்லூரியை புகழ்பூத்த பெண்கள் பாடசாலையாக திகழச் செய்தார். பல்துறைசார்ந்த மாணவியர்களை உருவாக்குவதற்கு சிறந்த வழிகாட்டியாக பணிபுரிந்துள்ளார். இவர் தனது குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

ச.சிவானந்தராஜா,
கோட்டக்கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்.

### APPRECIATION OF SERVICES



Mrs.Sooriyakumari Jeyaveerasingam hails from Suthumalai in Manipay Parish which is a salubrious environment in Jaffna Peninsula.

Mrs.S.Jeyaveerasingam was appointed as principal of Manipay Ladies' College on 12.02.2004 when the student Population was only 648. The student population in Manipay Ladies' College is growing and is exceeding over 1400 of which nearly 200 are Christians.

The institution has come to occupy a unique position in Jaffna peninsula and it is the leading college in Valikamam zone. Mrs.S.Jeyaveerasingam is an extra ordinary principal in the Northern Province. She is an inspired leader and has been a poetry in action through out her career which benefited the institution many ways.

Having worked as a teacher and principal over 35 years for the benefit of mankind, Mrs.S.Jeyaveera singam is retiring on 15th July 2014. The invaluable contribution made by her is very appreciated. Wishing her God speed, Good luck, Best of health and happiness !!!!!

*Dr.A.Ramanathan,*
*Past President, Manipay Hindu College,*
*OSA Colombo Braneh.*

### வாழ்க வளமுடன்



மண்ணில் நல்ல வண்ணம் வாழ மாணவச் செல்வங்களை ஊக்குவித்து அகவை அறுபதிலே ஓய்வினை பெறும் விழா நாயகியே விடமுயற்சியும் செயற்திறனும், வாக்குச் சாதுரியமும் கொண்டவராக விளங்கி கல்லூரியை கருந்தனமாகக் கொண்டு செயலாற்றி கல்லூரி உயர்வுக்காய் செயற்பட்டீர். இன்று புகழ்பூத்த அதிபராக ஓய்வுபெறும் உங்களை வாழ்த்துகின்றேன் வளமுடன் வாழ்கவென.

Dr.S.சுந்தரராஜன்
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்

### ஆளுமை மிக்க அதிபர்



திருமதி சூரியகுமார் ஜெயவீரசிங்கம் எமது கல்லூரியில் நான் கண்ட அதிபர்களில் இவர் நான்காமவர் ஆவார். பூண்டுலோயா T.M.V.யில் ஆசிரியராகக் கண்டேன் 2004இல் இப்பாடசாலையில் அதிபராகக் கண்டேன்.

இவரின் சேவையில் எமது பாடசாலை கல்வியிலும், இணைப் பாடவிதானத்திலும், பௌதிக வளத்திலும், மாணவர் ஒழுக்கத்திலும் மிளிர்ந்தது என்றால் மிகையாகாது. இவரின் பயிர்ச்செய்கையில் இப்பாடசாலை நல் அறுவடையைப் பெற்றது. இதன் தாக்கம் தொடர் சிறப்பை இப்பாடசாலைக்கு நல்கும்.

திருமதி சூ.ஜெயவீரசிங்கம் அவர்கள் தனது ஓய்வு காலத்தை நல்சமூகசேவையைச் செய்து அவர் தம் சமூகத்துக்குத் தொண்டு ஆற்றவும் அவரும் அவரின் குடும்பமும் சுகதேகத்துடன் நீடுழி வாழவேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றேன்.

பிரதி அதிபர், க.குகேஸ்வரராஜா

### சுதுமலை தந்த சுடரொளி



கல்லூரியின் பொற்காலம் என வரும் சந்ததியினர் எடுத்து இயம்பும்படி செயற்பட்ட அதிபர் திருமதி சூ.ஜெய வீரசிங்கம் ஆகும். இவர் கல்லூரியை உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமகள். நினைத்து நினைத்து ஆச்சரியமுறும் வண்ணம் கல்வி, இணைபாடவிதானம், பௌதீக வளம் என்பவற்றை வளர்ச்சிகாணச் செய்த அதிபர். இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டுகின்றேன்.

செல்வி இ.சுப்பையாப்பிள்ளை,
போசகர், O.S.A

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## இராசரத்தினம் இராஜ்குமார்
(கண்ணன்)
திதி: சதுர்த்தி

தோற்றம் 10.07.1961 — மறைவு 16.06.2014

எங்கள் குடும்பத்து முழுமதியே எங்குசென்றாய் ?
பொங்கும் துயரடைந்து வாடுகின்றோம் கண்ணா!
இங்குன் வதனம் இனியென்று காண்போம்
இனியவனே என்றும் உன் நினைவில் வாழ்வோம்.

கடந்த (16.06.2014) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் இராசரத்தினம் இராஜ்குமார் (கண்ணன்) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.07.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

95, நாயன்மார் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (49942)(45.6.3)

குடும்பத்தினர்.

# சமாதானம் குறித்துப் பேசுவோர் உதட்டளவிலேயே பேசுகின்றனர்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கூறுகின்றார்

திருகோணமலை, ஜூலை 16

மேடைகளிலும் ஊடகங்களிலும் வெளிநாட்டு தூதுவர்களிடமும் சமாதானத்தைப்பற்றி வாய் நிறையப் பேசும் அமைச்சர்கள் அதை உதட்ட ளவில் மாத்திரமே பேசுகின்றார்களே தவிர மன தளவில் தமிழ்மக்களுக்கு எந்தத் தீர்வினையும் கொடுக்க வேண்டும் என்ற எந்த சிந்தனையும் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன்.

கடந்த கால போர் சூழலின் போது பாதிக்கப்பட்ட வர்களின் வாழ்வாதார நிலைமை மற்றும் சமூகத்துடனான உறவுகள் பற்றி அறிந்து அவர்களுக்கான உதவிகள் வழங்குவதற்கான சந்திப்பு ஒன்று பொத்துவில் குண்டுமடு கிராமத் தில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;


"இங்கு சமாதானம் நிலவுகின்றது அனைத்து மக்களும் நிம்மதியாக வாழ்கின் றார்கள் அனைத்து இடங்களும் அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டு செல்கின்றது என்று கூறும் அரச அமைச்சர்கள் இவ் வாறான மிகவும் பின்தங்கிய இடங்களுக்கு பயணம் செய்து மக் கள்படும் துன்பதுயரங்களைக்கண்டு அந்த மக்களும் இந்த நாட்டு பிரசை கள் அவர்களையும் ஏனையோர் போன்று வாழ வைக்கவேண்டும் என்று கருத்தில் எடுக்கவேண்டும். வெறுமனே வாயலவில் மாத்திரம் மக்களுடைய அனைத்துப் பிரச் சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டது. அங்கு வாழும் தமிழ்மக்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்று வெளிநாட்டில் இருந்து வரும் தூதுவர்களுக்கு எடுத்துக் கூறினால் போதும் என்று இருக்காமல் சொல்வது போன்று நடைமுறையிலே காட்டு வதுதான் மிக முக்கியமானதாகும்.

கடந்த காலப்போர்ச்சூழலின் போது பாதிக்கப்பட்டவர்களின் வாழ் வாதார நிலைமை இன்றும் மிகவும் மோச மான நிலையிலேதான் உள்ளது. அன்றிருந்து இன்று வரைக்கும் வெறுமனே ஏமாற்றப்பட்ட இன மாகவே இந்த நாட்டிலே வாழ்ந்து வருகின்றோம். இனிவரும் காலங் களிலும் ஏமாறுவோமாக இருந்தால் எமது இனத்தின் அனைத்து அடை யாளங்களையும் இழக்கநேரிடும். இந்தக் கிராமத்தைப் பொறுத்த வரை போரால் பாதிக்கப்பட்டு எவரு டைய கவனிப்புகள் இன்றி எத்த னையோ குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள் இங்கு வாழ்ந்து கொண்டு அனைத்துச் சுமைகளை யும் தாங்களே சுமக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப் பட்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவ டிக்கை எடுக்கப்படும்"- என்று தெரி வித்தார். (ற)

# மரண அறிவித்தல்

## நாகமுத்து வீரசிங்கம் (மாஸ்டர்) (B.Sc., Dip.in Education)

(ஓய்வுநிலை ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி)



அராலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கைப் புகுந்த இடமாகவும், தனது தற்காலத்தை மெல்போர்ன் நகர் ஆஸ்திரேலியாவில் கழித்து கடந்த நள்ளிரவு 97ஆவது வயதில் சிவபதமடைந்தார்.

அன்னார் அராலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர் களான நாகமுத்து-செல்லம் தம்பதியரின் ஏகபுத்திர னும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலேயன் பெஞ்சனியர் சின்னத்தம்பி-அரியம் தம் பதியரின் மருமகனும், காலஞ்சென்ற திரவியத்தின் அன்புக் கணவரும், காங்கேயி, டாக்டர் நேமிநாதன், டாக்டர் குகாயினி, டாக்டர் நளாயினி, அனந்தநாதன் (பொறியியலாளர்), டாக்டர் சதானந்தி, நிமலநாதன் (பொறியியலாளர்), கமலநாதன் (Acct), செந்தூர் நாதன் (Acct), திருநிறையி (Acct) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் ராமானந்தன் (ஆஸ்திரேலியா), சாந்தினி (ரூபி, மலேசியா), துரைராசா (பொறி யியலாளர் U.K), டாக்டர் சதானந்தன் (U.S.A), டாக்டர் வாணிதேவி (வாணி- ஆஸ்திரேலியா), சிவபாதம் (பொறியியலாளர்- ஆஸ்திரேலியா), சித்திரா (U.K), சுபாஷினி (ஆஸ்திரேலியா), ரேவதி (ஆஸ்திரேலியா), ரவிசங்கர் (Acct ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமை மாமனும், சலாசன், நிருமலன், டாக்டர் ஆரணி, சாம்பவி, டாக்டர் அருணன், காலஞ்சென்ற வேணன் மற்றும் டாக்டர் ஐராணி, டாக்டர் மாதினி, டாக்டர் திருவேணி, சாயி, ரஜன், காலஞ்சென்ற மீரா மற்றும் பிரணவன், டாக்டர் சிவானி, அஸ்வினி, சௌமி, அனுஷன், ஹரன், நயனி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்க ளான சர்வானந்தன், பரமானந்தன், இராசானந்தன், டாக்டர் விவேகானந்தன் மற்றும் கிருஸ்ணானந் தன் ஆகியோரின் மைத்துனரும், பத்மாசனி, சத்தியேஸ்வரி, தங்கலட்சுமி, டாக்டர் மீனலோசினி, வடிவாம்பிகை ஆகியோரின் சகலனும், திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த சச்சிதானந்தம், இரத்தினசிங்கம், அராலி மத்தியைச் சேர்ந்த கந்தராசா ஆகியோரின் மிக நெருங்கிய உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.07.2014) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மெல்போர்ன் நகர் ஆஸ்திரேலியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
077 592 4828, 021 223 0724
ஆஸ்திரேலியா தொடர்பு :0061 3988 71142 (50004)(10)

தகவல்:
சி. கிருஷ்ணானந்தன்
(அப்பு மாஸ்டர்)

## ஏறாவூர்பற்று பிரதேச செயலராக தயாபரன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று (செங்கலடி) பிரதேச செயலாளராக மாணிக்கவாசகம் தயாபரன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்அமைச்சின் செயலாளரால் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் தரம் ஒன்றில் உள்ள இவர் பிரதேச செயலாளராகவும், கிழக்கு மாகாண உள்ளூராட்சிஆணையாளராகவும், கிழக்குப் பல்கலைக் கழக பதிவாளராகவும், இலங்கைமத்தியவங்கியின் வறுமை ஒழிப்புத்திட்ட பிறந்திய முகாமையாளராகவும் பதவி வகித்திருந்தார்.

இதேவேளை - ஏறாவூர்பற்று (செங்கலடி) பிரதேச செயலாளராக கடமையாற்றிய உருத்திரன் உதயசிறிதர் மட்டக்களப்பு கச்சேரியின்மேலதிகஅரசஅதிபராக (காணி) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமிக் கப்பட்டுள்ளார்.

அதேவேளை உதயசிறிதரை இடமாற்றம் செய்யக்கூடாது என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன் தினம்போராட்டம்நடத்தியிருந்தனர். (ற)

எமது கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி கேதீஸ்வரி ஸ்ரீகாந்தன் அவர்களது அன்புத் தாய்



## அன்னலட்சுமி திருநாவுக்கரசு

அவர்கள் 11.07.2014 இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/வேலணை மத்திய கல்லூரி, வேலணை. (49945)(4.6.3)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
## ருக்மணிதேவி லோறன்ஸ்


| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21.08.1947 | 19.06.2014 |

எனது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றியும் பல வழிகளில் உதவி புரிந்தும் தொலைபேசியூடாக உள்நாடு வெளிநாடு களில் இருந்து ஆறுதல் கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (17.07.2014) வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையிலும் 19.07.2014 சனிக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

468, பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு. (50002)(7.6.3)

கணவர்

# மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை ஜோண்செபமணி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் மானிப்பாய் இந்து)

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜோண்செபமணி நேற்று (15.07.2014)செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான யாகப்பு-மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், றோசம்மாவின் அன்புக் கணவரும், மனோகரன், பிரபாகரன் (கனடா), கருணாகரன் (லண்டன்), சத்தியா (கனடா), நித்தியா(லண்டன்)ஆகியோரின் அன்புத் தந்தையும் மடோனா (ஆசிரியை, சென்.அன்ரனீஸ்- பாஷையூர்), ஸ்ரெலா, கலாரதி, சற்குணராஜா, நந்தகோபால் ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஆன்றுபேஷினி,ஏரன், அலெக்ஸ், அல்வின், நிஷிகரன், மதுஷா, காருண்யா, ஹரிஸ், கிரிஜன், திவ்வியன்,பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, தொம்மைக்குட்டி, செபநாயகம், பேரின்பநாதன், மற்றும் திருமதி மரியநாயகி, திருமதி மரியதாஸ் லூட்ஸ், கிறேஸ், ராஜரட்ணம், திருமதி றெஜினா, இருதயநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திருமதி ஆரோக்கியம் அடைக்கலம், செபஸ்தியாம்பிள்ளை, யேசுதாசன்(லண்டன்), மரியதாஸ்,திருமதி லூட்ஸ் மேரி அமிர்தநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,மானிப்பாய். (49948)(5.3)

தகவல்:மனைவி,மகன் (பாபு)

# First year Remembarance



## Ariyarednam Mauranathan

Birth : 10.05.1944
Death : 27.06.2013



Though a year has passed
and more to follow
we shall never forget you

May your soul rest in peace

Vadamarachi,
Karaveddy,
Srilanka.

Ariyarednam Mathiyavathanam,
Ariyarednam Vaikunthanathan
M.Malini
M.Thayanithi
Y Needirajah (Accountant)

## தொடர்ச்சிகள்

### இரு வேறு

மகனான ச.பிரதீபன் (வயது-27) என்பவர் படுகாயமடைந்தார். இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-
பரந்தனில் இருந்து பயணித்த டிப்பர் வாகனமும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் சிக்கிக் கொண்டனர். இதன் போது தந்தை அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மகன் படுகாய மடைந்தார். விசாரணைகளை கிளி நொச்சி பொலிஸார் மேற் கொண்டதுடன் டிப்பர் வாகனச் சாரதியையும் கைது செய்தனர்.
இதேவேளை, வவுனியா ஏ-9 வீதியில் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் வேகமாகச் சென்ற தனியார் பஸ் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அத்துடன் சைக்கிளில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்து வவுனியாவைத் தியசாலையில் சேர்க்கப் பட்டார். காயமடைந்தவர் தென் பகுதியைச் சேர்ந்த டயாரட்ண (வயது - 60) என்பவராவார். இந்த விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்றது
யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ் வேகக்கட்டுப் பாட்டை இழந்து முன்னால் சென்ற மோட்டார் சைக் கிளையும் சைக்கிளையும் மோதியது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரி வித்தனர். ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-55,402)

### இனப்

கான கடிதம் ஒன்றையும் அவர்கள் வத்திக்கான் பேராயரிடம் வழங்கினர்.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-
பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தை அரசு தமது அரசியல் தேவைகளுக்காக பயன் படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. பாப்பரசரின் பயணம் அரசுக்கு சார்பாக மாற்றப்படுவதனை முறியடிப்பதற்காக பாப்பரசர் வடக்கு - கிழக்கிற்கு பயணம் செய்ய வேண்டும் என்றும், முடியுமானால் முள்ளிவாய்க்கால் அல்லது மடுத் தேவா லயம் சென்று போரில் இறந்தவர்களின் நினைவாக திருப்பலி பூசை ஒன்றை நடத்த வேண்டும். கொழும்பில் ஜனாதிபதியை சந்திக்கும் போது தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ந்து நடத்தப்படும் கட்டமைக்கப் பட்ட இனப்படுகொலையை தடுத்து நிறுத்த வலியுறுத்த வேண்டும் எனவும் நாம் வேண்டுகோள் விடுகின்றோம். இலங்கை அரசு இதற்கு செவி சாய்க்கும் என்ற நம்பிக்கையில் இந்த வேண்டுகோளை விடுக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தியிருப்பதுடன், பாப்பரசர் இந்த விடயங்களைப் பற்றி இலங்கை ஜனாதிபதியிடம் பேசுவது , தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுத் தரக் கூடியதாக இருக்கும். எனவேதான் இந்தக் கோரிக்கை விடுக்கின்றோம் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ- 5)

### கடா வெட்ட

யில் கொண்டு செல்ல வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி பணித்துள்ளார்.
எதிர்வரும் 19 ஆம் திகதி நவாலி காத்தவராயர் ஆலயத்தில் மிருக பலி பூசை நடைபெற வுள்ளது. இதற்கு ஆலய நிர்வாகத்தால் கோரப்பட்ட அனுமதிக்கே இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

### வடமாகாண

தப்படவில்லை. அத்துடன் தகுதியற்ற ஆசிரியர்களும் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
இதே நேரம் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட கணினி நிலையங்கள் பல, தகுந்த ஆசிரியர்கள் இன்றி நடத்தப்பட்டு வருகின்றது. கணினியைக் கற்பிக்கும் நிறுவனங்கள், தமது நிறுவனங்கள் சார்ந்து துண்டுப்பிரசுரங்களை அச்சடித்து, அதில் ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தமது நிறுவன சான்றிதழை சமர்ப்பித்து செல்லாம் என்று விளம்பரப்படுத்தி பெரும் தொகைப் பணத்தை அறவிடுகின்றன; சான்றிதழ்களையும் வழங்குகின்றன. ஆனால் இந்தச் சான்றிதழ்களை எமது நாட்டிலுள்ள திணைக்களங்களே ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.
இது விடயத்தில் கல்வி அமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனது பிரேரணையில் வடமாகாண சபையின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை குறிப்பிட்டிருந்தார்.
இந்தப் பிரேரணையை ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான ப.அரியரட்ணம் வழிமொழிந்தார்.
சு.பசுபதிப்பிள்ளையின் இரண்டாவது பிரேரணை, வடக்கு மாகாணசபை எல்லைக்குள் பறவைகள் சரணாலயமாக இனங்காணப்பட்ட இடங்களில் ஒன்றான கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயத்தை, வடக்கு மாகாணசபை சட்டபூர்வமாகப் பிரகடனப்படுத்த வேண்டும். அத்துடன் சரணாலயத்தை மேம்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து வெகுவிரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு விடவேண்டும். இதன்மூலம் போரினால் பாதிக்கப்பட்டு உள நெருக்கீடுக்கு உள்ளான மக்களை ஆற்றுப்படுத்த முடியும். இதன் மூலம் உள்ளூர் சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இந்தப் பிரேரணையும் ஆளுங்கட்சி உறுப்பினரான ம.இந்திரராசாவினால் வழிமொழியப்பட்டது. அவரது மூன்றாவது பிரேரணை, ஏ-9 வீதிக்கு அருகில் கிளிநொச்சிப் பொதுச் சந்தைக்கு முன்பாக சிறுவர் பூங்கா யூ.எஸ்.எயிட் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. அதனை மக்கள் பாவனைக்கு திறந்து விட்டபோதும் இதுவரையில் கரைச்சிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் கீழ் உள்ள மேற்படி பூங்காவை, கரைச்சிப் பிரதேச சபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் பிரேரணையையும் ம.இந்திரராசா வழிமொழிந்தார்.
து.ரவிகரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட 4 பிரேரணைகள் அவர்கள் சபைக்கு வராமையால் நேற்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. (ஐ-5)

### பிரதேச

பயன்படுத்தி, வங்கிகளில் கடன் பெற்றுத் தருவதாக பொதுமக்களை ஏமாற்றி பெரு மளவு பணத்தை கையாடல் செய்துள்ளார். இது தொடர்பில் பல்வேறு முறைப் பாடுகள் எனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. மேற்படி நபருக்கும், எனக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை என்றும் இந்த நபர் குறித்து ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் யாழ். பொலிஸ் நிலையத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டுகிறேன் - என்றுள்ளார். (ஐ-5)

### சிவிலியன்

தெரிவிக்கையில்;
வடமாகாண ஆளுநராக மீண்டும் மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டமைக்கு பின்னணியில் சிங்கள பௌத்த சக்திகளின் கடும் அழுத்தமும் காரணமாக அமைந்துள்ளது. சந்திரசிறி ஆளுநராக சிறப்பான முறையில் சேவை களை முன்னெடுத்திருந்தார். இதன் காரணமாக அவரது பதவிக் காலம் நீடிக்கப்பட்டிருக் கலாம். ஆனால் போர்க் காலத்தில் இராணுவத்தில் பணியாற்றியதன் காரணமாக வடமாகாண தமிழ் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைக்க தயாரில்லை. இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
சிவிலியன் ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும். மாறாக இந்தப் பதவி நீடிப்பானது கவலையளிக்கின்றது. சிவிலியன் ஒருவரை நியமிப் பதன் மூலமே மத்திய அர சுக்கும் வடமாகாண சபைக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் - என்றார். (ஐ-5)

### நியதிச்

சபையில் ஒத்திவைக்கப் பட்டது. ஆளுநரால் நியதிச் சட்டத்துக்குரிய அங்கீகாரம் இன்னமும் வழங் கப்படாமையினாலேயே, அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்துக் கூறும்போதே அவைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சபையினால் நிதி நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம், முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் ஆகியன வடக்கு மாகாண அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு ஆளுநரின் அங்கீகாரத்திற்காக கடந்த மாதம் 6 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
குறித்த நியதிச் சட்டத்தை, சட்டமா அதிபர் திணைக்களம், நிதி ஆணைக்குழு என்பவற்றுக்கு ஆளுநர் அனுப்பி வைத்திருந்தார்.
அவற்றின் பரிந்துரைகள் தனக்கு இன்னமும் கிடைக்கப் பெறாத காரணத்தினால் நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கவில்லை
என்று ஆளுநர் வடக்கு மாகாண சபைக்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி அறி வித்திருந்தார். இந்த நிலையில் நேற்றைய அமர்விலும், நியதிச் சட்டம் மீதான வாசிப்பு எடுத்துக் கொள்ளப்படும் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் ஆளுநர், நியதிச் சட்டத்துக்கான அங்கீகாரம் சபைக்கு அனுப்பி வைக்கவில்லை. (ற-5)

### பல்கலைக்கழக

பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில், தேவையான ஆவணங்களை அணைக் குமாறு உத்தரவிட்டுள்ள உயர்நீதி மன்றம் வழக்கை அடுத்த மாதம் 27 ஆம் திக திக்கு ஒத்திவைத்துள்ளது.
வழக்கில் பல்கலைக் கழகம் சார்பாக முன்னிலையாகி இருந்த சட்டமா அதிபர் திணைக் கள சட்டத்தரணி, இந்த விடயம் குறித்துப் பதிலளிப்பதற்கு அவகாசம் கோரியிருந்தார். அதையடுத்தே வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.
அதேவேளை, இந்த வழக்கில் எதிராளியாகக் குற்றஞ் சாட்டப் பட்டவரும், தற்போது நியமனம் வழங்கப்பட்டவருமான உதவி விரிவுரையாளரும், முதற்தரச் சித்தியையே பெற்றுள்ளார் என்றும் இரண்டாம் மேற்தரச் சித்தி அல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
குறித்த நியமனத்தில் நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றி வர்களில் தகுதியும் திறமையும் கூடியவர் இருந்தபோதும், அவரை நிராகரித்து வேறொருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதை எதிர்த்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீடத்துக்கு உதவி விரிவுரை யாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சையிலேயே இந்த ஊழல் இடம் பெற்றது என்று அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பி னர்கள் அனைவரும், மற்றும் துணைவேந்தர் வசந்தி அர சரத்தினமும் இந்த மனுவில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட் டுள்ளனர். (ற)

### பாதுகாப்பு

வைத்தியசாலைக்குள் நுழைந்துள்ளனர். அவர்களைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தடுத்தனர். தடுக்கப்பட்டவர்கள் மேலும் இருவரைக் கூட்டி வந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடி விட்டனர். அதில் கோண்டாவிலைச் சேர்ந்த எஸ்.ஆர்த்திகன் (வயது-26), விஜயரூபன் (வயது-26) ஆகியோர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவத்தின் பின்னர் வைத்தியசாலைக்குள் தேடுதல் நடத்திய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், தாக்குதல் நடத்தியவர் என்று தெரிவித்து ஒருவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.
அதேவேளை, அந்தச் சம்பவத்தை நேரில் கண்ட பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கும் போது,
"வைத்தியசாலை விடுதிக்குள் இருந்த ஒருவரைப் பிடித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கினார்கள். சந்தேகத்தில் ஒருவரைப் பிடித்து தாக்குதல் நடத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகர்களுக்கு யார் அதிகாரம் வழங்கியது. பொது மக்கள் கூடி நின்ற நேரத்தில் அவர்கள் அவ்வாறு மோசமாக நடந்துகொண்டனர்."- என்று தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரும் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டவரும் காயமடைந்துள்ளார் என்றும், அவரைப் பொலிஸார் விசாரணைக்காகக் கொண்டு சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ற-4)

### முதலமைச்சர்கள்

ஆனால் கடந்த வாரம் அவ்வாறு நடத்தடவுள்ளது என்று தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி முன்னிலையில் சகல முதலமைச்சர்களையும் கூட்டத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர். எனக்கு வேறு கூட்டங்கள் இருப்பதனால் அதில் பங்கெடுக்க முடியாது என்று ஏற்கனவே அவர்களுக்கு அறிவித்துள்ளேன். எதிர்கட்சித் தலைவர், நாங்கள் மத்திய அரசுடன் ஒத்துப்போக வேண்டும் என்ற விதத்தில் பேசியிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், ஜனவரி மாதம் இடம்பெற்ற பேச்சில், பத்து விடயங்களை நிறைவேற்றுவதாக அவர் கூறியிருந்தார். ஆனால் அவற்றில் ஒன்றைத்தானும் அவர் நிறைவேற்றவில்லை"- என்று அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார். (ற-5)

### இராணுவ

வீதியில் ஊர்வலமாகச் செல்வதற்கோ பேரணியை நடத்துவதற்கோ நீதிமன்றால் அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் மண்டபத்தில் ஒன்று கூடிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் மதத் தலைவர்கள், பெண்கள் அமைப்புக்கள் எனப் பல தரப்பினரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். கருத்துரைகளைத் தொடர்ந்து பதாதைகளை தாங்கிய பெண்கள் குழுவினர் தமது கோரிக்கைகளையும் முன் வைத்தனர். (ற-14)

### மனித உரிமை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் 15 பேர் கொண்ட குழுவினரே வடக்குக்கான தீடீர் பயணத்தை மேற் கொண்டு வருகை தரவுள்ளனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையினால் ஏற்பாடு செய்துள்ள இரு நிகழ்வுகளிலும் அவர்கள் பங்கெடுக்கவுள்ளனர்.
அத்துடன் வடக்கின் மனித உரிமை தொடர்பில், சிவில் சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இந்தச் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. (ற-5)


## பணிப்பெண் தேவை

வவுனியா நகரில் வசிக்கும் ஆசிரியர் வீட்டுக்கு ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் நான்கு வயதுள்ள இரண்டு பிள்ளைகளை நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய, சமையல் வேலை தெரிந்த, நேர்மையான, O/L படித்த, பிள்ளைகள் பராமரிப்பில் முன் அனுபவமுள்ள, 40 வயதுக்கு உட்பட்டவர் தேவை. தங்குமிடம், உணவு இலவசம், சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 480 1686, 077 613 9150
(41321) (10)

## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் சாரதியாகக் கடமையாற்றும் செல்வநாயகம் கிருஷ்ணகுமார் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்வநாயகம் பரமேஸ்வரி**

அவர்கள் 15.07.2014 இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மாவட்டச் செயலக
நலன்புரிக் கழகம்.
(50008) (10)

## காணி விற்பனைக்கு

இணுவில் மானிப்பாய் வீதியில் ஸ்ரீபரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும், முழுமையாகவும் வாங்கலாம்.

தொடர்புக்கு: 077 196 8633 (50017) (10)

## விற்பனைக்கு

ஜேர்மனில் இருந்து இறக்கப்பட்ட ஜேர்மன் தயாரிப்பிலான புதிய வகை, இரண்டாம் தர வகையான கிறைண்டர்கள், றில்லர்கள், கில்றிகள், ஜிப்சோ, றௌட்டர்கள், பலகை பொலிசர் போன்ற மின் வலுப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**பாப்பா வெல்டிங் வேக்ஸ்**
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 077 974 9343 (50012) (10)

Congratulation பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்லூரி முதல்வர்
உயர்திரு.
**வல்லிபுரம் நடராஜா**
(B.A. (Econ) B.Ed, M.Ed. SLPS-I)
அவர்கள் கடந்த 01.06.2008 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி அகமகிழ்வதுடன் அவர் கல்வித்துறையில் மேலும் சிறப்புகள் பெற மனதார வாழ்த்துகின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.
(வி/15412)(10)

# சீசெல்ஸில் இலங்கையருக்கு அதிக தொழில் வாய்ப்புகள்

கொழும்பு, ஜூலை 16
துரிதமாக அபிவிருத்தியடைந்து வரும் சீசெல்ஸ் நாட்டில் இலங்கையர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகார தெரிவித்தார்.

குறிப்பாக சீசெல்ஸ் நாட்டில் சுற்றுலாத் துறைசார்ந்த வேலைவாய்ப்புகளே அதிகளவில் கிடைக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள சீசெல்ஸ் நாட்டின் தூதர் வெவன் வின்ஸ்லோ வில்லியம், பணியகத்தின் தலைவர் அமல் சேனாலங்காதிகாரவை பணியகத்தின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயத்துறையிலும் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்வது குறித்தும் இருவரும் பேச்சு நடத்தினர்.

மேலும் கணக்காய்வாளர்கள், கணக்காய்வுத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகள் நிர்வாகத் துறை முகாமைத்துவத்துறை போன்ற துறைகளிலும் வேலைவாய்ப்புகள் வழங்குவது குறித்தும் பேசப்பட்டது.

மேற்படி துறைகளுக்கு ஆட்களை அனுப்பும் போது நல்ல பயிற்சியுடன் அனுப்புவது என்றும் பேசப்பட்டது. அத்துடன் ஆங்கில மொழியில் கல்வியைக் கற்றுத்தரக்கூடிய ஆசிரியர்களை அனுப்புவது குறித்தும் இருவரும் பேசியுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பணியகத்தின் தலைவரை சீசெல்ஸ் வருமாறு தூதர் அழைப்பு விடுத்தார். சீசெல்ஸ் நாட்டில் இலங்கை வங்கியின் கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மிஹின்லங்கா விமான சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி இராசேந்திரம்

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் மற்றும் யாழ் தாதிய பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர்)



இலக்கம், 541, பருத்தித்துறை வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி இராசேந்திரம் (முன்னாள் யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர்) நேற்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை இராசேந்திரத்தின் (முன்னாள் யாழ். சுன்னாகம் 'சிங்கர்' நிறுவன முகாமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், துரைராசா (பிரான்ஸ்), செல்வராணி ஆகியோரின் சகோதரியும், மல்லிகாதேவி (பிரான்ஸ்), பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனியும், சுகிர்தா, சதீஸ்கண்ணா ஆகியோரின் பாசமிகு தாயும், வசந்தரூபன், இந்திரா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.07.2014) புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லூர் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.இல. 021 222 0994 (50019)(10) தகவல்: குடும்பத்தினர்.




# நகரத்தையும் கிராமங்களையும் இணைக்கும் 1210 பாலங்கள்

## நாடுமுழுவதிலும் நிர்மாணிக்கும் பணி ஆரம்பம்



கொழும்பு, ஜூலை 16
மஹிந்த சிந்தனை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் மேற்பார்வையில் நாடுமுழுவதிலும் நகரத்தையும் கிராமங்களையும் இணைக்கும் 1210 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக 210 பாலங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 100 பாலங்களின் வேலைகள் தற்போது முற்றாக நிறைவு பெற்று, அந்தப் பாலங்கள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களுக்கு அபிவிருத்தியின் பாதைகளைத் திறக்கும் வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய பாலங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 100 பிரதேச செயலகங்களில் உள்ள 15,000 கிராமங்களிலும் வாழும் 60 லட்சம் மக்கள் இதனால் நன்மையடைவர்.

இலங்கையின் சனத் தொகையில் 75 வீதமானோர் கிராமப்புற வாசிகளாவர். அவர்களுக்கு பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்த பாலங்களின் நிர்மாணம் மிகவும் முக்கியமாகும். அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இதன்மூலம் வழி பிறக்குமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்தார். (வ)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சண்முகநாதன் (கிளியன்)



குரும்பசிட்டி மடத்தடியைப் பிறப்பிடமாகவும் பலாலி வயாவிளான் மேற்கு மற்றும் முல்லைத்தீவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகநாதன் (கிளியன்) நேற்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தங்கமலரின் அன்புக் கணவரும் சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் பொன்னிபாஸ் - சந்தநாசி அம்மா தம்பதியரின் மருமகனும் பிரசன்னா (இத்தாலி), பிரபாகினி (நோர்வே), பிரதீபன், பிரார்த்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் சசி, பிரியங்கா ஆகியோரின் மாமனும் கீர்த்தன், ஆர்த்திகா, அன்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண்ணாங்குளம் சிலாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணாங்குளம், சிலாவத்தை,
முல்லைத்தீவு.

தகவல்: குடும்பத்தினர்.

16 JUL

# வாக்காளர் பட்டியல் மீள்திருத்தம் குறித்து விழிப்புணர்வுப் போட்டிகள்

கரணவாய், ஜூலை 16

தேர்தல்கள் ஆணையாளரின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீள்சீர் செய்தல் குறித்த விளக்கங்கள் பொதுமக்களுக்கு மாணவர்கள் மூலமாக தெரியப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் பல்வேறு போட்டிகள் தேர்தல் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளன.

நாம் அனைவரும் வாக்களிப்போம், வாக்காளர் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும், வாக்குரிமை எமக்குரியதாகும், வாக்காளர் இடாப்பு ஒவ்வொரு வருடமும் பரிசீலனை செய்யப்பட வேண்டும், பிரச்சினை இல்லாதுவாக்களிக்க வேண்டும். ஆகிய தலைப்புக்களில் மூன்று பிரிவுகளாக சித்திரப் போட்டிகளும் - தரம் 10 - 11, தரம் 12 - 13 ஆகிய இருபிரிவு மாணவர்களுக்கு சுமார் 1000 - 1500 சொற்களுக்குள் "வாக்குரிமை மக்களின் உரிமை, மக்கள் பரமாதிபத்திய சர்வஜன வாக்குப் பலம் சரியான காலத்தில் வாக்குப் பதிவு செய்தல் எமது உரிமையாகும், சுதந்திரமான வாக்குமுறை எமது உரிமையாகும்" ஆகிய தலைப்புக்களில் கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக தேர்தல் ஆணையாளர், தேர்தல் அலுவலகம், சரணமாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை மட்டத்தில் கட்டுரைப்போட்டிகளை நடத்தி அதில் தெரிவு செய்யப்பட்ட 6 கட்டுரைகளை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(வ-108)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS

விரையுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

**கருத்தரங்கு உ/த - 2014**
**நாடகமும் அரங்கியலும்**
இடம் : D.C.M.கல்விநிலையம் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
காலம் : 17, 18, 21 ஆம் திகதி (வியா,வெள், திங்க)
நேரம் : 9.00A.M - 4.00 P.M
ஆசிரியர் : S.R.Rames மற்றும் பிரபல ஆசிரியர்கள்
"நாடகமும் அரங்கியலும் மாணவர்களே வருவீர் பயன் பெறுவீர்"
கட்டணம் – 700/= (50000) (12.3)

**தேவை**
களஞ்சியம் ஒன்று அமைப்பதற்காக பாவித்த பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள தகரங்கள் தேவைப் படுகின்றன. (8 அடிக்கு மேல்) மேலதிக தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம் : 076 691 3755

**Dip. In Mobile Phone Repair / Software**
புதுப் பொலிவுடன் யாழ். மண்ணில் ஆரம்பமாகிறது.
10 வருட அனுபவமும், நம்பகமும், சிறப்பு மிக்க ஆசிரியரின் (GANESH) வழிகாட்டுதலின் கீழ்...
அனைத்துவிதமான கையடக்கத் தொலைபேசிகள் திருத்துதல் மற்றும் மென்பொருள் நிறுவுதல் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும். (0777444225)
*குறைவான முதலீட்டில் கூடிய வருமானம் பெற இன்றே அழையுங்கள்*
BTEC 21, Sirampiyadi lane, Jaffna. (0217904468)

**வேலை வாய்ப்பு**
தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விளம்பர சேகரிப்பாளர் தேவை.
தொடர்பு: 0770557261
021 221 99 69 (50018)

0777302882
A1 B1 B2
Knowledge University Sri Lanka
Spoken IELTS
http://edu.kugroup.info
London English College
Call Now - 021-3208342
No 626,1/1, K.K.S Rd,Jaffna

***இலவசமாக ஆங்கிலம் கற்க அரிய வாய்ப்பு**
CAMBRIDGE ENGLISH
Pre-starters முன்பள்ளி, தரம் 1, 2 | Young Learners தரம் 03, 04, 05
Teens தரம் 06-11 O/L தயார்ப்படுத்தல் | General User ஏனையோர்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். அடிப்படையில் இருந்து கற்கலாம்.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
* பாடஅலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.
ALISON DIGILITE ADVANCE LEARNING PARTNER
51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 5567 11 11
advt@uthayan.com

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**
கட்டார் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு
கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க் காணும் வேலைவாய்ப்புகள் உடனடியாக காத்திருக்கின்றன

| | |
|---|---|
| Airport Cleaning | 900 + Foods |
| Meson Helper | 1400 + OT |
| School Driver (First time) | 1200 + OT |
| Diesel Mechanic | 1600 + OT |
| Heavy vehicle Driver (GCC Valid License) | 1800 + 200 + OT |
| Garden Helper (பூந்தோட்டம்) (Age 40-55) | 900 + OT |
| Carpenter (Door and Finishing) | 1500 + OT |
| Baradiya Driver (Saudi) (First Time) | 800 +200 + OT |

நங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்
கைவசம் வீ... உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்
உடன் தொடர்பு கொள்ள: Lanka Voice
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள: 0779527575
மன்னார், வவுனியா தொடர்புகளுக்கு: 0766697789
LLNo. 2248 AL\2248\ADVT10/14/11/15
கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நஷனல் (பி) லிமிட்டெட்
இல.130/3/1. 3 மாடி, கிறாண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14

**SPOKEN ENGLISH**
யாருக்காக?
இளைஞர் யுவதிகள் | ஆங்கிலம் பேசவிரும்புவோர்
வெளிநாடு செல்வோர் | பல்கலை மாணவர்கள்
பல்கலை மாணவர்கள் | தொழில்புரிவோர்
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 19.07.2014 சனி
1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313


அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின்
**95ஆவது ஆண்டு நிறைவு விழா - 2014**
மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி
(வடமாகாண ரீதியிலானது)
20.07.2014 காலை 06.00 மணியளவில் நிலைய முன்றிலில் (தபால்கட்டை சந்தி, அரியாலை)
30,000 ரூபாவிற்கு மேற்பட்ட பரிசில்களைக் கொண்டது.
தொடர்புகளுக்கு: 077 778 2192/077 309 5745 (49940) (12.3)
நிர்வாகம், சரஸ்வதி ச.ச.நி.


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம்

*(இணுவில்/வீமன்காமம்)*



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம் நேற்று (15.07.2014) செவ்வாய்க்கிழமை வீமன்காமத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் (காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத் தாபனம்) அன்பு மனைவியும் லோகநாதன் (காங்கேசன்துறை சிமெந்து கம்பனி), அற்புதராணி, செந்தில்நாதன் (திருத்துனர், நீர் இறைக்கும் இயந்திரம் அளவெட்டி), செல்வக்குமரன் (உரிமையாளர், கியூலைன் சொகுசு பஸ்சேவை), ஜெயக்குமார் (தொழில்நுட்பவியல் கல்லூரி, கொக்குவில்), கிருஸ்ணகுமார் (வாழ்வின் எழுச்சித் திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரவதனி, பஞ்சாட்சரம் (ஓய்வுபெற்ற அதிபர் - உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), சந்திரகாந்தி, ஜீவா, தமிழினி (ஆசிரியை, மயிலிட்டி வடக்கு, கலைமகள் மகா வித்தியாலயம்), சுதா ஆகியோரின் அன்பு மாமியும் தீபன் (தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), சுஜி (நெதர்லாந்து), சுஜந்தி (கிராம உத்தியோகத்தர், ஜே/246), மதுரன், லாவண்யா (CINEC Campus) அரிசுதன், உமேசன் (கல்வியியற் கல்லூரி மாணவன், கோப்பாய்), சரண்யா, சஜீவன், லதாங்கினி, கீதாங்கினி, இளங்குமரன், அட்சயன், திசாங்கன், சுஜிந்தன், பிருந்தா, பிரவீணா, பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷஸ்மிகா, திவானுசன், நயன்திஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் சிவலிங்கம், மகாலிங்கம், பஞ்ச லிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் மாவிட்டபுர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காங்கேசன்துறை வீதி, வீமன்காமம் (சைவம், கடை முன் ஒழுங்கை), தெல்லிப்பழை — தகவல்: குடும்பத்தினர்


16-07-2014 புதன்கிழமை, காலை 06.30 தொடக்கம் 07.30 மணிவரையான காலப்பகுதியில் நடைபெறும்
**மங்கலகரமான திறப்பு விழா**
Toner House
**TONER HOUSE**
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
No. 195/3, Parameswara Junction, Palaly Road, Thirunelvely, Jaffna. Mob: 0775 427 426

**S.L.A.S** திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்
1. பொது விவேகம் - திரு.சர்வேஸ் உதவிப்பதிவாளர் மருத்துவபீடம் (SLAS தகைமை)
2. இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் பின்னணியும் அதன் போக்கும் } திரு.லிகோரி (MA Political Sc.)
சர்வதேச போக்கு } திரு.விஜயநாதன் Mphil Eco சிரேஷ்ட விரிவுரையாளர், திரு.பிரணவன் MA உதவிப்பதிவாளர்.
3. தாபனக்கோவை நிதிப் பிரமாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் } திரு.சிறிதரன் கணக்காளர், திரு.திருக்குமரன் கணக்காளர்
4. முகாமைத்துவ விவேகம் - திரு.பிரதீபன் MA பொது நிர்வாகம்
5. ஆக்கபூர்வ பகுத்தாய்வும் மற்றும் தொடர்பாடல் திறன்கள் } திரு.ஜீவராஜா MA, திரு.பிரதீபன் MA
* முற்றிலும் புதிய பாடத்திட்டம் தழுவிய விரிவுரைகள் சனி,ஞாயிறு நாள்களில் 12 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறுகின்றன.
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8148 (சி/14996)(5-6)

**Northern Higher Learning Center**
NHLC
333, Kandy Road, Jaffna.
T.P.No: 077 592 3569 E-mail: info@nhlc.edu.lk
எமது நிறுவனத்தில் கல்வி ஆலோசனை வழிகாட்டிகள் தேவை.
I. சிறந்த பேச்சாற்றலும், தொடர்பாடலும்
II. வெளிக்கள சமூகத்துடன் சேவையாற்றக் கூடியவர்.
III. கல்வித்தகைமை (சாதாரணதரம், உயர்தரம்)
சுயவிவரக்கோவை முடிவு திகதி: 21.07.2014
அனுப்பவேண்டிய முகவரி:
Northern Higher Learning Center
333, Kandy Road, Jaffna.
தொடர்பு இல: 077 592 3569 / 076 697 5209
E-mail: rajatheega1984@yahoo.com
(49941)(10.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பா... ...யார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தன்னை வளர்த்து நிறுவ
னத்தை வளர்ப்பவர்
தன்னை அழித்து நிறுவ
னத்தை வளர்ப்பவர்
தன்னை வளர்த்து நிறு
வத்தை அழிப்பவர் என
மேலாளர்களும், தாளாளர்
களும் மூவகைப்படுவர்.
- வெற்றியாளர்.

# புதன் பொய்கை

A

உதயன் 16 ஜூலை 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு



# இயற்கையும் கடவுளும்

ராஜராஜன்

கடவுள் எங்கும் நிறைந்து காணப்படுவார் எனக் கூறுபவர்கள் ஆன்மிகவாதிகள். இதெல்லாம் வீணான பேச்சு, கடவுள் என்று எதுவுமே கிடையாது என்று மறுத்துக் கூறுபவர்கள் நாத்திகவாதிகள். ஆக இந்த இரு பிரிவினரதும் சர்ச்சைக்குள் சிக்கித் தவிப்பவர் கடவுள்தான்.

உலகம் பூராவும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கடவுளை நம்புகின்றவர்கள் அதிகளவில் உள்ளமை தெரியவரும். வெவ்வேறு மதப் பிரிவுகளில் இவர்கள் உள்ளடக்கப்பட்டாலும் இவர்களின் நோக்கம் ஒன்றாகவே காணப்படுகின்றது.

எம்மை மீறிய இயற்கையின் சக்தியொன்று இந்த உலகை இயக்குகின்றது. அதனையே கடவுள் என்ற பெயரால் மனிதர்கள் வணங்குகின்றனர் எனக் கற்ற அறிஞர்கள் சிலர் கூறியுள்ளனர். இந்தக் கருத்தை ஏற்பாரும், மறுப்பாரும் இல்லாமல் இல்லை. ஆனால் எமக்கும் மேலே ஒரு சக்தி உள்ளதென்பதை ஏனோ எம்மால் மறுக்க முடியவில்லை.

ஆனால் கடவுளை நாடிச் செல்கின்றோம் எனக் கூறியவாறு மதங்களை உருவாக்கி வைத்துக்கொண்டு மனிதர்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதுதான் கடுமையான வேதனையை ஏற்படுத்துகின்றது. மதம் என்பது மனிதர்களைப் பண்படுத்த வேண்டுமேயொழிய பாழ்படுத்தக் கூடாது. சமீப காலமாக மத வெறி பிடித்தவர்களின் செயல்களால் உலகம் அமைதியிழந்து வருகின்றது. வெவ்வேறு மதப் பிரிவுகள், ஒரே மதத்துக்குள் வேறுபட்ட பிரிவுகள் என மதத்தின் பெயரால் இடம்பெறும் மோதல்களும், முரண்பாடுகளும் இன்று உலகை ஆட்டிப் படைக்கின்றன. இந்து மதத்தில் சைவம், வைஷ்ணவம் என இரு முக்கிய பிரிவுகள் காணப்படுகின்றன. ஆனால் தற்போது இவற்றுள் அதிக வேறுபாடுகளைக் காண முடியவில்லை. கிறிஸ்தவ மதத்தில் பல கிளைகள் உருவாகியுள்ளன. இவற்றின் வழிபாட்டு முறைகளிலும், அவற்றைப் பின்பற்றுபவர்களின் நடைமுறை வழக்கங்களிலும் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. முஸ்லிம்களும் ஷியா, சன்னி எனப் பிளவுபட்டிருக்கிறார்கள். இவர்கள் ஒருவரையொருவர் மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கொள்கின்றமை அடிக்கடி இடம் பெற்று வருகின்றது. பௌத்த மதத்திலும் பிரிவுகள் உள்ளமை தெரிய வருகின்றது. இந்து மதத்தையும் இஸ்லாத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது சீக்கிய மதம். இதில் அவ்வளவு வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் காலப்போக்கில் இவை ஏற்படுத்தப்படலாம். இவை தவிர்ந்த வேறு பல மதப் பிரிவுகளும் உள்ளன.

இத்தனைக்கும் மத்தியில் கடவுள் இல்லையென அடித்துக் கூறுபவர்களும் இல்லாமல் இல்லை. இந்தியாவின் தமிழ்நாட்டில் திராவிடர் கழகத்தின் ஸ்தாபகரான தந்தை பெரியார் கடவுளை நம்புவது மூடக் கொள்கையெனப் பரப்புரையில் ஈடுபட்டார். இதற்குப் பகுத்தறிவுச் சிந்தனை எனவும் பெயர் சூட்டப்பட்டது. மதவாதத்தை முற்றாக நிராகரித்த அவர் மதத்தின் பெயரால் நடத்தப்படும் கிரியைகள் யாவும் ஆரியர்களால் உருவாக்கப்பட்டன எனவும், இவை திராவிடர்களுக்குப் பொருந்தாது எனவும் கூறி வந்தார். மதச் சடங்குகள் இல்லாத சுயமரியாதைத் திருமணங்கள் இவரால் ஏற்படுத்தப்பட்டன. இவரது கருத்துக்களால் கவரப்பட்ட ஏராளமான இளைஞர்கள், பெரியாரின் பின்னால் அணி திரண்டனர். இவருடன் கூட இருந்து கருத்து வேற்றுமை காரணமாக தி.மு.க.என்னும் கட்சியை அறிஞர் அண்ணாத்துரை உருவாக்கியதும் பின்னாளில் அந்தக் கட்சி தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் அளவுக்குப் பலம் பெற்றதும் பழைய வரலாறுகள்.

இன்றும் கூட திராவிட இயக்கங்களால் நாத்திகவாதம் பேசப்பட்டாலும் அதன் முன்னைய வீச்சு இப்போது இல்லை என்றுதான் கூற வேண்டும். துன்பம் வரும்போது சாதாரண மக்கள் தொடக்கம் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் வரை கடவுளை நாடிச் செல்லும் நிலையில் நாத்திகவாதம் பேசிய பல அரசியல்வாதிகள் கடவுளிடம் சரணம் அடைந்ததும் உண்டு. இது எந்தச் சக்தியாலும் கடவுள் நம்பிக்கையைச் சிதைக்க முடியாது என்பதைக் கட்டியம் கூறி நிற்கின்றது. ஒரு சிலர் தம்மை மற்றவர்கள் உயர்வாக எண்ண வேண்டும் என்பதற்காகவும் நாத்திகவாதிகளாக நடிக்கின்றனர். ஆனால் இவர்களது வீடுகளில் சென்று பார்த்தால் பக்தி மணம் கமழ்ந்து கொண்டிருக்கும்.

கடவுளை அணுகுவதற்கு மதத்தை ஒரு மார்க்கமெனக் கூறப்படுவதை ஏற்கவே முடியாது. ஏனென்றால் கண்ணப்ப நாயனார் போன்றவர்கள் எந்த மதத்தின் உதவியுமின்றி கடவுளின் அருளைப் பெற்றுக் கொண்டனர். கடவுள் மீதான மூட நம்பிக்கைகள், தவறான மதக் கிரியைகள், சம்பிரதாயங்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டியவை. ஆனால் ஒரே யடியாகக் கடவுள் இல்லை என்பதைத் தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் மனிதர்கள் மனிதர்களுக்குப் பயப்படாது விட்டாலும் ஏனோ கடவுள் என்றதும் ஓரளவு அடங்கி விடுகிறார்கள். தவறு செய்பவர்கள் கூட கடவுளே என்னைக் காப்பாற்றிவிடும் என்று கூறுவதும் உண்டு. காலாதிகாலமாக கடவுள் நம்பிக்கை இருந்து வருகின்றது. ஆனால் அந்த நம்பிக்கையில்தான் வேறுபாடுகள் காணப்பட்டன. சிலர் கல்லையும், வேறு சிலர் மரத்தையும், ஒரு சிலர் நெருப்பு, ஆகாயம், நீர், காற்று ஆகியவற்றையும் வணங்கி வந்துள்ளனர். மனிதனின் நாகரிகம் வளர வளர வழிபடும் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

ஆகவே எவர்தான் என்ன கூறினாலும் கடவுள் நம்பிக்கை என்பது ஒருபோதுமே அழிந்துவிடப் போவதில்லை. அதிலும் இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் நிலையில் கடவுள் தொடர்பான எண்ணம் மனிதர்களிடத்தில் எழுந்த வண்ணமே இருக்கும். ஆன்மிகமும், நாத்திகமும் என்னதான் முட்டி மோதிக் கொண்டாலும் இதில் சிக்குண்டு அழிந்துவிடக் கூடியதல்ல கடவுள் நம்பிக்கை. இயற்கை இந்த உலகை ஆண்டு கொண்டிருக்கும்வரை கடவுளும் இருப்பார் கடவுள் நம்பிக்கையும் நிலைத்து நிற்கும்.



# எதற்கு எடுத்தாலும் பயம், பயம், பயம்....



பயம் என்ற அனுபவம் எமக்குப் புதிதான ஒன்றல்ல. ஆனால் அதென்ன? அது எங்கிருந்து வருகிறது? எங்கு தோன்றுகிறது? அதன் தன்மை என்ன? அதன் விளைவு என்ன? அதைத் தவிர்க்க என்ன வழி? இப்படி நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

இதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமா?

உங்களைக் கேட்டால் நீங்கள் சொல்வீர்கள் பயம் என்பது ஒரு நினைப்பு (Feeling) என்று. அதன் உற்பத்தி இடம் ஏது?

சகல எண்ணங்களும் மனதில் தோன்றுகின்றன. காரணம் மனம் என்பதே ஒரு இடைவிடாத எண்ணங்களின் சேர்க்கை. அது எம்முள் எழும் ஒரு அவநம்பிக்கையின் (Insecurity feeling) பிரதிபலன் (Reflection).

ஒரு நாய் குரைத்துக்கொண்டு எம்மை நோக்கி ஓடி வருகிறது. அதைக் கண்டதும் நாம் அது எம்மைக் கடிக்குமோ என்ற நினைப்பில் (பயத்தில்) எம்மிடத்தில் ஒரு அவநம்பிக்கை பிறக்கிறது. எமது தைரியம் நம்மை விட்டு விலகுகிறது. நாம் ஓடத் தொடங்குகிறோம்.

நாயும் மிக வேகவேகமாக எங்களின் பின்னால் வருகிறது. அதன் விளைவு?

> பொய் நினைப்பு, அவநம்பிக்கை, உண்மை உணராத நிலை இவைகளே எமது பயத்தின் அடித்தளம் (Foundation). எந்த நிலையிலும் தைரியத்தைக் (Courage) கைவிடக் கூடாது.

எமது தேகம் நடுங்குகிறது. எம்முள் ஒரு தரம் சூடு பரவுகிறது. எமக்கு வியர்க்கிறது. எமது நாடி வேகமாகத் துடிக்கிறது. மூச்சு வாங்கு கிறது. கடைசியில் நாம் செயலற்றுப் போகின்றோம். ஓட முடியாமல் நின்று விடுகின்றோம். இதைப் பார்த்த நாய் தன்னைக் கல்லால் அடிப்பார்களோ என்று பயந்து பின் நோக்கி ஓடுகிறது.

அப்போது எமக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறது. எமது தேகத் துடிப்பு குறைகிறது. சரியாக மூச்சுவிட முடிகிறது. பயம் அகலுகிறது.

இப்போது நாம் உணர்வது என்ன? நாய் நம்மைக் கடிக்குமோ என்ற தவறான எண்ணம் எம்மைப் பயத்தில் ஆழ்த்தியது. அது திரும்பிப் போனதும் எமக்கு உண்மை விளங்குகிறது.

இறப்புக் குறித்து எல்லோருக்கும் பயம் வருவது சகஜம். அதற்குக் காரணம் இறப்பு என்பது எமது உலக அனுபவங்களின் முடிவு. எம்மால் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடிவதில்லை. காரணம், நாம் உலக வாழ்க்கையே நிஜம் என்ற தவறான கருத்தில் இருக்கிறோம்

உலக வாழ்க்கை தற்காலிகம், அது ஒரு மாயை, அதற்கு முடிவு உண்டு என்ற எண்ணம் எமக்கில்லை. கனவில் (Dream) நாம் இறப்பதாகக் காண்கிறோம். அப்போது எமக்குக் கனவிலேயே பயம்.

விழிப்பு வந்து பார்த்தால் எமது உடல் ஆடு கிறது, வியர்க்கிறது, எமது நெஞ்சு பதைக்கிறது. பிறகு அது ஒருகனவே என்ற உண்மை புரிந்த பிறகு நாம் சமநிலைக்கு வருகிறோம்.

கனவில் வரும் நினைப்புகள் பொய்யே என்ற உண்மை நாம் உணர்ந்தபொழுது புரிகிறது. கனவில் புரிவதில்லை. அதற்குக் காரணம், அப்போது நாம் ஒரு பொய் வாழ்க்கையில் இருந்தோம்.

விழித்திருப்பது நிஜ வாழ்க்கை என்றும் கனவு பொய் வாழ்க்கையென்றும் தெரிகிறது. உங்களுக்குத் பரீட்சைக் காலத்தில் படிக்கும் போது சித்தியடைவோமா என்ற பயம் எழுகிறது.

ஏன்? நீங்கள் நன்றாகப் படிக்கவில்லையேல் உங்கள் மேலே உங்களுக்கு சுயநம்பிக்கை (Self Confidence) இல்லாமல் போகிறது. அதனால், இந்தப் பயம் உங்களைத் தாக்குகிறது. நீங்கள் நன்றாகப் படித்து சுயநம்பிக்கையுடன் பரீட்சை எழுதினால் நிச்சயம் சித்தியடைவீர்கள்.

பொய் நினைப்பு, அவநம்பிக்கை, உண்மை உணராத நிலை இவைகளே எமது பயத்தின் அடித்தளம் (Foundation). எந்த நிலையிலும் தைரியத்தைக் (Courage) கைவிடக்கூடாது.

எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண் டும் (Positive thinking). கெட்ட நினைப்பை (Negative thinking) அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் எமக்கு எம்மீது சுய நம்பிக்கை (Self Confidence) எழும். அப்பொழுது பயம் நம்மைத் தாக்காது.

சுருங்கச் சொன்னால் பயம் என்பது மனதில் எழும் ஒரு கெட்ட எண்ணமே. அதன் அடித்தளம் (Base) சுயநம்பிக்கை இல்லாமலிருப்பது (Loss of Self Confidence), கெட்ட நினைப்புகள் (Negative Thinking) நம்மைத் தாக்குவது, உண்மையை உணராத நிலையால் தான்.

பயம் எம்மைத் தாக்கினால் உண்மை எது? பொய் எது? என்ற தரம் பிரித்துப் பார்க்கும் சக்தியை இழக்கிறோம். அது எமது உடல், மனம், புத்தி இவைகளைப் பாதிக்கிறது.

நாம் இந்த மூன்று நிலையிலும் செயலிழந்து



போகிறோம். இதைத் தவிர்க்க, எந்தக் காரியமானாலும் அதைச் சீர்தூக்கிப் பார்த்து, அதன் உண்மை நிலையை உணர்ந்து, தைரியமாக வருவதை எதிர்கொள்ள எம்மைத் தயார் செய்து, செய்யும் காரியத்தில் முழு மனதைச் செலுத்தி, விளைவு நன்றாகவே அமையும் என்ற சுய நம்பிக்கையுடன் (Self Confidence) சரிவர அந்தக் காரியத்தில் ஈடுபடுவோமானால், வரும் பயன் நல்லதாகவே நிகழும். எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உறுதியும் இருந்தால் பயம் எம்மை நெருங்காது.

# உங்களுக்கு உயர்குருதி அமுக்கம் (Blood pressure) இருக்கிறதா?



உங்களுக்கு உயர்குருதி அமுக்கம் இருக்கிறதா? மிகக் கவனமாக இருக்க வேண்டும். பதற்றம் அடையக்கூடாது. நேரம் தவறாமல் மாத்திரை சாப்பிட வேண்டும் என்றெல்லாம் பலரும் அறிவுரை கூறுவார்கள்.

முதலில் உயர்குருதி அமுக்கம் என்றால் என்ன? ஏன் வந்தது? என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.

இதற்கு மருத்துவம் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் உடலை நன்கு அறிந்தவர் நீங்கள்தான்.

இரத்த அழுத்தம் என்றால் என்ன?

இதயம் எமது உடலில் இருக்கும் இரத்தத்தை பம்ப் செய்துதான் மற்றைய உடல் உறுப்புகளுக்கு அனுப்புகிறது. அப்போது இதயம் சுருங்கி விரிவதைத்தான் இரத்த அழுத்தம் என்கிறோம். இதயத் தசைகள் சுருங்கும்போது அழுத்தம் கூடுதலாக இருக்கும்.

ஒரு மனிதனுக்கு 120/80 என்ற மில்லி மீற்றர் பாதரச அளவு இருந்தால் அது சாதாரண நிலை.

**உயர் இரத்த அழுத்தம் என்பது எது?**

120/80 என்ற நிலையைத் தாண்டி 139/89 வரை கூடப் போகலாம்.

அதை உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு முந்தைய நிலை என்பர். இந்த எல்லையையும் தாண்டி, அதாவது 140/90 தாண்டி விட்டால் அதுதான் உயர் இரத்த அழுத்தம்.

இதனை உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாக வேண்டும். இல்லாவிட்டால், இதய நோய், கிட்னி ஃபெயிலியர், நீரிழிவு நோய், கண், மூளை பாதிப்பு என்று சகல நோய்களுக்கும் வழிவகுத்து விடும்.

**உயர்குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிகள்**

**உப்பு குறைப்பு:**

உப்புத்தான் உயர்குருதி அமுக்கத்தின் முதல் எதிரி. உப்பு அதிகம் உள்ள எந்தப் பொருளையும் உண்பதைத் தவிருங்கள்.

**இடுப்பின் அளவு:**

இடுப்பின் சுற்றளவை அடிக்கடி அளவிட வேண்டும். அளவுக்கு அதிகமான எடையை, சதையை இடுப்பில் வைத்திருந்தால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். சுருக்கமாக தொப்பை பேரடாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

**உடல் எடை:**

தொப்பை மட்டுமல்ல, உடல் எடை கூடினாலும் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உயர்குருதி அமுக்கம் உள்ளவர்கள் 50 சதவீதம் பேர் அளவுக்கு மீறிய உடல் எடை உள்ளவர்கள். அதனால் உடல் எடையில் கவனம் வேண்டும்.



**மன அழுத்தம்:**

கவலை, பதற்றம், பயம், மன அழுத்தம், மன இறுக்கம் இருந்தால் கண்டிப்பாக உயர் குருதி அமுக்கம் அதிகரிக்கும். யோகா, தியானம், மூச்சு உள் வாங்கி வெளியிடுதல் போன்ற பயிற்சியின் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்கப் பார்க்க வேண்டும்.

**புகை பிடித்தல் கூடாது:**

புகைப் பிடிப்பது உயர்குருதி அமுக்கத்தின் இன்னொரு பெரிய எதிரி. ஒரு சிகரெட் புகைத்தாலே 10 மி.மீ. வரை இரத்த அழுத்தம் உயரும்.

**மது:**

மதுவால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. ஒருநாளைக்கு ஒரு பெக் மட்டும் சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் கணிசமான அளவு குறை கிறது என்கிறார்கள். ஆனால் அதுவே அளவை மீறினால் உயிருக்கே ஆபத்துத்தான்.

**உடற்பயிற்சி**

அதிகாலை நடைப்பயிற்சி (45 நிமிடம் முதல் 60 நிமிடம்வரை), சிறிது உடற்பயிற்சி செய்துவர வேண்டும். யோகாசனம் செய்வது மிகவும் சிறந்தது. இது மன அழுத்தத்தைக் குறைக்கும் தன்மை கொண்டது.

நாள்தோறும் உடற்பயிற்சி செய்தால் சுமார் 10 மி.மீ. அளவு உயர் இரத்த அழுத்தம் குறையும் என்று கண்டுபிடித்துள்ளனர்.


**நடைப்பயிற்சி:**

மூச்சு இறைக்க இறைக்க நடக்கக் கூடாது. நடக்கும் போது நடையில் மட்டும் தான் கவனம் வைக்க வேண்டும். நடக்கும் பொழுது பாதம் முழுவதும் ஒரே சீராக அழுத்தப்பட வேண்டும். காலை வெயிலுக்கு முன்பு நடப்பது நல்லது.

> நாள்தோறும் உடற்பயிற்சி செய்தால் சுமார் 10 மி.மீ. அளவு உயர் இரத்த அழுத்தம் குறையும் என்று கண்டு பிடித்துள்ளனர்.



# ஆவிகளின் சரணாலயம்



உலகில் என்னதான் விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சித் துறைகள் வளர்ந்திருந்தாலும் சில விடயங்கள் விடை கிடைக்காத மர்மங்களாய் நீடித்துக் கொண்டே தான் இருக்கின்றன. அவைகளுக்கு விஞ்ஞானத்தாலும் பதில் கூற முடியாத நிலையில் உள்ளது. அவ்வாறு விடை காணப்படாத வினா ஒன்றுதான் பேய்கள்.

குறிப்பாக உலகின் 5 இடங்களில் திகிலூட்டும் பேய்களின் நடமாட்டங்கள் அதிகமாய் நிலைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றை இப்போது நாம் காண்போம்.

**பாழடைந்த மருத்துவமனையில் ஆவிகள்**

ஆஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா என்னும் பகுதியில் மேடே(Mayday) என்ற குன்று உள்ளது. இங்கு சுமார் 130 வருடங்கள் பழமைவாய்ந்த மருத்துவமனை அமைந்துள்ளது. முன்பு 1200 பேர் இருந்த இந்த இடத்தில் தற்போது யாரும் இல்லை என்றும், இங்கிருந்தவர்கள் மடிந்து ஆவிகளாய் உலாவுகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

**திரையரங்கில் திரியும் பேய்**

ஆஸ்திரேலியாவில் உள்ள பிரின்செஸ் என்ற திரையரங்கில் உலகப் புகழ் பெற்ற பெரிடிசி என்ற இத்தாலிய பாடகர் கடந்த 1888 ஆம் ஆண்டு தனது இசைக் கச்சேரியை முடிக்கும் வேளையில் மாரடைப்பு ஏற்பட்டுப் பரிதாபமாக உயிரிழந்தார்.

இவரது ஆசை நிறைவேறாமல் இறந்ததால் அவரது ஆன்மா திரையரங்கையே சுற்றிவருவதாக கூறப்படுகிறது.

**காதல் தோல்வியில் பேயான மந்திரவாதி**

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் ஆழ்வார் மாவட்டத்தில் உள்ள பங்கார் கோட்டையில் கடந்த 1573 ஆம் ஆண்டு ராணி ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் மீது காதல் கொண்ட மந்திரவாதி ஒருவர், ராணி தனது காதலை ஏற்காததால், அந்தப் பகுதியே அழிய வேண்டும் என்ற சபதத்துடன், தானும் உயிரை மாய்த்துக் கொண்டாராம். இன்றும் இந்தக் கோட்டையில் அழும் ஓசைகள் கேட்பதாகக் கூறப்படுகிறது.

**அரண்மனையில் அட்டகாசம் செய்யும் பேய்கள்**

ஜப்பானில் உள்ள பிஜி மாகாணத்தில் உள்ள (Aokigahara) ஒகிகஹரா என்ற அரண்மனையைக் காட்டுப் பகுதி சூழ்ந்துள்ளது.

அங்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் சாமானிய மக்கள் தங்கள் வாழ்வின் அடைந்த துக்கம் தாங்க முடியாமல் காட்டில் உள்ள மரங்களில் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டனர்.

அந்த பேய்களின் ஆதிக்கம் அங்குள்ள அரண்மனையில் மிகுதியாய் இருப்பதால், அந்தப்பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகள் பொலிஸாரின் அனுமதியைப் பெற வேண்டும்.

**கோட்டையைக் கட்டியாளும் பெண் பேய்**

ரோமானியாவில் கேம்பினா என்ற பகுதியில் மன்னர் ஆட்சி காலத்தின் போது ஹாஸ்டு என்ற குறுநில மன்னர் தனது மகள் ஜூலியா(19) இறந்ததால் அவருக்காகக் கோட்டை ஒன்றைக் கட்டி அலங்கரித்து அதிலே தன் வாழ்வையும் கழித்துள்ளார். இங்கு இன்றும் இரவு நேரங்களில் வெள்ளைக் கவுனுடன் ஜூலியாவின் ஆவி உலாவி வருவதாகவும், அப்பெண் பியானோ வாசிக்கும் சத்தம் பெரிதாக ஒலிப்பதாகவும் கூறப்படுகிறது.

பேய்களை நம்புவது என்பது மூடத்தனம் என அர்த்தமாகாது.

அதேவேளை பேய்களைத் துச்சமாக எண்ணுவது அபாயத்துக்கு பல விதித்தில் வழிவகுக்கும் என்பதற்கு பல சம்பவங்கள் இன்றும் சான்றுகளாய் விளங்குகின்றன.

# புலிகளைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா?

லிகளின் காதுகளின் பின் புறம் ஜஸ்பாட்ஸ் இருக்கும். காதுகள் கறுப்பாக இருக்கும். அவற்றில் வெள்ளையாக இந்த ஜஸ்பாட்ஸ் இருக்கும். கோபம் வந்தால் காதுகள் உடலோடு ஒட்டிக் கொள்ளும். அப்போது இந்த ஜஸ்பாட்ஸ் தெரிவதால் புலிகள் கோபமாக இருப்பதை அறியலாம்.

புலிகளின் ஆயுள்காலம் சுமார் 15 - 25 வருடங்கள் வரையானதாகும். ஒரு புலியின் உடலில் உள்ள கோடுகள் இன்னொரு புலியின் உடலில் இருக்கா. புலிகள் தனியாக மட்டுமே வேட்டையாடும். புலிகளின் கர்ப்பகாலம் 103 நாள்கள். புலி, 2-6 புலிக்குட்டிகள் வரை ஒரு பிரசவத்தில் ஈனும்.

ஒரு தடவைக்கு சுமார் 18 கிலோ எடை அளவு மாமிசத்தைப் புலிகள் உண்ணும். பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த மிகப்பெரிய உறுப்பினர்கள் புலிகள். ஆசியக் காட்டுப் பகுதிகளில் காணப்படும் இவற்றில் கேஸ்பியன், பாலி, ஜாவா வகைப்புலிகள் அழிந்து விட்டன.

பெரும்பாலும் ஓரேஞ், மஞ்சள் சேர்ந்த நிறத்தில் கறுப்புக் கோடுகளுடன் புலிகள் காணப்படும். அவை வாழும் இடத்தைப் பொறுத்து சற்று அதிகமான நிறத்திலோ அல்லது குறைவான நிறத்திலோ இருக்கும். வெள்ளைப் புலிகளுக்குக் கோடுகள் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.



சிங்கங்களில் காணப்படுவதுபோல வெள்ளைப் புலிகள் குறைபாடுகளுடன் பிறந்தவை அல்ல. புலிகளின் கண்களில் டபீடம் லூசிடம்மால் என்ற ஸ்பெஷல் லேயர் உள்ளது. இதனால் புலிகளால் மனிதனை விட ஆறு மடங்கு நன்றாக பார்க்க முடியும்.

சுமார் 10-30 மைல்கள் வரையுள்ள பகுதியைத் தங்கள் எல்லையாகக் கொள்ளும் புலிகள், மற்றைய புலிகள் தங்கள் எல்லைக்குள் வந்தால் அவற்றுடன் சண்டையிடும். ஆண் புலியுடன் சேர்ந்து வாழ்ந்த காலத்துக்குப் பின்னரும் அதே ஆண் புலி தனது எல்லைக்குள் வந்தால் கூட அது தனது குட்டிகளைக் கொன்றுவிடும் என்பதால் அவற்றுடன் பெண் புலி சண்டையிடும். புலிக்குத் தண்ணீர் என்றால் மிகப் பிரியம். நீர் நிலைகளுக்கு அருகில் தண்ணீரைக் குடித்துக் கொண்டு காத்திருக்கும் புலிகள் அருகில் வரும் எந்த இரையையும் நீருக்குள் விழ வைத்து எளிதாகப் பிடித்து விடும்.

முதலைகள், கரடிகள், நரிகள், ஓநாய்கள் ஏன் சொந்தத் தந்தை கூட புலிக் குட்டிகளுக்கு எதிரிதான். புலிகளின் காதுகளின் பின் புறம் ஜஸ்பாட்ஸ் இருக்கும். காதுகள் கறுப்பாக இருக்கும். அவற்றில் வெள்ளையாக இந்த ஜஸ்பாட்ஸ் இருக்கும். கோபம் வந்தால் காதுகள் உடலோடு ஒட்டிக் கொள்ளும். அப்போது இந்த ஜஸ்பாட்ஸ் தெரிவதால் புலிகள் கோபமாக இருப்பதை அறியலாம். புலிகள் பெரும்பாலும் மனிதனை உண்பதைத் தவிர்த்து விடும். ஏனெனில் மனித உடலில் போதிய மாமிசம் இருக்காது. வயதாகி, பற்கள் விழுந்து அல்லது காயப் பட்டு, வேட்டையாட முடியாமல் சோர்ந்துபோன புலிகள் மட்டுமே மனித மாமிசம் உண்ணும்.

சிறுத்தைகளின் உடலில் இருக்கும் புள்ளிகளைப் போலத் தான் புலிகளுக்கும் இருக்கும் என்றும் அவை விரிவடைந்து கோடுகளாகி விட்டன என்றும் விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இரையைப் பிடிக்கப் பதுங்கும்போது புல்லின் நிழல் போல் இருப்பதால் மற்றைய மிருகங்களால் எளிதில் இதைக் கண்டுபிடிக்க முடியாது. புலியின் உடலில் 100 இற்கும் மேற்பட்ட வரிகள் இருக்கும் புலிகளால் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் ஓட முடியும். புலிகள் இரையைத் துரத்தும்போது 9 - 10 மீற்றர் உயரம் வரை கூடத் தாவும்.

புலிகளின் உணவு மான்கள், காட்டுப்பன்றி, ஆடு, மாடுகள், சில நேரங்களில் இளம் யானைகள், கரடி போன்றவையாகும். புலிகள் 3 - 4 நாள்களுக்கு தமது உணவை 50 - 80 கிலோ கிராம் வரை எடுத்துக்கொள்ளும்.. இது ஒரு-தடவையில் 3 - 4 குட்டிகள் வரை போடும். புலிகளின் எடை அளவு ஆண், பெண்ணுக்கு வேறுபட்டு இருக்கும். ஆண் புலிகளின் எடை 200 - 320 கிலோ கிராம் வரை இருக்கும். பெண் புலிகளின் எடை 120 - 181 கிலோ கிராம் வரை இருக்கும்.

ஆண் புலியின் நீளம் 2.06 - 3.03 மீற்றர். பெண் புலியின் நீளம் 2.03 மீற்றர் வரை இருக்கும். சில நேரங்களில் மரபணு மாறுதலால் ஒரே பிரசவத்தில் ஓரிரு குட்டிகள் வெள்ளையாகவும் இருக்கும். இதைத்தான் வெள்ளைப் புலி என்கிறோம். முப்பது அடிக்கும் அதிகமான தொலைவில் இருக்கும் இரையைக் கூட குறிவைத்து சரியாகத் தாக்கப் புலிகளால் முடியும். பெரும்பாலும் இரையின் பின் கழுத்தில் கடித்து அவற்றின் முதுகெலும்பை முறித்து அல்லது சுவாசத்தடை ஏற்படுத்தி இரையைக் கொன்று விடும்.

# மிதக்கும் தீவுகள்



தென் அமெரிக்கா கண்டத்தில் தீவுகள் மிதப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பெரு மற்றும் பொலிவியா நாடுகளின் எல்லையில் டீட்டிகாகா(Titicaca) என்ற அழகான பிரமாண்டமான ஏரி உள்ளது.

இந்த ஏரியில் 27ஆறுகள் கலக்கின்றன. கடல் மட்டத்திலிருந்து. 3.812 மீற்றர் உயரத்தில் இந்த ஏரி அமைந்துள்ளதால், மிகவும் ரம்மியமாகக் காட்சி அளிக்கிறது.

இந்த ஏரியைச் சுற்றியுள்ள மலை மற்றும் வனப் பிரதேசங்களில் ஏராளமான பழங்குடியினர் வசிக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். சிறு சிறு குழுக்களாக இயங்கி வருகின்றனர்.

ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரைப் பார்த்தாலே, பகை நெருப்பு பற்றிக் கொள்ளும். பயங்கர ஆயுதங்களுடன், இரு தரப்பினரும் மோதிக் கொள்வர். இங்கே, உயிரிழப்புகள் சர்வ சாதாரணம். அவர்களில் உரோஸ் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் டீட்டிகாகா ஏரிக்கு, மிக அருகில் வசிக்கின்றனர். இவர்களின் மொத்த எண்ணிக்கையே 400- 500 வரைதான். எதிர் தரப்பிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் பின்பற்றும் நடை முறை அலாதியானது.



ஏரியைச் சுற்றியுள்ள இடங்களில் அடர்ந்து வளரும் நாணல் செடிகள் தான் அவர்களின் தற்காப்பு கவசமாக விளங்குகிறது. இந்த நாணல்களை வெட்டி எடுத்து, உலர வைத்து, பக்குவப்படுத்தி அழகான குடில்களைச் செய்கின்றனர்.

ஒவ்வொரு பத்துக் குடில்களுக்கும் கீழும் நாணல்களாலேயே கட்டுமரம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி ஏரிகளில் மிதக்க விடுகின்றனர்.

தூரத்திலிருந்து பார்க்கும்போது ஏரிக்குள் அழகான பல குட்டித் தீவுகள் மிதந்து செல்வது போல் காட்சி அளிக்கும். எதிரிகள் வந்து விட்டால் கட்டுமரங்கள், படகுகளை எப்படி துடுப்பு போட்டு இயக்குகிறோமோ, அதேபோல் இந்த குடில்களையும் இயக்கி அங்கிருந்து தப்பித்து விடுவர்.


மேலும் நாணல் புதரிலிருந்து அயோடின் தயாரித்து அதை விற்பனை செய்கின்றனர். இதில் உள்ள பூக்களை பக்குவப்படுத்தி பானங்கள் தயாரிக்கின்றனர், மருந்துப் பொருள்களாகவும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

சமீபகாலமாக இந்த மிதக்கும் தீவுகளில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் தகடுகளும் தென்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.






# நீங்கள் எப்படித் தூங்குகிறீர்கள்?



நீங்கள் தூங்குவதை வைத்தே நீங்கள் எப்படிப்பட்ட குணங்களைக் கொண்டவர் என்பதைச் சொல்லி விடலாம்.


**தலையணை எதுவுமில்லாமல் படுத்த இடத்தில் எந்தவித சௌகரியமுமின்றி மல்லாந்து படுத்தவுடன் தூங்குபவர்கள்:** அவர்கள் உடற்கட்டுடன் இருப்பவர்கள். உடல் நலத்தைப் போற்றிக் காக்கும் ரகம். வாழ்க்கையில் என்றுமே அலுக்காது துரு துரு வென்ற துடிப்பும், ஆர்வமும் மிகுந்திருக்கும்.

**பந்துபோல் உடம்பைச் சுருட்டிக்கொண்டு தூங்குபவர்கள்:** தன்னம்பிக்கை குறைந்த மனிதர்கள். கவலையற்ற பொறுப்பற்ற தொழிலை நாடுவார்கள். இவர்களுக்கு வரும் வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி துணிச்சல் உள்ளவராக இருப்பார்.

**தலை ஒருபக்கம் திரும்ப வயிறு படுக்கையில் படும்படி குப்புறப்படுத்துக் கொண்டு தூங்குபவர்கள்:** கலகலவென்று பேசுவார்கள். அதிகமான நண்பர்கள் உண்டு. யாரும் எளிதில் ஏமாற்ற முடியாது. வேலைகளை நன்றாகச் செய்யும் திறன் பெற்றவர்கள்.

**கைகளையும், கால்களையும் அகற்றி மல்லாந்து தூங்குபவர்கள்:** பிறரை அடக்க முயல்பவர்கள். அதற்கு உதவும் பொருளை எல்லாம் தன் வசம் பெற விரும்புவர். எந்த முடிவும் சாதகமாகவே முடியும்.

**தலையணை போன்றவற்றை அணைத்துக் கொண்டு தூங்குபவர்கள்:** எல்லோரும் அன்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். ஆண்கள் மனைவி மீது அன்பாக இருப்பார்கள். பெண்களிடம் பெண்மை மிகுந்து இருக்கும்.




## கண்கள்

- ஒரு நொடியில் 40 இல் ஒரு பங்கு நேரத்தைத்தான் ஒருமுறை இமைப்பதற்குக் கண்கள் எடுத்துக் கொள்கின்றன.
- சராசரி ஆயுளுள்ள மனிதன் தன் வாழ்நாளில் 250 மில்லியன் முறை தன் கண்களை இமைக்கின்றான்.
- கண் தானம் செய்யும் போது கண்களையே அகற்றி எடுக்க மாட்டார்கள். மாறாக கார்னியா எனப்படும் பார்வைப் படலத்தைப் பிரித்து எடுத்துக் கொள்வார்கள். அதுவும் ஒருவர் இறந்து சில மணி நேரத்துக்குள் செய்வார்கள்.

சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி

## நகரங்கள்

- சைக்கிள்கள் அதிகம் உள்ள நகரம் - பீஜிங்



- வாடகைக் கார்கள் (டாக்ஸிகள்) அதிகம் உள்ள நகரம் - மெக்ஸிகோ



- கார்கள் அதிகம் உள்ள நகரம் - நியூயோர்க்



- உலகில் செலவு அதிகமாகும் நகரம் - டோக்கியோ
- அதிகூடிய மக்கள் தொகையில் முதன்மையான நகரம் - டோக்கியோ



# உழைப்பினால் உயர்ந்த சிறுவன்

சிதம்பரபுரம் என்னும் ஊரிலே ரவிவர்மன் என்ற சிறுவன் வசித்து வந்தான். அவனது தந்தை விபத்து ஒன்றில் சிக்கி உயிரிழந்ததால் அவனது தாயும் அவனும் மட்டுமே ஒரு குடிசையில் தனியாக வசித்து வந்தனர். அவனது தாய் காலை வேளைகளில் அங்குள்ள வசதியானவர்கள் சிலரின் வீடுகளில் வேலை செய்து அதில் கிடைக்கும் சிறிய தொகையைக் கொண்டு குடும்பச் செலவுகளைச் சமாளித்து வந்தாள். ஆனால் வருமானம் போதாமையால் சிலவேளைகளில் அவர்கள் இருவருக்கும் உணவு கிடைக்காமலும் போய்விடும். இதனைக் கண்ட சிறுவனான ரவிவர்மன் ஏதாவது செய்து தமது குடும்பக் கஷ்டத்தைப் போக்க நினைத்தான். இதேவேளை -





அவனது பாடசாலை நண்பனான குமார் என்ற சிறுவனின் தந்தை அந்த ஊரில் பலசரக்குக் கடையொன்றை நடத்தி வந்தார். ஒரு நாள் ரவிவர்மன் குமாரையும் அழைத்துக்கொண்டு அந்தக் கடைக்குச் சென்றான். தனது தாய் வீட்டில் பலகாரங்கள் தயாரித்து விற்பனை செய்ய விரும்புவதால் அதற்குரிய பொருள்கள் சிலவற்றைக் கடன் அடிப்படையில் வழங்குமாறும் தான் அதற்கான பணத்தை ஒழுங்காகச் செலுத்துவதாகவும் அவரிடம் தெரிவித்தான். குமாரும் தனது நண்பனுக்கு உதவுமாறு தனது தந்தையை வேண்டிக் கேட்டுக் கொண்டான். அவரும் அதற்குச் சம்மதித்தார். உடனடியாக வீட்டுக்குச் சென்ற ரவிவர்மன் தனது திட்டத்தைத் தாயாரிடம் கூறிச் சம்மதிக்க வைத்தான். தேவையான பொருள்களின் பட்டியலைத் தயாரித்துக்கொண்டு தாயாருடன் கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிக்கொண்டு இருவரும் வீடு சென்றனர். அன்று இரவு பலகாரங்கள் தயாரிப்பதற்கான ஆயத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மறுநாள் அதிகாலை வேளையில் அவர்கள் இருவரும் எழுந்து பலகாரங்கள் தயாரிக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். இதனையறிந்த ஒருசிலர் அங்கு வந்து பலகாரங்களை வாங்கிச் சென்றனர்.

பலகாரங்கள் சுவை மிகுந்ததாகவும், விலை மலிவாகவும் இருப்பதை அறிந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலரும் அங்கு வந்து பலகாரங்களை வாங்கிச் சென்றனர். இதனால் சிறிது நேரத்திலேயே பலகாரங்கள் யாவும் விற்றுத் தீர்ந்து விட்டன. அதுமட்டுமல்லாது அவனும், தாயாரும் பலகாரங்களை வயிறார உண்டனர். சில நாள்களில் பலகார வியாபாரம் அமோகமாக இடம்பெற ஆரம்பித்துவிட்டது. இலாபமும் அதிகரித்ததால் பணத் தட்டுப்பாடும் நீங்கியது. கடையில் பொருள்களை வாங்கியதற்கான பணத்தையும் ஒழுங்காகச் செலுத்துவதற்கு அவர்களால் முடிந்தது.

பின்னர் உணவகம் ஒன்றையும் நடத்தினர். காலம் வேகமாக உருண்டோடியது. ரவிவர்மன் தனது உயர் படிப்பை முடித்து தற்போது உயர்ந்த தொரு பதவியில் அமர்ந்து விட்டான். அவனுக்கு கை நிறைய வேதனம் கிடைக்கிறது. கார், பங்களா போன்ற வசதிகளும் தேடி வந்து விட்டன. தனது தாயாரை வசதியாக வாழவைக்க வேண்டுமென்ற அவனது எண்ணமும் நிறைவேறிவிட்டது.

ரவிவர்மன் போன்ற நல்ல, பொறுப்பான சிறுவர்கள் இருந்தால் ஏழைக் குடும்பங்களும் உயர்நிலைக்கு வரமுடியும் என்பதற்கு இந்தக் கதை ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும்.

சு.நிசானி, சுன்னாகம்.



## எரிமலை

உலகில் மொத்தம் 1500 எரிமலைகள் தீட்பிழம்பைக் கக்கிக் கொண்டே இருக்கின்றன. மக்மா எனப்படும் பாறைக் குழம்புகள் பூமியின் மிருதுவான பகுதிகளை உடைத்துக் கொண்டு வெடிக்கும் போது தீக்குழம்புகளை எட்டுத் திக்கும் வாரி இறைக்கும் நிகழ்வையே எரிமலை என்கிறோம். உலகிலேயே மிகப் பயங்கரமான எரிமலைகள் சுப்பர் எரிமலைகள் எனப்படுகின்றன. இவை வெடித்து பல்லாயிரம் மைல்களுக்கு தீ மழை பொழிந்து பருவ நிலை மாற்றங்களையும் உண்டாக்கும். உலகில் மிகப் பெரிய எரிமலைகள் இந்தோனேஷியாவில்தான் உள்ளன. எரிமலைகள் வளரும் தன்மையுடையவை.

1991ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் பினாடுபோ மலையில் வெடித்துச் சிதறிய எரிமலை 22 மில்லியன் தொன் வேதிப் பொருளைக் கக்கியதோடு உலகின் வெப்பநிலையை 0.5 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குறைத்து விட்டது.

எரிமலைகள் சில லட்ச வருடங்களுக்கு ஒரு முறை தான் வெடிக்குமாம். இப்படியான ஒரு எரிமலை அமெரிக்காவின் ஜெல்லோஸ்டோன் தேசிய பூங்காவில் உள்ளது. இது வெடிப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறதாம். உலகின் பனிக்கட்டி நாடு என்றழைக் கப்படும் ஐஸ்லாந்து எரிமலைகளின் மேல்தான் உட்கார்ந்து இருக்கிறதாம். வியப்பாக உள்ளது அல்லவா?

யோ. விதுஷன், தரம்-04,
விவேகானந்தா வித்தியாசாலை
மானிப்பாய்



# யானைகளிடம் இப்படியொரு திறமையா?....



ஆபிரிக்க காட்டு யானைகளுக்கு இருக்கும் அபார சக்தி ஒன்று தற்போது வெளி உலகத்துக்கு தெரியவந்துள்ளது.
மனிதர்களின் குரலை வைத்தே அவர்கள் ஆணா, பெண்ணா, வயதானவர்களா, சிறுவர்களா என்பதையும், அந்தக் குரலுக்கு சொந்தமானவர்களின் இனக்குழுமத்தையும் கூட அடையாளம் காணும் திறமை யானைகளுக்கு இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.
ஆபிரிக்க காட்டுயானைகளுக்கும் அந்தநாட்டில் இருக்கும் மாடுமேய்க்கும் மாசாய் இன மக்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நடப்பது வழமை.
மாசாய் இனமக்கள் யானைகளை வன்முறையாக அடித்து விரட்டுவார்கள் அல்லது கொல்லுவார்கள். ஆனால் அதே ஆபிரிக்காவைச் சேர்ந்த கம்பா இன மக்கள் விவசாயிகள். அவர்களுக்கும் காட்டு யானைகளுக்கும் மோதல்கள் வந்தாலும் இந்த கம்பா இன மக்கள் பெரும்பாலும் காட்டு யானைகளை கொல்லுவதில்லை.
இந்த பின்னணியில், பரிசோதனையில் இறங்கிய சசெக்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மாசாய் மற்றும் கம்பா இனங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் குரல்களை தனித்தனியாகப் பதிவு செய்தார்கள்.
"அதோ பாரு, அங்க பாரு, யானைகள் கூட்டம் ஒன்று வருது பாரு" என்று அவர்கள் சொல்லுவதை தனித்தனியாக ஒலிப்பதிவு செய்தார்கள் விஞ்ஞானிகள்.
இந்த குரல்களை பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி ஆபிரிக்க காட்டு யானைகள் இருக்கும் இடங்களில் அவற்றின் காதுகளில் விழும் விதமாக இவர்கள் ஒலிபரப்பினார்கள்.
இதில் மாசாய் இன ஆண்களின் குரல்களை கேட்டமாத்திரத்தில் இந்தக் காட்டு யானைகள் எல்லாம் விரைவாக

**மனிதர்களின் குரலை வைத்தே அவர்கள் ஆணா, பெண்ணா, வயதானவர்களா, சிறுவர்களா என்பதையும், அந்த குரலுக்குச் சொந்தமானவர்களின் இனக்குழுமத்தையும் கூட அடையாளம் காணும் திறமை யானைகளுக்கு இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.**

தத்தம் குடும்ப குழுக்களுடன் ஒன்றுகூடித் தம்மைத் தாக்க வரும் எதிரியிடம் இருந்து தங்களை தற்காத்துக் கொள்ளும் விதமான செயற்பாட்டை, சமிக்ஞைகளை வெளிப்படுத்தின.
ஆனால் கம்பா இன ஆண்களின் குரலைக் கேட்கும்போது இந்த ஆபிரிக்க யானைகள் அந்தமாதிரியான அவசரத்தையோ, அச்சத்தையோ தமது செயலில் வெளிப்படுத்தவில்லை.
அதைவிட முக்கியமாக இந்த மாசாய் இன ஆணின் குரலை விசேட ஒலிப்பதிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாசாய் இனப் பெண்ணின் குரலைப்போல மாற்றி ஒலிபரப்பினார்கள்.
ஆனால் அப்போதும்கூட அந்த யானைகள் அது மாசாய் இன ஆணின் குரல் என்று அடையாளம் கண்டுகொண்டதுடன், அதிகபட்ச அச்சத்தை வெளிக்காட்டின.
இதன்மூலம், யானைகளின் காதுகேள் திறன் என்பது மனிதர்களின் காதுகேள் திறனை விட முற்றிலும் மாறுபட்டிருப்பதாகவும், யானைகள் மனிதர்களின் குரலை புரிந்து கொள்ளும் விதமே மனிதர்களிடமிருந்து வேறுபட்டதாக இருக்கிறது என்றும் முனைவர் மொக்கொம்ப் கூறியுள்ளார்.

# பனிப் பாறைகளின் மர்மங்கள்

பனி என்றாலே ஒருவித மெல்லிய குளிர்ச்சி எமக்குள் தோன்றும். அந்த மெல்லிய பனி பிரமாண்டமான பாறையாக உயர்ந்து நிற்கும்போது மிரட்சியும் வியப்பும் கைகோர்த்துக் கொள்ளும். மேற்கத்திய நாடுகளிலும் சீனா, அண்டார்டிகா பகுதிகளிலும் பனி நிகழ்த்தும் மாயாஜாலம் உலகப்பிரசித்தம். அந்த வகையில் இதோ உலகின் மிகச் சிறந்த பனிப்பாறை அதிசயங்கள், ரசித்து வியக்க உங்களுக்காக.
ஆர்ஜன்ரீனா ஏரியின் மீது உருவாகும் பனிப்பாறையை குளிர்காலத்தில் பார்ப்பது பயங்கர அனுபவம். காரணம் அதன் பிரமாண்டம் அப்படி. இந்த ஏரியின் மீது உள்ள பனிப்பாறை 5 கிலோ மீற்றர் நீளமும் 170 மீற்றர் கனமும் சுமார் 73 மீற்றர் உயரமும் கொண்டது. இதன் மீது நடக்கலாம், ஓடலாம், டிரெக்கிங் போகலாம்! அருகில் சொகுசு கப்பலில் பயணித்த படி, இந்தப் பனிப்பாறையில் இருந்து ஒரு பகுதி உடைந்து, தனி ஐஸ் வீடுகள் போல் மிதப்பதை கண்குளிர ரசிப்பது ஒரு அலாதி அனுபவம். இந்தப் பனிப்பாறை ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அருகிலுள்ள ஆண்டெஸ் மலைத் தொடரிலி ருந்து பனி உருகி, வழிந்து வந்து இந்த ஏரியில் கலப்பதுதான் இதற்குக் காரணம். சில ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த ஏரியில், அணை கட்டியது போல் நடுவே முழுவதும் பனியாக உருமாறி, பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவை உருகி, சரிந்து விழுவது காணக்கிடைக்காத காட்சி. 2008 இல் உலகம் இந்த அதிசயத்தைக் கண்டு களித்தது. ஜிம்டேனவன் என்ற ஓவியருக்கு மணல் மற்றும் தரையில் பிரமாண்ட ஓவியங்களை வரையும் பழக்கம் உண்டு. 2010 இல் ஒரு மாறுதலுக்கு சைபீரியாவின் பைகால் ஏரிக்குச் சென்றார் அவர். அப்போது ஏரிநீர்உறைந்து கிடந்தது. இந்த



பைகால் ஏரிக்கு உலகின் மிகப் பெரிய உள்நாட்டுத் தண்ணீர் ஏரி என்ற கௌரவம் உண்டு. ஜிம்டேனவன், 23 கிலோ மீற்றர் தூரத்துக்கு படத்தில் உள்ளது போல் வட்டங்கள், வட்டத்திற்குள் ஓவியங்கள் என உருவாக் கினாராம். இது உலகின் மிக நீண்ட பனி ஓவியமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
வெந்நீர் ஊற்றுகளுக்கு பிரபல்யமான இடம் ஐஸ்லாந்து. அது மட்டுமல்ல, அந்தப்பகுதியில் காணப்படும் பிரமாண்ட பனிப் பாறைகளைக் குடைந்து, பலநூறு மீற்றர் தூரத்துக்கு வளைந்த உட் கூரைகள், வெடிப்புகள், பள்ளங்களை உருவாக்கி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறார்கள். இந்த உள் குகைகளில் சிலர் மலை ஏறுவதுபோல, ஏறி இறங்கி உற்சாகம் பெறுகிறார்கள். லாங் ஜோகுல் கிளேசியரில் இருக்கும் குகை தனித்துவமானது.
ஜப்பானில் கி.பி.110 இல் கண்டுபிடிக்கப்பட்ட பழைய வெந்நீர் ஊற்று இன்றும் பிரபல்யம் பெற்றுத் திகழ்கிறது. இதே ஜப்பானில், ஜாவோ ஆன் சென்ஸ்கை ரிசார்ட் அருகே சென்றால், பனியில் அச்சுறுத்தும் அதிசயங்களைக் காணலாம். படத்தில் அச்சுறுத்தும் பாணியில் தனித்தனியாக எழும்பி நிற்கும் பனிப்பாறைகள் உண்மையில் ஆமோர் ஃபீர் மரங்கள்தான்! குளிர்காலத்தில் இவற்றின் மீது பனி கொட்டி, இவற்றை இப்படி ஆக்கி விடுகின்றன. பல மாதங்களுக்கு இவை இப்படியே இருப்பது தான் ஆச்சரியம். உண்மையில் இது ஒரு பேய் உலவும் காடு என்றே கற்பனை செய்யலாம்.
பனிப்பாறைகள் பற்றி நாம் பொதுவாகத் தெரிந்து வைத்திருப்பது அவை வெள்ளை வெளேரென்று இருக்கும். சூரியனின் ஒளிக் கதிர்கள் அதன் மீது படும்போது ஜொலிக்கும் என்பதுதான். ஆனால் சில இடங்களில் வெள்ளைக்கு பதில்•நீலம், சாம்பல், கறுப்பு மற்றும் மஞ்சள் நிறங்களில் கூட பனியைப் பார்க்க முடியும். இந்தப் பனிப்பாறைகளின் மீது, தூரத் திலிருந்து பறந்து வரும் எரிமலை சாம்பல், அழுக்குகள், மற்றைய இடங்களிலிருந்து அடித்து வரப்படும் தூசுகள் எல்லாம் தங்கி இருக்குமாம்! இவற் றின் மீது ஐஸ் படியும்போது சூரிய கிரகணம் பட்டு அவை வழக் கமான வெள்ளைக்குப் பதிலாக சாம்பல், கறுப்பு மற்றும் மஞ்சள் கோடுகளாகத் தெரியுமாம்! அண் டார்டிகாவுக்கு ஆய்வுக் கப்பலில் சென்ற நோர்வே நாட்டு மாலுமி ஒய்வின்ட்டான் சென்ஞன், இதனை போட்டோ எடுத்து உலக்குக் காட்டி இருக்கிறார். சில பனிப் பாறைகளில் இடைவெளிகள் வழியே, நீர் சென்று கொண்டிருக்கும். இப்படி நீர் செல்லும் பாதைகள் சூரியகிரகணம் படும்போது, நீலக் கோடுகளாக ஜொலிக்கும்!



# கூட்டுக் குடும்பத்தால் வீணாகும் பெண்களின் திறமை

இன்றையகால கட்டத்தில் கூட்டுக் குடும்பம் என்பது பல பேருக்கு பெரிய சுமையாகவும் பிரச்சினையாகவும் மாறி விட்டது. முன்பெல்லாம் குடும்பம் என்றால் பெரிய கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் குடும்ப அமைப்பு மாறிக் கொண்டே வருகிறது.
பெரியளவில் மாற்றங்கள் இருக்கும்போது அது ஏன் அவ்வகை மாற்றங்களை அடைந்துள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். கூட்டுக் குடும்பத்தில் வாழ்வதில் சில ஆதாயங்கள் இருக்கின்றன. ஆனாலும் அதில் பல குறைகளும் இருக்கத் தான் செய்கின்றன. கூட்டுக் குடும்பம் என்று வந்துவிட்டால் வீட்டின் மூத்தவரே அந்தக் குடும்பத்தின் தலைவராக இருப்பார்.
அவர் வயதானவராகவும் கண்டிப்புத் தன்மையுடனும் விளங்குவார். இவ்வகை குடும்ப அமைப்பில் தான் ஆச்சாரமும், பழைமையான கலாசாரங்களும் கடைப் பிடிக்கப் படுகின்றன. இது அங்கு வாழும் பலருக்கும் எதிர் மறையான மன நிலையை உண்டாக்கி விடும்.
கூட்டு குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்று, எப்போதுமே குடும்ப உறுப்பினர்கள் தான் குடும்பத் தலைவருக்காக விட்டு கொடுத்து வாழ வேண்டியிருக்கும்.
கூட்டுக் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளில் பெரும்பாலும் பாதிப்படைவது அங்குள்ள பெண்களே.
அந்தக் குடும்ப அமைப்பில் பொதுவாக பெண்கள் எல்லாம் அடுப்பங்கரையில் அடைபட்டு கிடப்பதால் அவர்களது திறமைகள் எல்லாம் வீணாகிப் போகும்.
இப்படிபட்ட பிரச்சினைகளை அவர்கள் சந்திப்பதால் பொதுவாக கூட்டுக் குடும்பத்தில் வசிக்கும் பெண்கள் அந்தச் சூழலை விட்டு வெளியேற விரும்புவதுண்டு.
மேலும், கூட்டுக் குடும்பச் சூழலோடு ஒத்துப் போய் வாழ்வதிலும் பெண்கள் சிரமப்படுவார்கள். அதனால் உறவுகள் சார்ந்த செயற்பாடு இருந்தால் மட்டும் போதாது, சற்றுக் கவனமாகக் கையாளவும் வேண்டும். கூட்டுக்குடும்பங்களில் வாழப்போகும் பெண்களின் பலவிதமான திறமைகள் வீணடிக்கப்படுகின்றன.

# வண்ணத்துப்பூச்சிகளை துரத்திய எழுத்தாளர்



விளாதிமிர் நபகோவ், ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல நாவலாசிரியர். லோலிதா, பேல் ஃபயர் போன்ற பிரபல நாவல்களை எழுதியவர். உலகம் அதிகம் அறியாத இன்னொரு பரிணாமமும் நபகோவுக்கு உண்டு. அவர் ஒரு பூச்சியியல் நிபுணர். உலகெங்கும் பயணம் செய்து வண்ணத்துப்பூச்சிகளின் பல்வேறு வகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

ஹவாட் பல்கலைக்கழகத்தின் ஒப்பாய்வு உயிரியல் அருங்காட்சியகத்தில் செதில் இறக்கை இனப் பிரிவின் காப்பாளராக இருந்தபோது, வண்ணத்துப்பூச்சி வகையினங் களைப் பற்றி விரிவான குறிப்புகளை நபகோவ் வெளியிட்டார். பாலிமேட்டஸ் புளூஸ் என்னும் நீல வண்ணத்துப் பூச்சி வகை குறித்து ஆய்வு செய்து கொண்டிருந்தபோது சர்ச்சைக்குரிய ஒரு முடிவை வெளியிட்டார். அந்த வகை வண்ணத்துப்பூச்சிகள் ஆதியில் ஆசியாவைத் தாய்வீடாகக் கொண்டவை. ஆசியா விலிருந்து காற்றலை களின் வழியாக நகர்ந்து படிப்படியாகப் பரிணாமம் பெற்று லட்சக்கணக்கான ஆண்டுகளின் கால வெளியில் தென் அமெரிக்கக் கண்டத்துக்கு வந்தவை என்பதே அவரது முடிவு. இந்தக் கணிப்பை அவர் வெளியிட்ட ஆண்டு 1945.

அவரது காலத்தில் இருந்த தொழில்முறை செதில் இறக்கை பூச்சியியல் நிபுணர்கள் நபகோவின் இந்த முடிவுக்கு முக்கியத் துவம் தரவில்லை. ஆனால், அவரது இறப்புக்குப் பின்னர், அவருடைய விஞ்ஞான ஆய்வு முடிவுகளுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் பொலிமேட்டஸ் புளூஸ் வண்ணத்துப்பூச்சிகளின் பரிணாம வளர்ச்சி குறித்து ஒரு விஞ்ஞானிகள் குழு ஆராய்ச்சி செய்ததில், நபகோவின் ஆய்வு முடிவு முற்றிலும் சரி என்று தெரியவந்துள்ளது. இந்த விஞ்ஞானிகள் குழுவில் ஒருவரின ஹாவர்டைச் சேர்ந்த நவோமி பியர்ஸ் நபகோவின் கண்டுபிடிப்பை ஓர் அற்புதம் என்று வியக்கிறார்.

**சிறு வயது ஆர்வம்**

நபகோவுக்கு வண்ணத்துப்பூச்சிகளின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்தியவர்கள் அவரது பெற்றோர். அவரது தந்தை விளாதிமிர் டிமிட்ரிவிச் நபகோவ் அவரது அரசியல் செயற்பாடுகளுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டபோது, எட்டு வயதுச் சிறுவன் விளாதிமிர் தன் தந்தைக்கு ஒரு வண்ணத்துப் பூச்சியைத்தான் பரிசாகக் கொண்டு சென்றான். வளரிளம் பருவத்தில் வண்ணத்துப்பூச்சி வேட்டையைத் தொடங்கிய நபகோவ், தான் பிடித்த வண்ணத்துப்பூச்சி வகையின் பண்புகள் மற்றும் உடலியல் விவரங்களை எழுதிவைத்து, தான் படித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயன்றார். ரஷ்யப் புரட்சி ஏற்பட்டதால் அவரது குடும்பம் ஐரோப்பாவுக்குக் குடிபுக நேர்ந்தது.

ஐரோப்பாவில் நபகோவ் பல அருங்காட்சியகங்களுக்குச் சென்று அங்குள்ள வண்ணத்துப் பூச்சிகளின் தொகுப்பைப் பார்த்தார். அவர் எழுதிய இரண்டாவது நாவலான கிங், குயின், நேவ்'-லிருந்து கிடைத்த பணத்தில் அவரும் அவருடைய மனைவி வெராவும் பயணம் செய்து, நூற்றுக்கும் மேற்பட்ட வண்ணத்துப்பூச்சி வகைகளைச் சேகரித்தார்கள். 1940 இல் நாஜிகளின் எழுச்சியால் மீண்டும் ஐரோப்பாவிலிருந்து வெளியேறி அமெரிக்காவுக்கு நபகோவ் குடிபுக நேர்ந்தது. அமெரிக்காவில்தான் நாவலாசிரியராக நபகோவுக்குப் பெரும் புகழ் கிடைத்தது. இங்குதான் வண்ணத்துப்பூச்சி ஆராய்ச்சியில் அவர் ஆழக்கால் பதித்தார்.

**காலம் கடந்த மரியாதை**

1958 ஆம் ஆண்டு 'லோலிதா' நாவல் வழியாகப் பெரும் இலக்கிய நட்சத்திரமாக அமெரிக்காவில் நபகோவ் உருவெடுத்தார். ஆனாலும் ஹார்வர்டு அருங்காட்சியகத்தின் பொறுப்பாளராக, கடமை மிக்க விஞ்ஞானியாக அவரை அவரது சகாக்கள் கருதினாலும், அவரது கண்டுபிடிப்புகளுக்குப் பெரிய முக்கியத் துவம் கிடைக்கவேயில்லை.

நபகோவின் மரணத்துக்குப் பின்னர் பல ஆண்டுகள் கழித்து 1990 களில் கலாநிதி நவோமி பியர்ஸ் என்ற பூச்சியியல் ஆய்வாளர் நபகோவ் ஆராய்ச்சிசெய்த அதே நீல வண்ணத்துப் பூச்சி வகை குறித்து, அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் ஆராயத்தொடங்கியிருந்தார். அந்த வண்ணத்துப்பூச்சிகளின் இனப்பெருக்க உறுப்புகளை ஆராய்ந்தபோது, அவற்றின் பன்மயம் அவரை ஆச்சரியப் படுத்தியது. அதுதொடர்பான முந்தைய ஆய்வுகளைப் பார்த்தபோதுதான், நபகோவின் கட்டுரைகளை அவர் படிக்க நேர்ந்தது. பொலிமேட்டஸ் புளூஸ் வண்ணத்துப்பூச்சிகள் குறித்து நபகோவ் எழுதியிருந்த வகைப்பாடு முற்றிலும் சரியென்ற முடிவுக்கு வந்தனர் விஞ்ஞானிகள். நபகோவின் நினைவாகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சி இனங்களில் சிலவற்



றுக்கு அவரது பெயரை வைத்தனர். அவற்றில் ஒன்று நபகோவியா கஸ்குன்ஹா (Nabokovia cuzquenha).

**கண்டுபிடிப்பு நிரூபணம்**

சமீபத்தில்தான் நபகோவின் ஆராய்ச்சி முடிவுகளை, டி.என்.ஏ. வகைப்பாட்டு தொழில்நுட்பங்களின் கீழ் விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கியுள்ளனர். உதாரணத்துக்கு 1944 இல் கார்னர் புளூ என்ற வண்ணத்துப்பூச்சி வகை குறித்து நபகோவ் ஆராய்ந்தபோது அதன் வண்ணம், அவை சாப்பிட விரும்பும் தாவரங்கள் ஆகியவற்றைக் கொண்டு அது தனித்துவமான சிறப்பினம் என்ற முடிவுக்கு வந்தார்.

ஆனால், அவரது சக விஞ்ஞானிகள் அவற்றின் மரபணுக்களை அந்தக் காலகட்டத்தில் ஆராய்ந்து மெலிசா புளூ வகையின் ஒரு துணை வகை அது என்றே முடிவுசெய்திருந்தனர். ஆனால், சமீபத்தில் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானி கிரிஸ் நைஸ் மற்றும் அவரது சகாக்கள் ஆராய்ந்தபோது, கார்னர் புளூஸ் மற்றும் மெலிசா புளூஸ் இரண்டு வகைகளுக்கும் சில மரபணுக்கள் மட்டுமே பொதுவாக இருப்பது தெரிய வந்தது. இதையடுத்துக் கார்னர் புளூஸ் வண்ணத்துப்பூச்சிகள் தனிச் சிறப்பினம் என்ற முடிவுக்கு வந்ததோடு, அதை முதலில் கண்டறிந்தது நபகோவ்தான் என்றும் அங்கீகரித்துள்ளனர்.

**இயற்கையின் இரகசியங்கள்**

நபகோவ் அவர் காலத்தில் வண்ணத்துப்பூச்சி வகைகள் குறித்த தனது ஆராய்ச்சிக்கு மரபணு ஆராய்ச்சியைப் பெரிதாகச் சார்ந்திருக்கவில்லை. நீல வண்ண வண்ணத்துப்பூச்சி வகைகளின் பரிணாம வளர்ச்சியை ஆராய்வதற்கு, இப்போதிருப்பதைப்போல உயர் தொழில்நுட்ப மரபணு ஆராய்ச்சிகளும் அப்போது இல்லை. வண்ணத்துப் பூச்சிகளின், குறிப்பாக ஆண் வண்ணத்துப்பூச்சிகளின் பாலுறுப்பை நுண்ணோக்கி வழியாக ஆராய்ந்ததன் வாயிலாகவே நபகோவ் பல முடிவுகளுக்கு வந்தார்.

ஒரு வண்ணத்துப்பூச்சி வகைப்பாட்டியலாளராக வண்ணத் துப்பூச்சி இறகுகளின் வண்ணங்கள் மற்றும் ஆச்சரியப்படத்தக்க வெளிப்புற வடிவங்களை மட்டும் விரும்பியவர் அல்ல நபகோவ். அந்தச் சின்னஞ்சிறு உயிர்களின் வடிவமும் செயல்பாடுகளும் அவற்றுக்கும் இயற்கைக்கும் இடையிலான நுட்பமான உறவுகளும் அவரை ஈர்த்துள்ளன. அந்த ஈர்ப்புதான் ஆயிரக் கணக்கான வண்ணத்துப்பூச்சிகளின் பின்னே கண்டம் கண்டமாக அவரை அலைய வைத்தது. வண்ணத்துப் பூச்சிகளின் உடல் பாகங்களை விதவிதமாக அவர் வரைந்திருக்கிறார். அழகிய ஓவியங்களாக வண்ணத்துப்பூச்சிகளை வரைந்து நண்பர்களுக்குப் பரிசளிப்பதில், அவருக்கு அலாதியான விருப்பம் இருந்துள்ளது.

வண்ணத்துப்பூச்சியின் உடலமைப்பிலும் வடிவத்திலும் இயற்கை பல ரகசியங்களைப் புதைத்து வைத்திருப்பதாக அவர் நம்பினார். அதைக் கண்டும் அறிந்தார். ஆனால், அவரது காலத்தில் அவரது கண்டுபிடிப்புகள் அங்கீகரிக்கப்படவில்லை.

# நிலா யாருக்குச் சொந்தம்?



ஒரு காலத்தில் நிலா பூமியின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. அதாவது சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு (ஒரு பில்லியன் என்றால் 100 கோடி என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா?).

இப்போது பிரச்சினை அதுவல்ல. நிலா எந்த நாட்டுக்குச் சொந்தம்? அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்ரோங்தானே நிலாவில் முதலில் காலை வைத்தார். அப்படியானால் நிலா அமெரிக்காவுக்குச் சொந்தமா? (சொல்லப்போனால் நிலாவில் இதுவரை அமெரிக்கர்கள் மட்டுமே கால் பதித்திருக்கிறார்கள்).

இப்போது நிலாச் சுற்றுலாவிற்காக சில தனியார் நிறுவனங்கள் பணம் வசூலிக்கின்றனர். கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்தால், நிலாவுக்கு வருங்காலத்தில் சென்று வரலாமாம். தி கோல்டன் ஸ்பைக்' என்ற நிறுவனம் 2020 இல் மனிதர்களை நிலாவுக்கு அனுப்புவதாகக் கூறி பதிவு செய்யத் தொடங்கி விட்டது.

இரண்டு பேருக்கு ஒன்றரை பில்லியன் (150 கோடி) டொலர் தொகை செலுத்த வேண்டும்!



நிலா யாருக்குச் சொந்தம் என்ற கேள்விக்குப் பதிலளிக்க அண்டார்க்டிகாவை நினைவுபடுத்திக்கொள்ளலாம். அண்டார்க்டிகா ஒரு தனி கண்டமாகக் கருதப்பட்டாலும், அது ஒரு நாடு கிடையாது! அப்படியென்றால் அது வேறு எந்த நாட்டுக்குக் காவது சொந்தமானதா? அதுவுமில்லை.

அண்டார்க்டிகாவில் எந்த அரசும் ஆட்சி அமைக்கவில்லை. அங்கு அரசியல் கட்சிகளே கிடையாது. (அங்கு நிலவும் குளிரில் மக்களே நிரந்தரமாக வசிக்க மாட்டார்கள் என்பது வேறு விடயம்.)

அண்டார்க்டிகாவைப் பிரித்துக் கொள்ள மாட்டோம், எங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள மாட்டோம்' என்ற உடன்படிக்கையில் ஐம்பது நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. (1826 இல் ரஷ்யர்கள் தான் இதை முதலில் கண்டறிந்தார்கள் என்றாலும் அவர்கள் அங்கு வசிக்கவில்லை. அந்த நூற்றாண்டின் முடிவு வரை அது ஆளில்லாத பகுதியாகவே இருந்தது.)

அறிவியல் ஆராய்ச்சிகளுக்காக மட்டுமே அண்டார்க்டிகா பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் ராணுவச் செயல்பாடுகளுக்கு அங்கு முழுவதுமாகத் தடை என்றும் மேற்படி உடன்படிக்கையில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல அண்டார்க்டிகாவில் பிளாட்டினம், தங்கம், குரோமியம் போன்ற உலோகங்களும் உண்டு. உலகப் போர்களின் அழிவுகளால் கலவரப்பட்ட நாடுகள் 2048 ஆம் ஆண்டு வரை அண்டார்க்டிகாவில் யாரும் சுரங்கம் வெட்டக் கூடாது' என்றும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன .

நிலவிலும் ஹீலியம் 3 போன்ற அரிதான இரசாயனப் பொருள்கள் தென்படுகின்றன. ஆராய்ச்சியில் மேலும் பல அரிதான கனிமங்கள் அங்கு கிடைக்கக்கூடும். எனவே நிலவைச் சொந்த மாக்கிக்கொள்ள நாடுகள் போட்டியிட்டால்?

முதலில் வெற்றிகரமாக நிலவில் கால் பதித்ததால் நிலவு அமெரிக்காவுக்குச் சொந்தமாகிவிட முடியாது. அப்படிப் பார்த்தால் விண்வெளிக்கு முதலில் தன் நாட்டவரை அனுப்பியதால், விண்வெளி சோவியத்துக்குச் சொந்தமாகி விடுமா?

இதுவரை எந்தநாடும் நிலவுக்குச் சொந்தம் கொண்டாடவில்லை. அதற்கான அதிகாரபூர்வமான முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. தவிர ஐ.நா. ஒப்பந்தப்பட்டி விண்ணில் உள்ள எந்தப் பொருளையும் எந்தக் குறிப்பிட்ட நாடும் சொந்தம் கொண்டாடவும் முடியாது.


# எதிர்காலத் தொழில்நுட்பங்கள்;

## உடலுக்குள் ஒரு மருத்துவர்

இணையவன்





எதிர்காலத்தில் மாத்திரையுடன் சேர்த்து ஒரு சின்னக் கணினியையும் விழுங்கினால் எப்படி இருக்கும்? கணினி என்றால் முழுமையான கணினி அல்ல. ஒரு சிறிய கணினி சிப். இந்த சிப் மாத்திரைக்குள் ஒளிந்திருக்கும். அதை மாத்திரையோடு விழுங்க வேண்டியதுதான்.

அதன் பின்னர் இந்த சிப் உடலுக்குள் உட்கார்ந்து கொண்டு அல்லது நீந்திக்கொண்டு விசுவாசமாகத் தனது பணியைச் செய்து கொண்டிருக்கும். எதிர்கால மருத்துவம் இப்படித் தான் இருக்கப் போகிறது என்கின்றனர் மருத்துவ விஞ்ஞானிகள். மாத்திரைக்குள் சிப்கள் பொருத்தி அனுப்பப் படுவதும், உடலுக்குள் சென்சார்களையும், குட்டி குட்டி ரோபோக்களையும் அனுப்பி வைப்பதும் பயன்பாட்டுக்கு வரலாம் என்கின்றனர். இந்த வகை சிப்களும், சென்சார் களும் மருத்துவத்தையே மாற்றி அமைக்கலாம் என்றும் ஆரூடம் சொல்கின்றனர். மருத்துவத்துறையில் இவற்றால் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படும் என்றும் சொல்கின்றனர். இன்னொரு பக்கத்திலோ உடலுக்குள் சிப்களை உலாவ விடுவது அந்த ரங்க உரிமை சார்ந்த மீறல்களையும் ஏற்படுத் தலாம் என்ற எச்சரிக்கையும் முன்வைக்கப்படு கிறது. இந்த விவாதம் இன்னும் தீவிரமாகும் வாய்ப்பும் இருக்கிறது.

மாத்திரையில் சிப்பையோ சென்சாரையோ வைத்து ஏன் உடலுக்குள் செலுத்த வேண்டும் ? என்று கேட்கலாம். நோயாளிகளை உள்ளுக்குள் இருந்து கண்காணிப்பதற்காகதான் அந்த அதி நவீன ஏற்பாடு. இந்த இடத்தில் கண்காணிப்பு என்பதை மருத்துவ நோக்கிலான கவனிப்பு என்று புரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக 'ஸ்மார்ட்பில்' என்று குறிப்பிடப்படும் இந்த வகை மருந்துகள் தொடர்பாக பல்வேறு ஆய்வில் மருந்தக நிறுவனங்களும் பல்கலைக்கழக ஆய்வகங்களும் ஈடுபட்டு வருகின்றன. இவற் றின் நோக்கமும் பயன்பாடும் வேறுபட்டவை என்றாலும், அடிப்படையில் இந்த அதி நவீன மாத் திரைகளின் வேலை என்ன என்றால், நோயாளிகள் ஒழுங் காக குறித்த நேரத்தில் மாத்திரையை எடுத்துக் கொண் டனரா? என்ற தகவலை மருத்துவருக்கும் குடும்பத்தினருக் கும் தெரிவிப்பதுதான்.

மாத்திரையும்.மறதியும் உடன்பிறவா இரட்டைச் சகோதரர் கள்தான் இல்லையா? எம்மில் பலருக்கே கூட மாத்தி ரையைச் சரியான் நேரத்தில் சாப்பிடாமல் மறந்த அனுபவம் ஏதாவது ஒரு கட்டத்தில் இருக்கலாம். மாத் திரையை ஒழுங்காகச் சாப்பிடாமல் மறப்பது சகஜமானது தான் என்றாலும், சில நேரங்களில் இது விபரீதத்தை ஏற்படுத் தலாம்.குறிப்பாக வயதான நோயாளிகள் மற்றும் தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டிய மருத்துவ நிர்ப்பந்தம் உள்ள வர்கள் விடயத்தில் இது உயிருக்கே கூட ஆபத்தாக அமையலாம். எனவே குடும்பத்தினரோ, உறவினர்களோ நோயாளிகள் சரியான நேரத்தில் மாத்திரை எடுத்துக் கொண்டனரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதற்காகக் கண்ணும் கருத்துமாக நேர்யாளிகளைக் கவனிக்க வேண்டும். பரபரப்பான உலகில் இது சவாலானதுதான். அது மட்டுமல்ல, அல்சைமர்ஸ் போன்ற வயோதி பகால மறதி நோயால் பாதிக் கப்படும் நோயாளிகள் விடயத்தில் யாரேனும் அருகாமையில் இருந்தாக வேண்டும். நோயாளி கள் மருந்துகளைச் சரியான நேரத்தில் சாப்பிட்டனரா என்று அறிந்து கொள்வதில் மருத்துவர் களுக்கும் அக்கறை உண்டு. மருந்தின் செயற்பாடு மற்றும் சிகிச்சையின் முன்னேற்றம் குறித்து அறிய இது மிகவும் அவசியம். நோயாளிகளைப் பார்க்கும் போது மருத்துவர்கள் கேட்கும் முதல் கேள்வி ஒழுங்காக மருந்தைச் சாப்பிடு கிறீர்களா? என்பதாகத்தான் இருக்கும். ஆனால் இதை உறுதி செய்து கொள்வது எப்படி?

**இந்த இடத்தில் தான் கணினி மாத்திரை வருகிறது!**

அதாவது சிப் கொண்ட மாத்திரை. சிப் என்றதும் செல்போன் சிப் அளவுக்கு இருக்குமோ என்று நினைத்து மிரள வேண் டாம். மாத்திரை என்றாலே நடுங்குபவர்கள் பிறகு சிப்பையும் சேர்த்து நினைத்தால் இரட்டிப்பாக நடுங்குவார்கள். இந்த சிப் கடுகை விடச் சின்னதாக இருக்கும். ஒரு மணல்துகள் அளவு என்று வைத்துக்கொள்ளுங்களேன். ஒரு சதுர மீ.மீ. அளவு என்கின்றனர். ஆனால் இந்த சிப்புக்குள் சென்சாரோ பற்ற ரியோ கிடையாது. இது ஒரு ஹைடெக் சுயம்பு. தானாகவே இயக்கி சுயமாக இயங்கி கொள்ளும் ஆற்றல் கொண்டது. இந்த சிப் உடலுக்குள் சென்றவுடன், வயிற்றுக்குள் இருக்கும் சில வகை அமிலங்கள் மற்றும் இரசாயனங்களுடன் கலந்ததுமே செயற்படத் தொடங்கும். தனக்குத் தேவையான ஆற்றலையும் இந்த வினையாக்கம் மூலமே பெற்றுக் கொள்ளும்.



**உடலுக்குள் இருந்து கொண்டு இந்த மாத்திரை சிப் என்ன செய்யும்?**

முதலில் இந்த சிப் தனியானது இல்லை. அதற்கு ஒரு கூட்டாளி உண்டு. மாத்திரையை எடுத்துக்கொள்ளும் நோயாளியின் உடல் மீது ஒட்டிக்கொள்ளும் பேண்டெய்டு போன்ற பட்டை தான் அதன் கூட்டாளி. சிப் இந்த கூட்டாளியைத் தொடர்பு கொண்டு தகவல் அனுப்பும். என்ன தகவல்? குறிப்பிட்ட அந்த நபர் மாத்திரையைச் சரியான நேரத்துக்கு எடுத்துக் கொண்டாகி விட்டது என்ற தகவல்தான். இந்தப் பட்டைக்கும் ஒரு கூட்டாளி உண்டு. அது தான் செயலி (ஒப்). பட்டை பெற்றுக்கொள்ளும் தகவல் செயலியின் மூலம் ஸ்மார்ட்போன் அல்லது மடிக்கணினிக்கு அனுப்பி வைக்கப்படும். அதைப் பார்த்தே மருத்துவர் அல்லது குடும்பத்தினர் நோயாளியின் நிலை பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளலாம்.

அன்புக்குரியவர்கள் மாத்திரை சாப்பிட்டார்களா? இல்லையா? என்று கவலைப்படும் நிலை இருக்காது. மருத்துவர்களும் நோயாளிகளின் உடல் முன்னேற்றம் பற்றிய தகவலைத் தங்கள் பணிச் சூழல் பாதிக்காத வகையில் தெரிந்து கொள்ள லாம்.மாத்திரை சாப்பிட்டாச்சா, இல்லையா என்று அறிய முடிவது ஆரம்ப பயன்பாடுதான். இந்த சிப்கள் மூலம் மேலும் எண்ணற்ற வகையில் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள லாம்.

ஆனால் இதை உறுதி செய்யவே மருத்துவ உலகம் அதிக அளவில் பணம் மற்றும் நேரத்தைச் செலவிட்டுக்கொண்டிருப்பதால் இதன் மூலமான பயனே குறிப்பிடத்தக்கது என்கின்றனர். பல நிறுவனங்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்தாலும், ப்ரோடியஸ் டிஜிட்டல் ஹெல்த் (Proteus Digital Health ) என்ற நிறுவனம் இதில் குறிப்பிடத்தக் கதாக இருக்கிறது. இதுதொடர்பாகத் தீவிர சோதனை மற்றும் ஆய்வில் ஈடுபட்டு வரும் இந்த நிறுவனம் அமெரிக்க மருந்துக் கட்டுப்பாடு அமைப்பிடம் இருந்து இதைப் பயன்படுத்துவதற் கான அனுமதியும் பெற்றுள்ளது. அதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்திலும் அனுமதி பெற்றுள்ளது. மாத்திரைக்குள் சென்சாரை பொருத்திப் பயன்படுத் துவது பாதுகாப்பானது என்று உறுதி செய்து கொண்ட பின்னரே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் முதல் கட்டமாக இந்த சிப்பை வெற்று மாத்திரையுடன்தான் பயன்படுத்த முடியும். அதாவது மாத்திரையுடன் சேர்த்து இந்த மாத்திரையையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் இது தகவல் அனுப்பும். அடுத்த கட்டமாக உண்மையான மருந்து கொண்ட மாத்திரையுடனேயே சென்சாரைப் பொருத்தும் முயற்சியும் ஆய்வும் நடைபெற்று வருகிறது. இத்தகைய மாத்திரைகள் வந்தால் அவை உயிர் காக்கும் அற்புதமான செயற்பாடாக இருக்கும் என்கின்றனர். ஆனால் இதற்கு எதிர்க் கருத்தும் இல்லாமல் இல்லை.

உடலுக்குள் சிப்பை அனுப்புவது விபரீதமாகலாம் என்று அந்தரங்க உரிமை ஆர்வலர்கள் சொல்கின்றனர். அதிலும் சிப்பை அகற்றும் உரிமை அல்லது ஆற்றல் இல்லாத நிலையில் இது எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று எச்சரிக் கின்றனர். ஆனால் ஒன்று, மாத்திரையில் இருக்கும் சென் சாரால் பிரச்சினை கிடையாது. அது எந்தப் பாதிப்பையும் உண்டாக்காது. இந்த சிப் பயன்படுத்தக்கூடிய விதம்தான் கேள்விகளை எழுப்ப வைக்கிறது.

நோயாளிக்கு வேறு மாத்திரை தரப்படவில்லை என்பதை எப்படி உறுதி செய்வது என்று கேட்கின்றனர். ஆய்வுக்காக சோதனை மருந்துகளைக் கொடுத்தால் என்ன செய்வது என்றும் கேட்கின்றனர். இருப்பினும் மருத்துவத்துறையினரோ இதில் எந்தத் தவறும் இல்லை என்கிறனர். கார்களில் சென்சாரை வைத்து கண்காணித்து பாதுகாப்பை உறுதி செய்யும் போது மருத்துவத்திலும் சென்சாரை பயன் படுத்துவதில் என்ன தவறு என்று கேட்கிறார் எரிக்டோபல். இவர் கலிபோர்ணி யாவில் உள்ள ஆய்வு கூட இயக்குநர். இந்த வகை சிகிச்சை பற்றி புத்தகம் எழுதியிருக்கிறார்.

பல நிறுவனங்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்தாலும், ப்ரோடியஸ் டிஜிட்டல் ஹெல்த் (Proteus Digital Health ) என்ற நிறுவனம் இதில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. இதுதொடர்பாக தீவிர சோதனை மற்றும் ஆய்வில் ஈடுபட்டு வரும் இந்நிறுவனம் அமெரிக்க மருந்துக் கட்டுப்பாடு அமைப்பிடம் இருந்து இதைப் பயன்படுத்துவதற்கான அனு மதியும் பெற்றுள்ளது. அதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்திலும் அனுமதி பெற்றுள்ளது. மாத்திரைக்குள் சென்சாரை பொருத்திப் பயன்படுத்து வது பாதுகாப்பானது என்று உறுதி செய்து கொண்ட பின்னரே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

